மஞ்சரி

விஜய - ஆனி

ஜூன், 1953

விநோபா யாத்திரை
பின்புற எஞ்சின் கார்
ராணியின் மகுடாபிஷேகம்
லாமாவின் மாடு (சிறு கதை)
பர்மா அகதி (வங்கப் புத்தகம்)

நம்பிக்கை

உண்மையான நம்பிக்கை அதிவேகமானது; சிட்டைப் போல் பறப்பது; அரசரைக் கடவுளாகவும் அற்பரை அரசராகவும் மாற்ற வல்லது.

—ஷேக்ஸ்பியர்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
ஸீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 6] விஜய-ஆனி :: :: ஜூன் 1953 [இதழ் 7

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

சிறுவர்கள் ஸினிமா ஒன்றை, ஃபிலிம் ஸொஸைட்டி ஆதரவில் டில்லியில் தொடங்கியிருக்கிறார்கள். இதைத் திறந்து வைத்தவர் மந்திரி ஸர்தார் ஸ்வரண் சிங். பெரியவர்களின் ஸினிமா சிறுவர்களுக்கு ஏற்றதல்ல என்பதற்காகத்தான், இந்த முயற்சியை ஆரம்பித்தார்களாம். இதுபற்றி, ஐ. நா. சபை ஆதரவில் ஒரு ஸர்வே நடந்ததாம். குற்றம், திருட்டு, தீய செயல் இவைகளைச் சித்திரிக்கும் படங்களால் குழந்தைகள் அதிகமாகக் கெடுவதில்லையாம். செல்வம், அதிகாரம், போகம், புகழ் இவைகளைச் சித்திரிக்கும் படங்கள் குழந்தைகளை அதிகமாகக் கெடுத்து விடுமாம். இந்த முடிவுகள் அந்த ஸர்வேயிலிருந்து ஏற்பட்டவை. ஆனால், இவை சரியென்று நமக்குத் தோன்றவில்லை. வாழ்க்கையை அழகுபட வாழ வழிகாட்டும் படங்களே நன்மை தரும். இது எப்படியாயினும், சிறுவர்களுக்கு என்று தனி ஸினிமா தயாரிப்பதால் பெரும் பயன் விளைந்து விடாது. பெரியவருக்கென்று நாம் நினைக்கும் படங்களைச் சிறுவர் பார்க்காமல் தடுக்க முடியுமா? பெரியவர் சிறுவர், ஆண் பெண் எல்லாரும் சேர்ந்த குடும்பங்களேதான் பல படங்களையும் பார்க்கின்றன. எல்லாப் படங்களின் தரமுமே உயர வேண்டும்.

* * *

சீனாவிலிருந்து கிளம்பி ஃபார்மோஸா தீவில் போய் அமர்ந்து கொண்டு ராஜ்ய பாரம் நடத்துகிறார் சியாங்-கே-ஷேக். அவருடைய சர்க்காருக்கு, ஐ. நா. சபையில் பிரதிநிதித்துவம் இருக்கிறது. கம்யூனிஸ்ட் சீன சர்க்காரே, உண்மையில் சீனாவை ஆட்சி புரிந்து வந்தும், அதற்கு இன்னும் ஐ. நா. சபையில் இடமில்லை. பல சர்க்கார்கள் இன்னும் அதை அங்கீகரிக்கவும் இல்லை. இந்த நிலையில் கம்யூனிஸ்ட் சீனாமீது மீண்டும் படை எடுக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார் சியாங்-கே-ஷேக். இதற்கு ஐக்கிய அமெரிக்காவும் பிரிட்டனும் அவருக்கு ஆதரவாக இருக்கின்றன. யார் எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ளட்டும். சியாங்கின் துருப்புகள் பர்மிய எல்லையில் வந்து உபத்திரவம் செய்யலாமா? கம்யூனிஸ்ட் சீனாமீது பாய்வதற்குப் பர்மிய எல்லைதான் படைத்தளமா? இது வீணே பர்மாவை

அபாயத்தில் சிக்க வைப்ப தில்லையா? இந்தச் சியாங் துருப் புகள் உடனே வெளியேற வேண் டும் என்று ஐ. நா. சபையில் பர்மா புகார் செய்தது. அதன் பலனுகச் சியாங் துருப்புக்களுக்கும் பர்மி யருக்கும் ரகஸ்யப் பேச்சு வார்த் தைகள் நடந்தனவாம். பலன் ஏற்படவில்லை. சியாங் துருப்புகள் உடனே வெளியேறவில்லையாஞல், ஐ. நா. சபையிலிருந்தே சியாங் சர்க்கார் வெளியேற வேண்டி வரும் என்று இப்போது ஐக்கிய அமெரிக்காவே எச்சரித்திருக்கிற தாம். சியாங் கேட்பாரா?

* * *

ஐக்கிய அமெரிக்க ஜனுதிபதி, பிரிட்டிஷ் பிரதம மந்திரி, பிரெஞ் சுப் பிரதம மந்திரி இந்த மூவரும் ஜூன் மாத மத்தியில் பெர்முடா நாட்டில் கூடிப் பேசுவதாக ஒரு செய்தி தடபுடல் படுகிறது. ஆனுல், இதற்கிடையில் பிரெஞ்சு மந்திரி சபை கவிழ்ந்துவிட்டது. அதற்காக இந்த மூன்று வல்லரசு ஆலோசனை நிற்காதாம். இந்த ஆலோசனை உலக சமாதானத்தை நிலை நாட்டவா? ஸோவியத் சர்க் காரைச் சமரசப்படுத்தவா? உலகப் போர் மூஸ்திப்பா? எது என்று தெரியவில்லை. ஐக்கிய அமெரிக்கா வின் நோக்கமும், பிரிட்டிஷ் நோக்கமும் ஒற்றுமையாயிருப்ப தாகவும் தோன்றவில்லை. ஸோவி யத் ருஷியாவுக்கு இந்த ஆலோ சனை பிடிக்கவில்லை. சந்திக்கும் மூன்று வல்லரசுகளும் ஐக்கியக் கோரிக்கைகளைத் தயாரித்து ஸோவியத்திடம் சமர்ப்பிப்பதற் கான பூர்வாங்கக் கூட்டமே இது என்று பிரிட்டிஷார் நினைக்கிறுர் களாம். அந்த நினைப்புத் தவறு என்கிறுர் அமெரிக்க ஜனுதிபதி. ஆலோசனை எப்படித்தான் நடக்கப் போகிறதோ, முடியப் போகி றதோ! அதற்கு முன் நடக்கப் போகிற பிரிட்டிஷ் ராணியின் மகுடாபிஷேக வைபவம், உலக நிலையிலேயே சிறந்த சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்ப் போமே.

நல்லது செய்தால்—

"நான் எப்போது நல்லது செய்ய முயன்றுலும், அது தீமையாய் முடிந்து விடுகிறது. என் விதி. நேற்று என் வீட் டிலே ஒரு விருந்து நடத்தினேன். விருந்தாளிகளில் ஒருவர் ஏதோ ஆபாசமான கதை சொல்லத் தொடங்கினுர். உடனே அவரை வெளியே எழுந்து போகும்படி நான் கண்டித்தேன்" என்று புலம்பினுள் ஒரு வீட்டுக்காரி.

"கொஞ்சம் கடுமையாய்த்தான் நடந்துவிட்டீர்கள். ஆனுலும், நீங்கள் செய்தது நல்ல காரியந்தான். அப்புறம் என்ன நடந்தது?" என்று கேட்டாள் சிநேகிதி.

"மீதியிருந்த விருந்தாளிகளில் பாதிப் பேர், அந்தக் கதையை முற்றும் கேட்டு முடிப்பதற்காக அவரோடு கூடவே எழுந்து போய்விட்டார்கள். அவ்வளவுதான்."

—ஏடீரியன் ஆண்டர்ஸன்

கூட்டங் கூட்டமாய் மாண்ட
வரின் சாம்பல் குவியலா!

மர்மக் குன்று

ரிச்சர்டு சின்னதம்பி

1565-ஆம் வருஷம் தலைக் கோட்டை யுத்தத்துக்குப் பிறகு முகம்மதியர்கள் விஜயநகர சாம்ராஜ்யத்தின் தலைநகரான ஹம்பியையும் அதன் சுற்றுப்புறங்களையும் சூறையாடுவதில் முனைந்தார்கள். முன் பின் பார்த்திராத அளவு சாவும் நாசமும் நேர்ந்தன. பல்லாயிரக் கணக்கான வீரர்கள் உயிரிழந்தார்கள். அவர்களுடைய சடலங்களை எப்படி அகற்றுவது என்பதே ஒரு பெரிய பிரச்னையாகிவிட்டது. பிணங்களைப் போர் போராகக் குவித்துப் பெரிய அளவில் தீயிட்டுப் பொசுக்கினார்கள். வீரர்களின் மனைவியர் பலர் உடன்கட்டை ஏறினார்கள். இதுவே பல்லாரி ஜில்லாவில் தென்படும் 15 சாம்பற் குன்றுகளும் ஏற்பட்ட வரலாறாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. நீற்றுப்போன சாம்பல் குவியலாக அந்தச் செயற்கைக் குன்றுகள் இருக்கின்றன.

மறந்துபோன அந்தப் பழைய சாம்ராஜ்யத்தின் தலைநகருக்குப் பல்லாரியிலிருந்துசெல்லும் பாதையில் குடதினி என்ற இடத்தில் இவைகளுள் மிகப் பெரிய குன்று தென்படுகிறது. இது சமாதி முட்டுப் போல் 45 அடி உயரமும் 150 கஜம் சுற்றளவும் உள்ள குன்று. பொக்கையும் புரைசலும் நிறைந்த இந்த மேட்டை இடித்தால் பொர பொரவென்று நொறுங்குகிறது. கையில் அகப்பட்ட சில துண்டுகளைப் பொறுக்கிப் பார்த்தால் வெள்ளைச் சாக்கட்டிகளைப்போல் இருக்கின்றன. இன்னும் சில துண்டுகள் கரிக் கட்டிகளைப்போல் இருக்கின்றன. எரிந்த பிராணிகளின் எலும்பைப் போல் இருக்கின்றன வேறு சில துண்டுகள். மொத்தத்தில் இது உயிர்ப் பிராணிகளை ஒரு முட்டாகக் குவித்துக் கொளுத்திய இடம் என்ற எண்ணந்தான் உண்டாகிறது.

இந்தக் கரிமேட்டை, சாம்பற் குன்று அல்லது சாம்பல் வழி என்கிறார்கள். இடும்பாசுரன் என்ற அரக்கனைப் பீமன் இங்கேதான் கொன்றானாம். அவனை எரித்த இடந்தான் இப்படிக் குன்றாக இருக்கிறதாம். இவ்விதம் உள்ளூர்க் கதை ஒன்று வழங்குகிறது. ஆனால் சண்டை ஒன்றுக்குப் பின் போர் வீரர்களைக் குவித்து எரித்த இடம் இது என்றுதான் பெரும்பாலும் சொல்லுகிறார்கள். அக்கம் பக்கத்திலுள்ள கிராமவாசிகள் இந்தக் குன்றைத் தோண்டிப் பார்க்க வருகிறார்கள். இறந்த வீரர்களோ அவர்களுடன் உடன் கட்டை ஏறிய பெண்களோ

கர்ப்பி ரைக்கு; ஆப் இந்தியா (ஆங்கிலம்; 10-5-'53), ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை.

அணிந்திருந்த ஆபரணங்கள் அப்படியே உருகித் தங்கக் கட்டியாகக் கிடைக்குமோ என்ற எண்ணத்தினுல்தான் இப்படி வருகிருர்கள்.

பழங்காலச் சரித்திரப் பொருள்கள் காணக் கிடைக்கும் இடங்களுக்கு அருகிலேயே இந்தச் சாம்பற் குன்றுகள் நிற்கின்றன. ப்ரூஸ் ஃபூட் என்பவர், இந்தக் குடதினிக் குன்றிலேயே சரித்திர காலத்துக்கு முற்பட்ட பொருள்களான உளி போன்ற கல்கருவிகள், தானியம் அரைக்கும் கற்கள் ஆகியவற்றுடன், உடைந்த மண் பாண்டங்களையும் பிராணி எலும்புகளையும் கூடக் கண்டுபிடித்திருக்கிருர். இவற்றைக் கவனிக்கும்போது இந்தச் சாம்பற் குன்றுகள் எரிமலை கக்குவது போன்ற இயற்கை உற்பாதங்களால் ஏற்பட்டவை என்று சொல்வதற்கில்லை. செங்கற் சூளை, சுண்ணும்புக் காளவாய், கொல்லன் உலை போன்றவைகளில் உருகிச் சாம்பலான சூளை மேடுகள் என்று கருதவும் இடமில்லை.

இறந்தவர்களை எரிக்கும் போது அவர்களுடைய அருமையான உடைமைகளையும் சேர்த்து எரிப்பது வழக்கம். அருமை மனைவியர் உடன்கட்டை ஏறியதையும் இறந்த வீரர்களின் அபிமானக் குதிரைகள் வெந்து சாம்பரானதையும் இந்த ஜில்லாவிலுள்ள கணக்கற்ற வீரக் கற்கள் ஞாபக மூட்டுகின்றன. லெஃப்டினண்ட் நியூபோல்டு என்பவர், 'கர்த்தரின் சந்நிதியில் சால மன் அரசன் இருபத்திரண்டாயிரம் எருதுகளையும் இருபதாயிரம் ஆடுகளையும் பலியிட்டார்' என்று பழைய கிறிஸ்துவ வேதத்திலிருப்பதை மேற்கோள் காட்டி, அதே போன்ற வழக்கம் இந்தியாவிலும் இருந்தது என்கிருர். இது சரியல்ல. மதக் காரியங்களுக்காக மிருகங்களைக் குவித்து எரித்த பலி மேடுகளாக இந்தக் குன்றுகளை நாம் மதிக்க முடியாது.

ஸூவெல் என்பவர் இந்தக் குன்றுகளில் தோண்டி எடுத்த சில எலும்புகளை இங்கிலாந்திலுள்ள நிபுணர்களின் பரிசோதனைக்காக அனுப்பினுர். அவற்றில் ஒன்று மனிதனுடைய எலும்பென்றும் இன்னும் இரண்டு மனித எலும்புகள் அல்லவென்றும் மீதி எவற்றினுடையவை என்று நிச்சயம் செய்ய முடியவில்லை என்றும் அந்தப் பரிசோதனையில் தெரியவந்தது. ஆகவே, குடதினி சாம்பர்க் குன்று மிகப் பெரிய சுடுகாட்டு மேடுதான் என்றும் மிகப் புராதன காலத்துச் சின்னங்கள் காணக் கிடைக்கும் இடத்துக்கு அருகில் உள்ள பிற சிறு குன்றுகள் நாடோடி மக்கள் வேட்டையாடிய பிராணிகளைக் கொண்டு பெரு விருந்து நடத்திய இடங்களாக இருக்கவேண்டும் என்றும் நிரூபணமாகிறது. இறந்தவர்களின் புனிதமான ஞாபகார்த்தமான இந்தக் குன்றைத் தேசியச் செல்வமாகக் கருதிப் பாதுகாக்க வேண்டும். இல்லையாளுல் புதையல் தோண்டுகிறவர்கள் வெட்டி வெட்டி இந்தச் சாம்பரைக் காற்றில் பறக்க விட்டுவிடுவார்கள்.

நல்ல சாட்சி

★

"கோர்ட் வழி நாடமாட்டேன்" என்று நீங்கள் சொல்லலாம். நீங்கள் நாடவேண்டாம். யாராவது இழுத்தால் என்ன செய்வீர்கள்? கோர்ட்டிலே எப்படிச் சாட்சி சொல்வது என்பதைத் தெரிவிக்கும் இந்த விஷயம் 'கிப்ளிங்கர் மகஸீன்' என்பதில் உள்ள ஒரு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது.

என்றோ ஒரு நாள் நீங்கள் கோர்ட்டிலே போய் நிற்கக் கூடும். கோர்ட்டு என்றாலே கிலி பிடிக்க வேண்டிய அவசியமில்லை. பழக்கமில்லாமல் புதிதாகக் கூட்டிலேறிச் சாட்சி சொல்லுவதென்றால், எவருக்குமே சிறிது பரபரப்பு ஏற்படுவது சகஜம். அந்தப் பரபரப்புக்கு இடம் கொடாமல் அடக்கிவிட்டு, நிதானமாயிருக்க முயலுங்கள்.

கோர்ட்டிலே முழு உண்மையையும் சொல்வது மகா கஷ்டம். ஆனால், பொய் சொல்வது அதைவிட அதிகக் கஷ்டம். நீங்கள் எந்தக் கட்சிக்குச் சாட்சியாகப் போகிறீர்களோ அந்தக் கட்சியின் வக்கீல் முன்னதாக உங்களை அழைத்து, ஒத்திகையாகக் கேள்விகள் கேட்பார். கோர்ட்டிலே இதே கேள்விகளைக் கேட்கும்போது, உங்களுடைய பதில்கள் எப்படி அமையவேண்டும் என்பதை அவர் சொல்லிக் கொடுப்பார். நீங்கள் சொல்வதைப் பொய் என்று நிலை நாட்டும் நோக்கத்துடன் எதிர்க் கட்சி வக்கீல் கேட்கக் கூடிய பல கேள்விகளையும் உங்கள் கட்சி வக்கீல் உங்களைக் கேட்பார்; அவைகளுக்கு இன்ன மாதிரி பதில் அளிக்க வேண்டும் என்பதையும் உங்களுக்குத் தெரிவிப்பார். பிற சாட்சிகள் சொல்லக் கூடிய விஷயத்தையும் உங்களுக்கு அறிவித்து அதனுடன் உங்கள் சாட்சியம் மாறுபடக் கூடாதென்றும் குறிப்பிடுவார்.

கோர்ட்டிலே கூண்டிலேறும் போது, ஆரம்பத்தில் உங்களுக்கு அதிகக் கஷ்டமாயிராது. முதலில் உங்கள் கட்சி வக்கீல்தான் விசாரிப்பார். அப்போது ஒன்றும் சிரமம் இல்லை. எல்லாம் உங்களுக்கு முன்னதாகவே தெரிந்த கேள்விகளாக இருக்கும்; புதிய கேள்வி ஒன்றும் இராது. ஆயினும், இடையிடையே எதிர்க் கட்சி வக்கீல் திடீர் திடீரென்று எழுந்து ஆட்சேபிக்கத் தொடங்கினால், கொஞ்சம் எரிச்சலாய்த்தான் இருக்கும். அது மாத்திரம் அல்ல; உங்களுக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லிவிடவேண்டுமென்று துடிப்பீர்கள். ஆனால், அப்படிச் சொல்ல இடம் கிடைக்காது. நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றி உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்ல நீங்கள் விரும்பலாம். ஆனால், அதை வக்கீலோ கோர்ட்

டாரோ கேட்க மாட்டார்கள். வேறு யாரோ ஒருவன் இப்படிச் சொன்னான் என்று கேள்விப் பட்டதை யெல்லாம் நீங்கள் சாட்சியமாகச் சொல்ல முடியாது. சாட்சிச் சட்டத்தின்படி இன்னும் எத்தனையோ நிர்ப்பந்தங்கள் உண்டு.

எதிர்க்கட்சி வக்கீல் குறுக்கு விசாரணை தொடங்கியதும், உங்கள் பாடு மிகவும் சிரமமாய்ப் போகும். பட்சபாதம், கெட்ட எண்ணம், அறியாமை, பொய், அசட்டுத்தனம் இந்தக் குறைகளை யெல்லாம் உங்கள்மீது சுமத்த அவர் பாடுபடுவார். தர்மசங்கடமான கேள்விகளுக்கெல்லாங்கூட மாறு பேசாமல் நீங்கள் பதில் சொல்லியாகவேண்டும். டாக்டருக்கும் நோயாளிக்குமோ, வக்கீலுக்கும் கட்சிக்காரனுக்குமோ, மனைவிக்கும் கணவனுக்குமோ உள்ள அந்தரங்கத்தை வெளிப்படுத்தக் கூடியவையும், உங்களைக் குற்றவாளியாக்கக் கூடியவையுமான பதில்களைச் சொல்ல நேரிட்டால், நீங்கள் பதில் சொல்லாதிருக்க அநுமதி கிடைக்கலாம். மற்ற எந்த வகைப் பதிலையும் நீங்கள் சொல்லியே தீரவேண்டும். உங்கள் உரிமையைப் பாதுகாக்க உங்கள் கட்சி வக்கீல் இருக்கிறார். அவருடைய ஆட்சேபங்கள் தான் உங்களை ரட்சிக்க வேண்டும்.

நீங்கள் உண்மையையே சொல்ல வேண்டும். ஆனால், அதைத் திறமையாகப் பயன் உள்ள முறையில் சொல்லவேண்டும்; கோர்ட்டு விதிகளை மீறாமல் மரியாதையாகச் சொல்லவேண்டும்.

தெளிவாக, உரத்த குரலில், நிறுத்தி நிறுத்திச் சொல்லுங்கள். ஜூரிகளோ கோர்ட்டாரோ கேள்வி கேட்டால், அவர்களை நேரே பார்த்துப் பதில் சொல்லுங்கள். எரிச்சல் அடையாதீர்கள். உங்கள் கட்சி வக்கீலிடம் காட்டுவதை விட எதிர்க்கட்சி வக்கீலிடந்தான் அதிக மரியாதை காட்டவேண்டும். 'ஸார்' என்று அடிக்கடி சொல்லுங்கள்.

நன்றாக யோசித்துப் பதில் சொல்லுங்கள். சற்று யோசிப்பதில் தவறில்லை. கேள்வியைக் கவனமாகக் காது கொடுத்துக் கேளுங்கள். அவசியமானால் ஒரு கேள்வியை மறுபடியும் சொல்லும்படி கோர்ட் குமாஸ்தாவைக் கேட்டுக்கொள்ளலாம்.

கேட்காத விஷயத்தை நீங்களாகத் தெரிவிக்காதீர்கள். கேட்ட கேள்விக்கு மட்டுமே பதில் சொல்லுங்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள். கேட்காத விஷயத்தைச் சொன்னாலும் வளர்த்தி வளர்த்திப் பதில் சொன்னாலும், அநாவசியமாக நீங்கள் சிக்கிக்கொள்ள நேரிடும்.

யாருக்கும் ஞாபக மறதி உண்டு. தேதி, தொகை, சில நிகழ்ச்சி இவைபற்றிச் சொல்லும்போது, "இப்படித்தான் எனக்கு ஞாபகம்" என்று அடக்கத்தோடு சொல்லுங்கள். மிக நிச்சயமாகச் சொல்லி விடாதீர்கள். தெரியாத விஷயத்தைத் தெரிந்ததாகச் சொல்லவே சொல்லாதீர்கள்.

எதிர்க் கட்சி வக்கீல் குறுக்கு விசாரணை செய்யும்போது, சட்சட் என்று பதில் அளிக்காமல் சற்று நின்று சொல்லுங்கள். இதனால், நீங்கள் சிறிது யோசிப்பதற்கு அவகாசம் இருக்கும்; உங்கள் கட்சி வக்கீல் ஏதாவது ஆட்சேபம்

செய்வதாயிருந்தால், அதற்கும் வசதி கிடைக்கும்.

தந்திரமும் யுக்தியுமான கேள்விகளால் ஏமாந்து போகாதீர்கள். 'ஆம்' அல்லது 'அல்ல' என்று மட்டுமே பதில் சொல்லும்படி எதிர்க் கட்சி வக்கீல் ஒரு கேள்வியைக் கேட்கக் கூடும். அதற்கு 'ஆம்' என்ருலும் சரி, 'அல்ல' என்ருலும் சரி, தவருயிருக்கலாம். இந்த மாதிரி கேள்வி வரும்போது, ஜட்ஜியை நோக்கித் திரும்பி, "இதற்குக் கொஞ்சம் விளக்கமாகப் பதில் சொல்ல அநுமதி வேண்டும்" என்று வேண்டிக் கொள்ளுங்கள். எந்த ஜட்ஜியும் அநுமதி தர மறுக்கமாட்டார்.

"இந்தக் கேஸைப்பற்றி உம் கட்சிவக்கீலுடன் நீர் ஆலோசித்ததுண்டா?" என்று எதிர்க் கட்சி வக்கீல் கேட்டால், "இல்லை" என்று பதில் சொல்ல வேண்டாம். எந்த வக்கீலும் தாம் சந்தித்துப் பேசாத சாட்சியைத் தம் கட்சிக்காகக் கோர்ட்டுக்கு அழைக்க மாட்டார். இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

மொத்தத்தில் கோர்ட்டிலே சாட்சி சொல்லுவதென்பது மிகவும் கஷ்டமான காரியந்தான். ஆனல், வீண் படபடப்போ கிலியோ அடைவது, அந்தக் காரியத்தை மேலும் கஷ்டமானதாகச் செய்து விடும். நிதானமாய், மரியாதையாய், எல்லாரோடும் ஒத்துழைக்கும் தோரணையில் சாட்சி சொன்னல், காரியம் மிக மிக எளிது பட்டுவிடும்.

ஏது எதற்காக?

ரஸ்தாவின் நடுவிலே ஒரு கற்குவியல் இருந்தது. அதன்மீது ஓர் அரிக்கன் லாந்தர் வைத்திருந்தது. பக்கத்திலே ஒரு கிழவன் சுருட்டுக் குடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அங்கே வந்த கார் இதனுல் தடைப்பட்டு நின்றது. கிழவனைப் பார்த்து, "இந்த லாந்தர் எதற்கு?" என்று கார் டிரைவர் கேட்டான்.

"கற்குவியலுக்கு வெளிச்சம் கொடுப்பதற்காக."

"கற்குவியல் எதற்கு?"

"லாந்தரை வைக்கும் முட்டாக உதவுவதற்காக."

"நீ இங்கே எதற்காக உட்கார்ந்திருக்கிருய்?"

"லாநதரை ஏற்ற; பிறகு அணைக்க; பிறகு யாரும் அதைத் திருடாமல் பார்த்துக்கொள்ள."

—'பார்க்குவாய் பாஸ்'

பயம்! பயம்!

வீணே பயம் ஓங்கும்படி நாம் இடம் கொடுக்கக்கூடாது. உங்கள் பயத்தை அளவு கோலாகக் கொண்டு உலகத்தை அளக்காதீர்கள்.

—ஜட்ஜ் ஃபெலிக்ஸ் ஃப்ராங்க்ஃபர்டு

[இதோ சில கேள்விகள். எங்கே, உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு வேறு பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

1. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஒவ்வொரு வருஷமும் கூடி ஐந்தாறு வாரங்கள் மட்டுமே தொடர்ந்து வேலை செய்துவிட்டுக் கலைந்துவிடுகிறது. அது இப்படிக் கூடத் தொடங்குவது எந்த மாதம், எந்த நாளில் என்று உங்களுக்குத் தெரியுமா?

2. 'சிறு பஞ்ச மூலம்' என்பது அ) ஒரு வியாதி, (ஆ) ஒரு நூல், (இ) ஒரு மருந்து. இந்த மூன்றில் எது சரி?

3. ஸினிமாப் பாட்டுக்களைப் படம் பிடிப்பதற்கு முன்பு பதிக்கிறார்களா? பின்பு பதிக்கிறார்களா? படம் பிடிக்கும்போதே பதிக்கிறார்களா?

4. ராஜா என்ற கருத்துடைய 'கிங்' என்ற ஆங்கிலச் சொல் எப்போதும் ஆணையே குறிக்கிறதா? பெண்ணையும் குறிப்பதுண்டா?

5. உலகத்திலேயே மிகப் பெரிய 'லைப்ரரி' (புத்தகசாலை) எது?

6. சமீபத்தில் மேரி ராணி காலமானபோது துக்கத்துக்கு அடையாளமாகக் 'காமன்வெல்த்' நாடுகளிலெல்லாம் கொடிகளைப் பாதி தாழ்த்தினார்களே; இதன் கருத்து என்ன?

7. எல்லா மோட்டார் கார்களின் முன் சக்கரங்களையும் வேண்டுமென்றே சிறிது சாய்வாக அமைத்திருக்கிறார்கள் என்பது உண்மையா? பொய்யா?

8. ஸூயஸ் கால்வாய், பனாமா கால்வாய் இந்த இரண்டில் எது அதிக நீளம்?

9. காரட் என்ற கிழங்கை அதிகமாகத் தின்றால், நம் உடம்பு மஞ்சள் நிறமாகும் என்பது உண்மையா?

10. அஸ்கா சர்க்கரையைவிட 300 மடங்கு இனிப்பானது 'ஸக்கரின்' என்ற பொருள். இதை எதிலிருந்து தயாரிக்கிறார்கள் தெரியுமா?

11. 8 என்ற எண்ணை எட்டே முறை உபயோகித்து 1,000 என்ற விடை வரச் செய்யுங்கள் பார்க்கலாம்.

லட்சியப் பெண் சந்திப்பு

நான் வாலிபனாயிருந்தபோது, ஒரு லட்சியப் பெண்ணைக் கண்டாலன்றி மணமே செய்துகொள்வதில்லையென்று தீர்மானித்தேன். சில வருஷங்களுக்குப் பின் அவளைக் கண்டேன். என்ன அநியாயம்! அவள் ஒரு லட்சிய மனிதனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறாள்!

—மைக்கேல் ஸைமன் (பிரெஞ்சு ஸினிமா நடிகர்)

பின்புற எஞ்சின் கார்

★

இந்தக் கார் உண்மையில் புதுமையானதல்ல; பல வருஷ காலமாகவே பரீட்சை செய்து வருவதுதான். இப்போது முயற்சி சற்றுத் தீவிரமாகியிருக்கிறது. 'பாப்புலர் ஸயின்ஸ்' கட்டுரை ஒன்றை ஆதாரமாகக் கொண்ட விவரம் இது.

மோட்டார்க் கார்களிலெல்லாம் இன்று முன்புறத்திலேயே எஞ்சினை வைத்திருக்கிறார்கள். ஆனால், இது சரியா? அவசியந்தானா? காரின் பின்புறத்தில் எஞ்சினை ஏன் அமைக்கக்கூடாது? இந்தக் கேள்விகளைக் கார் உற்பத்திக் கம்பெனிகளின் பெரிய எஞ்சினீர்களே விவாதித்து வருகிறார்கள். இந்த விவாதத்தின் பயனாக, பின்புறம் எஞ்சின் அமைத்த கார்கள் கூடிய சீக்கிரம் தோன்றுமானால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

லாங் ஐலண்டு என்ற தீவில் ஃப்ளஷிங் என்ற இடத்தில் ஜான் பாலெர்மோ என்ற வாலிப எஞ்சினீர் ஒருவர் தமக்கென்று சொந்தமாக ஸ்போர்ட்டிங் கார் ஒன்றைக் கட்டியிருக்கிறார். இதைப் பார்த்தவரெல்லாம் பிரமிக்கிறார்கள். தம் வீட்டு வாசலில் இவர் காரைக் கொண்டு போய் நிறுத்தியதும் யாராவது இவரைப் பார்த்து, "என்ன இது? உங்கள் காரில் எஞ்சினை ஏன் பின்புறத்தில் அமைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டால், உடனே இவர், "அதற்குரிய இடம் அதுவே; அதனால்தான்" என்று சொல்லுகிறார். "கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள், காரணத்தை" என்று மேலும் கேட்டால், "சுழலும் சக்கரங்கள் பின் சக்கரங்களே. அவைதான் பாரத்தை இழுக்கவேண்டும். எஞ்சின் சுமை அவற்றின்மீது இருப்பதுதான் நல்லது. முன்புற எஞ்சினிலிருந்து நீண்ட இரும்புத்தடியைப் பின் சக்கர அச்சில் கோக்க வேண்டியிருக்கிறது. எஞ்சினைப் பின்புறத்தில் அமைத்தால், இப்படி நீண்ட இரும்புத் தடி தேவையில்லாமற் போகிறது; காரை மிகவும் தாழ்ந்திருக்கும்படி அமைப்பது சாத்தியமாகிறது" என்கிறார் வாலிப எஞ்சினீர். இப்படிச் சொல்லிவிட்டு, விறுக்கென்று வீட்டுக்குள்ளே ஓடிவிடுகிறார். இதற்குமேல் வீணே விவாதம் செய்துகொண்டிருக்க இவருக்கு இஷ்டமில்லை.

இந்த வாலிப எஞ்சினீரே முதல் முதலாகப் பின்புற எஞ்சின் காரை அமைத்தவர் அல்ல. இவருக்குப் பல வருஷங்களுக்கு முன்பே ஸ்காராப் என்ற பின்புற எஞ்சின் காரை வில்லியம் பி. ஸ்டவுட் என்பவர் அமைத்தார். பர்னீ என்ற இங்கிலீஷ் ஸ்ட்ரீம்லைன் கார் ஒன்றையும் இப்படி அமைத்துப் பார்த்திருக்கிறார்கள்.

காரின் பின்புறத்தில் எஞ்சினை அமைப்பதால் உள்ள முக்கிய சாதகங்கள் இவைதானும்:

1 - சுழலும் பின் சக்கரத்தின் மீதே எஞ்சின் சுமை இருப்பதால், பாரம் இழுக்கும் சக்தி அதிகமாகிறது.

2 - எஞ்சினையும் பின் சக்கரத்தையும் இணைக்க நீண்ட இரும்புத் தடி தேவையில்லாமல் போகிறது; காரை மிகவும் தாழ அமைக்க முடிகிறது.

3 - காரின் முன்புற முனையில் ட்ரைவர் அமர்ந்திருப்பதால், எதிரே ரஸ்தாவை அவன் மிக நன்ருகப் பார்க்க முடிகிறது; இதனுல் விபத்து அபாயம் குறையும்.

4 - எஞ்சின் சத்தம், சூடு, புகை இவையெல்லாம் பிரயாணிகளின் பின்புறம் போய்விடுவதால், சவாரி செய்வோருக்குச் சௌகரியம்.

5 - முன் சக்கரங்களின்மீது சுமை குறைவதால், ஸ்டீயரிங் சக்கரத்தைப் பிடித்து வண்டியைத் திருப்புவது ட்ரைவருக்கு எளிது.

ஆனுல், இப்படி எஞ்சினைக் காரின் பின்புறம் அமைப்பதால் ஏற்படக்கூடிய முக்கியமான அசௌகரியங்கள் இவை என்று மறு கட்சியார் கூறுகிருர்கள்:

1 - பின் சக்கரங்களின்மீது சுமை அதிகரிப்பதால், அந்தச் சக்கரங்கள் சறுக்கிச் சாயக்கூடும்.

2 - எஞ்சினைப் பின்னே கொண்டு போய் வைப்பதால், கண்ட்ரோல்களும் எஞ்சினைக் குளிரச் செய்யும் ஏற்பாடும் சிக்கலாகின்றன.

3 - முன்னுல் உள்ள எதனுேடாவது கார் மோதினுல், ட்ரைவருக்கும் பிரயாணிகளுக்கும் அதிக அபாயம் ஏற்படும்.

4 - தட்டு முட்டுச் சாமான்களை வைப்பதற்கு முன் புறம் உள்ள இடம் போதாது.

5 - பின் சக்கரங்களின்மீது சுமை அதிகமாக ஏறினுல், ஜோடி ஜோடியாகப் பின் சக்கரங்கள் போட்டாக வேண்டும்.

பின்புற எஞ்சின் கார்களைப் பற்றி, இப்படிச் சாதகங்களும் பாதகங்களும் இருப்பதாகச் சொல்லுகிருர்கள். ஜெனரல் மோட்டார்ஸ், க்ரிஸ்லர், ஃபோர்டு ஆகிய மூன்று பிரபல கார் உற்பத்திக் கம்பெனிகளும், பின்புற எஞ்சின் கார்களில் உள்ள பாதகங்களை மட்டும் ஒற்றுமையாய் ஒப்புக்கொள்ளுகின்றன.

ரெனுல்ட், வாக்ஸ்வாஜென் போன்ற லேசான கார்களில், எஞ்சினைப் பின்புறம் வைப்பதால், பாதகம் அதிகமாக ஏற்படாதென்று நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிருர்கள். லேசாக இருக்கும் எஞ்சினைப் பின்புறம் வைப்பதனுல், எவ்விதமான பாதகமும் ஏற்படாதாம். காடில்லாக் என்ற பெரிய காரின் எஞ்சின் 800 பவுண்டு நிறை உள்ளது; ரெனுல்ட் என்ற காரின் நிறையோ 100 பவுண்டுதான்.

இப்போதுள்ள நிலையில் பெரிய காரகளில் எஞ்சினைப் பின்புறம் வைப்பது உசிதமில்லை என்ருலும், இந்த நிலைமை இனியும் நெடுங் காலம் நீடிக்காது என்கிருர்கள். எஞ்சின்கள் வரவர லேசாகி வருகின்றன. பெரிய ஸெடான் கார்தான் வேண்டும் என்ற மோகமும் கார் அபிமானிகளிடம் குன்றி வருகிறது. ஆகவே, பிரபல அமெரிக்கக் கார் உற்பத்திக் கம்பெனிகள், பின்புறம் எஞ்சின் அமைத்த கார்களைக் கூடிய சீக்கிரமே கட்டத் தொடங்கலாமாம்.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, ‘ஃபிலிமிண்டியா’ ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை ‘ஃபிலிமிண்டியா’ மே ’53 இதழில் வெளியானவை.

கேள்வி: கணவன்மார் கடையில் சாமான்கள் வாங்கினால் என்ன?

பதில்: வீட்டில் சண்டையையும் வாங்கிக்கொள்ளலாம்.

* * *

கே: வகுப்பற்ற சமுதாயம்! அது எங்கே இருக்கிறது?

ப: இடுகாட்டில் இருக்கிறது. செத்துப்போன மனிதர்களே வகுப்பற்ற சமுதாயத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

* * *

கே: ஐ. நா. சபையிலிருந்து இந்தியா விலகுமானால் என்ன நடக்கும்?

ப: அதன் வேலைகளில் மூன்றில் ஒரு பங்கு மந்தம் ஏற்படும். ஏனெனில், கொரியா, காஷ்மீர், தென் ஆப்பிரிக்கா—இந்த மூன்று விஷயங்களே அதன் கையில் இருக்கின்றன.

* * *

கே: 1911- முடி சூட்டு விழா, 1914- யுத்தம்; 1936 முடி சூட்டு விழா, 1939 யுத்தம்; 1953 முடி சூட்டு விழா, 1956 . . . . ?

ப: யுத்தம் என்பதைச் சேர்த்து விட்டு இந்த ஜோசியத்தைப் பூர்த்தி செய்யுங்கள். இதைப் பற்றி இப்போது யாரும் கவலைப் படுவதில்லை. மரணம் என்றால் அவ்வளவு சாதாரணமாகப் போய் விட்டது; மிகமிகச் சாதாரணம்.

* * *

கே: யார் முதல் முதல் கை குலுக்க ஆரம்பித்தார்கள்?

ப: குருட்டு மனிதன்! மற்றவர்களின் கண்களில் தோன்றும் வரவேற்பொளியை அவனால் காண முடியாது. முட்டாள் மனிதர்கள் இப்போதும் அந்தக் குருடனுடைய வழக்கத்தை மேற்கொண்டு ஒருவரை ஒருவர் அழுக்குப் படுத்திக்கொள்கிறார்கள்.

* * *

கே: என் மகளுக்கு மூன்றரை வயசாகிறது. முரட்டுத்தனம், சுயநலம், கர்வம் எல்லாம் இப்போதே இருக்கின்றன. நான் எப்படிச் சமாளிப்பது?

ப: அவளை மூன்று வருஷத்துக்கு உணவு விடுதியுள்ள பள்ளிக்கூடத்தில் விட்டு விடுங்கள். இந்த வயசில் அவள் பெற்றோர்களை விட்டு வசிக்கவேண்டும்.

* * *

கே: பாஷாவாரி மாகாணங்களை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

ப: பாஷாவாரி மாகாணங்கள் நிர்வாக விஷயத்துக்கு உபயோகமாக இருக்கும். ஆனால் நம்முடைய அரசியல் திட்டத்தில் மாகாண சுதந்தரம் இருக்கும் வரைக்கும் பாஷாவாரி மாகாணப் பிரிவினை மிகவும் கடுமையான மாகாணப் பகைமையை உண்டாக்கும். நேருவின் காலத்துக்குப் பிறகு, கதர்க் குல்லாய் மன்னர்கள் பாஷாவாரித் தனி ராஜ்யங்களை அமைத்துக்கொண்டாலும் கொள்ளலாம். அன்றோடு இந்தியா சமாப்தி யாகிவிடும்.

பரீட்சித்து வரலாறு

சூதர் சௌனக முனிவரிடம் மேலும் சொல்லலானார்:

தருமபுத்திரர் கிருஷ்ண பகவானின் திருவடிகளைத் தியானித்தபடி நீதி தவறாமல் அரசாண்டு வந்தார். இதற்கிடையில் உத்தரையின் வயிற்றில் இருந்த குழந்தையை அசுவத்தாமன் விட்ட பிரம்மாஸ்திரம் எரிக்கத் தொடங்கியது. அப்போது கட்டை விரல் அளவுக்குப் பகவான் கிரீட குண்டலம் முதலியவைகளுடன் அதன் எதிரில் தோன்றி அதைக் காப்பாற்றினார். கொள்ளிக்கட்டை போல் ஜொலித்தாலும் பனிபோல் குளிர்ந்த ஒளி வீசும் கதையை அவர் ஏந்தியிருந்தார். "இவர் யார்?" என்று அந்தக் குழந்தை அவரை உற்றுப் பார்த்த போது பகவான் மறைந்துவிட்டார். பிறகு சுபவேளையில் அந்தக் குழந்தை பிறந்தது.

தருமபுத்திரர் பலவிதமான தானங்களைச் செய்தார். "பகவான் அருளினால் இது பிறந்ததால் விஷ்ணுராதன் என்று பெயர் பெற்று வாழும்; சிறந்த பக்தன் என்றும் பெயர் எடுக்கும்" என்று அந்தணர்கள் ஆசீர்வதித்துச் சென்றார்கள்.

தாயின் வயிற்றில் இருந்த போது தன் முன் தோன்றியவர் இருக்கிறாரா என்று அந்தக் குழந்தை நாலு பக்கமும் கவனித்தது. அதனால் அதற்குப் 'பரீட்சித்து' என்று பெயர் வந்தது. பிறகு அது நன்றாக வளர்ந்து வந்தது.

தர்மபுத்திரர் தம் உறவினர்களைக் கொன்ற பாவம் நீங்க மூன்று அசுவமேத யாகங்கள் செய்தார். அவர் வேண்டுகோளின்படி கிருஷ்ண பகவான் அங்கே இருந்து அவைகளை நடத்தி வைத்தார். பிறகு சில மாத காலம் தங்கிவிட்டு அர்ஜுனனோடு துவாரகைக்குச் சென்றார்.

சில நாள் ஆனதும் விதுரர் சொல்படி திருதராஷ்டிரனும் காந்தாரியும் காட்டுக்குப் புறப்பட்டுப் போனார்கள். தர்மபுத்திரர் அதனால் வருத்தமுற்றிருக்கும்

கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.

போது பல அபசகுனங்களைக் கண்டார். 'அர்ஜுனனுக்கு என்ன நேர்ந்ததோ? அவன் ஏன் திரும்பி வரவில்லை? ஒரு வேளை நாரதர் சொன்னபடி பகவானை விட்டு நாம் பிரிந்து போகும் காலம் வந்துவிட்டதோ?' என்றெல்லாம் கவலைப்பட்டார்.

இந்தச் சமயத்தில் துவாரகையிலிருந்து அர்ஜுனன் திரும்பி வந்தான். முகம் சுண்டிப் போய்த் தருமபுத்திரரின் காலடியில் விழுந்தான். யுதிஷ்டிரர் மிகுந்த கவலையுடன் அவனை விசாரித்தபோது அவன், "நம்மை அவ்வப்போது ஆபத்துக்களிலிருந்து காத்து வந்த பகவான் நம்மை விட்டுப் பிரிந்து போய்விட்டார்" என்றான். இதைக் கேட்டதும் தர்மபுத்திரர் தாமும் சொர்க்கம் செல்லவேண்டியதுதான் என்று தீர்மானித்தார். பகவான் உலகை விட்டுச் சென்றதால் கலி புருஷனின் கை ஓங்கியது. இதைக் கண்டதும் யுதிஷ்டிரர் தம் பேரனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தார். பிறகு எல்லாவற்றையும் துறந்து வடக்குத் திசையை நோக்கிப் புறப்பட்டார். தம்பிகள் நாலுபேரும் திரௌபதியும் கூடவே சென்றார்கள்.

பரீட்சித்து உத்தரனின் மகளான இராவதியை மணந்து நீதி தவறாமல் அரசாண்டு வந்தான். ஜனமேஜயன் முதலிய நாலு பிள்ளைகள் அவனுக்குப் பிறந்தார்கள். ஒரு சமயம் குருஜங்கலம் என்ற இடத்தில் பரீட்சித்து வசித்து வந்தான். அப்போது தன் ராஜ்யத்தில் கலி புகுந்துவிட்டதாகக் கேள்வியுற்றான். அரசர்களின் மனத்தில் கலி புகுந்து தீய செயலை வளர்ப்பதை உணர்ந்தான். உடனே கறுப்புக் குதிரைகள் பூட்டிய தேரில் சிங்கக்கொடி பறக்கத் திக்விஜயம் செய்யப் புறப்பட்டான். பத்திராசுவம், கேதுமாலம், பாரதம், உத்தரகுரு முதலிய இடங்களை வென்று அங்கங்கே இருந்த அரசர்களிடம் கப்பம் பெற்றுத் தருமத்தை நிலை நாட்டினான்.

இப்படி இருக்கும்போது ஒரு நாள் அவன் ஸரஸ்வதி நதிக் கரையில் போய்த் தங்கினான்.

அவன் பாசறைக்கு அருகில் தருமம் எருது வடிவத்தில் தோன்றி ஒரே காலுடன் நொண்டிக்கொண்டிருந்தது. அதன் அருகில் பூமிதேவி பசுவின் வடிவில் குழந்தையை இழந்த தாய் போல் கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்துத் தருமம், "அம்மா, ஏன் உன் முகம் வாடி இருக்கிறது? உனக்கு ஏதோ வருத்தம் என்று தெரிகிறது. உறவினர் யாராவது போய்விட்டார்களா? எனக்கு மூன்று கால் போய்விட்டதற்காக வருத்தப்படுகிருயா? மக்கள் யாகயக்ஞம் செய்து தேவர்களைத் திருப்தி செய்யாததால் மழை இல்லாமல் செடிகொடிகள் வறண்டு போவதைக் கண்டு வருத்தப்படுகிருயா? உன் பாரத்தைத் தவிர்க்க வந்த பகவான் போய்விட்டதற்காக வருந்துகிருயா?" என்று கேட்டது.

அதற்குப் பூமிதேவி, "ஆமாம்; சத்தியம், தயை, பொறுமை முதலிய குணங்களுக்கு உறைவிடமான பகவான் என்னை விட்டுப் பிரிந்துவிட்டார். கலி புகுந்தவிட்டான். இனி உன் நிலை, தேவர்கள் நிலை, முனிவர்கள் நிலை, என் நிலை எல்லாவற்றையும் எண்ணித்தான் வருத்தப்படுகிறேன்" என்றது.

அப்போது பரீட்சித்து அங்கே வந்து சேர்ந்தான். எதிரே கதியற்று நிற்கும் ஒரு பசுவை யாரோ அரசவேஷத்தோடு துன்புறுத்துவதையும், அருகில் பயந்து நடுங்கும் எருது ஒன்றையும் கண்டான். நாண் ஏற்றிய வில்லைக் கையில் ஏந்தி, மேகம் போல் கம்பீரமான குரலில், "இந்தப் பசுவை வதைக்கும் நீ யார்? அரசனைப்போல் வேஷம் போட்டுக்கொண்டால் மட்டும் அரசனுகிவிட முடியுமா? உன்னை இதோ கொன்று விடுகிறேன், பார்" என்று கூறிவிட்டு, எருதைப் பார்த்துச் சொல்லலானுன்: "உன் மூன்று கால்களையும் வெட்டினவன் யார்? பகவான் காட்டிய வழியில் அரசாட்சி நடந்துவரும் இந்த ராஜ்யத்தில் உன்னைத் தவிர இதுவரை வேறு யாரும் அழுது நான் பார்த்ததில்லை" என்ருன்.

பிறகு பசுவைப் பார்த்து, "அம்மா, துஷ்டர்களை அடக்கி ஆண்டு வருகிறேனே. இங்கே உன்னை வதைக்கத் துணிந்தவன் யார், சொல்? அவனைத் தண்டிக்கிறேன்" என்ருன்.

அதருமம் செய்பவன் இன்னுன் என்று நேரில் சொன்னுல் நரகத்துக்குப் போகவேண்டியிருக்கும் என்று சாஸ்திரம் சொல்கிறபடியால் எருது வடிவில் வந்த தருமம், முதலில் பதில் சொல்லத் தயங்கியது. அரசன் பசு பூமிதேவியே என்றும், எருது தருமதேவன் என்றும், அந்த ஆள் கலிபுருஷன் என்றும் தெரிந்துகொண்டான். உடனே தருமத்துக்கும், பூமிக்கும் ஆறுதல் சொல்லிக் கலியைக் கொல்லக் கத்தியை எடுத்தான். உடனே கலிபுருஷன் பயந்து அரசவேஷத்தைக் களைந்துவிட்டுப் பரீட்சித்தின் காலில் விழுந்தான். அடைக்கலம் புகுந்தவர்களைக் காக்கும் விரதம் கொண்டவன் பரீட்சித்து. ஆகவே, அவன் கலிபுருஷனை யாகயக்ஞம் நடக்கும் இடத்தை விட்டுப் போய்விடும்படி உத்தரவிட்டான். அப்போது கலிபுருஷன் நடுங்கியவண்ணம், "நான் எங்கே போனுலும் வாளோடு

நீங்கள் நிற்கும் இந்தத் தோற்றம் கண்முன் நிற்கிறதே! நீங்கள் அரசராக இருக்கும்போது எங்குமே யாகயக்ஞங்கள் நடக்கத்தான் நடக்கும். அப்படி இருக்க, நான் எங்கே நிலையாகப் போய் இருக்க முடியும்?'' என்றான்.

அதற்குப் பரீட்சித்து, ''சூதாட்டம் ஆடுவது, மதுபானம் செய்வது, ஜீவஹிம்ஸை செய்வது, பெண்களுக்கு ஊழியம் செய்வது-இந்த மாதிரி இடங்களில் இருந்து வா. பணத்தினால் இந்த நான்கு தீங்கும் விளையும். ஆகையால் இங்கெல்லாம் வாழ்ந்து வா'' என்றான்.

பிறகு தருமத்தைக் கடைப்பிடித்து அந்த எருதின் கால்கள் மூன்றும் வளரும்படி செய்தான்.

ஒரு நாள் பரீட்சித்து, கையில் வில்லுடன் காட்டில் வேட்டையாடச் சென்றான். கடைசியில் களைப்புற்றுத் தாகம் மேலிட ஓர் ஆசிரமத்தில் நுழைந்தான். அங்கே சமீகர் என்ற முனிவர் மெய்மறந்து சமாதியில் ஆழ்ந்திருந்தார். அரசன் பலமுறை அவரை அழைத்து, தாகத்துக்கு நீர் தரும்படி கேட்டான். அப்படியும் அவர் கண் திறக்காமல் இருக்கவே, வேண்டுமென்றே அவர் தன்னை அவமதிப்பதாக எண்ணினான்; அருகில் இறந்து கிடந்த ஒரு பாம்பை வில்லின் நுனியால் எடுத்த முனிவரின் கழுத்தில் போட்டுவிட்டு ஊர்ப் போய்ச் சேர்ந்தான்.

முனிவரின் மகனான சிருங்கி என்பவன் சிறுவன். ஆயினும் சிறந்த தபஸ்வி. முனிவரின் மேல் செத்த பாம்பை அரசன் போட்டான் என்று தெரிந்ததும் அவன், ''என் தந்தையை அவமதித்த அந்த அரசன் இன்றைக்கு ஏழாம் நாள் தட்சகன் என்ற பாம்பு கடித்துச் சாகட்டும்'' என்று சபித்தான். தியானம் கலைந்தபின் முனிவர், அரசன் செய்த சிறு பிழைக்காக இப்படிச் சாபமிட்டது தவறு என்று தம் மகனைக் கோபித்துக் கொண்டார். பரீட்சித்தோ பின்னால் தான் செய்ததை எண்ணி வருந்திக்கொண்டே இருந்தான். தம் மகன் இட்ட சாபத்தை முனிவர் தம் சிஷ்யன் ஒருவன் மூலம் அரசனுக்குச் சொல்லியனுப்பினார்.

பகவானிடம் பக்தி மேலிட்டுப் பரீட்சித்து விரைவிலேயே ராஜ்யத்தை விட்டு அகல வழி தேடிக் கொண்டிருந்தான். உலகின் மேல் வெறுப்பு மூண்டது அவனுக்கு. தன் முதல் மகனிடம் ராஜ்ய பாரத்தை ஒப்பித்துவிட்டுக் கங்கைக் கரைக்கு வந்தான். பகவானைத் தியானித்தபடி கிழக்கு நுனியாகத் தர்ப்பையைப் பரப்பி வடக்கு நோக்கி அமர்ந்தான்; சாகும் வரையில் உண்ணாவிரதம் ஏற்றான். அங்கே பல முனிவர்கள் அவனைக் காண வந்தார்கள். அவர்களைப் பார்த்து, ''என் உயிர் போகும் வரையில் பகவானுடைய நாமத்தையும் வரலாறுகளையும் சொல்லுங்கள்'' என்று வேண்டினான். அப்போது சுகர் அங்கே வந்தார். அவரிடம் அரசன், ''பிரபுவே, மனிதன் எதை என்றென்றும் ஜபிக்கவேண்டுமோ அந்தப் பரம்பொருளைப்பற்றிச் சொல்லுங்கள்'' என்றான்.

சுக முனிவரும் அதற்கு இசைந்து சொல்லலானார்.

ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

தாயன்பு: ரமணாசிரமம் சாதாரணக் குடிசையாக இருந்த காலம் அது. ஆனாலும் பக்தர்கள் தினந்தோறும் கூட்டங் கூட்டமாக வந்து ரமண மாமுனிவரைத் தரிசித்துச் சென்றனர். ஜனக்கூட்டம் அதிகமாக ஆக ஆசிரமத்தின் புகழும் பரவுவது இயல்புதானே? ஆசிரமத்துக்குச் செல்லாத ஜனங்களுக்குப் போனவர்கள் சொன்ன வார்த்தைகள் இனித்தன; 'நாமும் போய்ப் பார்க்கவேண்டும்' என்ற ஆசையை உண்டாக்கின. இதனால் ஆசிரமத்துக்கு வருபவர் தொகை மேலும் மேலும் மிகுதியாயிற்று.

ஆசிரமத்துக்குப் போய்ப் பயனடைய விரும்பும் அன்பர்கள் திருவண்ணாமலையைத் தேடி வந்தார்கள். அதே சமயத்தில் அங்கே சென்று வேறு வகையான பயனை அடைய வேண்டும் என்ற எண்ணம் சிலருக்கு எழுந்தது. மக்கள் கூடும் இடத்தில் பொருள் இருக்கும் என்பது அவர்களுடைய கருத்து. ரமணாசிரமத்தில் விலையுயர்ந்த பண்டங்களும் பொருளும் இருக்கும் என்றே அவர்கள் நினைத்தார்கள். விலைமதிக்கவொண்ணாத மணியாகிய முனிபுங்கவர் அங்கே இருந்தார். ஆனால் அதை அவர்கள் எண்ணவில்லை.

ஒரு நாள் இரவு நடுயாமம். திருடர்கள் ஆசிரமத்திலே புகுந்தார்கள். கோட்டையா, கொத்தளமா இருக்கிறது? மிக எளிதில் உள்ளே நுழைந்துவிட்டார்கள். எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். திருடர்கள் வந்தது அறிந்து சிலர் விழித்துக்கொண்டார்கள். திருடர்கள் அவர்களை அடித்தார்கள். ஊருக்குப் புறம்பே தனியிடத்தில் ஆசிரமம் இருந்தமையால் யார் என்ன கூப்பாடு போட்டாலும் ஏனென்று கேட்டாரில்லை. வந்த திருடர்கள் ஆசிரமத்தில் உள்ள அன்பர்களை அடித்ததோடு நிற்கவில்லை. ரமண பகவான்மேலும் அடிகள் விழுந்தன. இதனால் ஆத்திரங்கொண்ட அன்பர்கள் திருடர்களை எதிர்த்துத் தாக்க முயன்றார்கள். அதைக் கண்ட இந்த மாமுனிவர், சிறிதும் பரபரப்பின்றி, "பொறுமையே சாதுக்களின் தர்மம். அவர்கள் விருப்பப்படி விட்டுவிடுங்கள். நம்முடைய கை நம் கண்ணைக் குத்திவிட்டால் அந்தக் கையை வெட்டியா விடுகிறோம்? அவர்கள் நமக்குப் பொறுமையைக் கற்பிக்க வந்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள்" என்று கையமர்த்தினார்.

கள்வர்கள் ஆசிரமத்தில் உள்ள பண்டங்களை எடுத்துக் கொண்டார்கள். பத்து ரூபாய்க்கு மேல் பெறுமான பொருளே அங்கு இல்லை. 'இவ்வளவுதானா, இந்த இடத்து யோக்கியதை?' என்று அவர்கள் நினைத்திருக்கக்கூடும். பொருளின் மதிப்பைச் செல்வத்தால் அளப்பது உலகின் பொது இயல்பு. கள்வர்களைப்பற்றிச் சொல்வானேன்?

திருடர்களுக்கு ஏமாற்றந்தான். நிறையப் பொருள் கிடைக்கும் என்று வந்தவர்கள் அவர்கள். அவர்களுக்கு உண்டான ஏமாற்றத்தைப் பகவான் உணர்ந்து கொண்டார். "சமையல் அறையில் ஏதாவது இருந்தால் சாப்பிட்டுப் போங்கள்" என்று பரிவோடு சொன்னார். அவர்களைத் திருடர்களாகப் பார்த்திருந்தால் இப்படிச் சொல்ல வருமா? குழந்தைகள் தான் இருக்கும் இடத்தில் புகுந்து ஆரவாரம் செய்தால் தாய் கோபித்துக்கொள்வதில்லை. "நீங்கள் வாருங்கள்; சாதம் போடுகிறேன்" என்று அன்போடு அழைக்கிறாள். அந்தத் தாயன்பே ரமண முனிவரிடம் குடிகொண்டிருந்தது. (வாழ்வு)

லக்ஷ்மியின் இறுதி: பகவான் தம்மிடம் வரும் அன்பர்களிடம் கருணை காட்டுவது மாத்திரம் அன்று. உயிர்களிடத்திலும் அப்பெருமானுக்குக் கருணை உண்டு. ஆசிரமத்தில் லக்ஷ்மி என்ற பெயரோடு ஒரு பசு இருந்தது. மற்ற அன்பர்களை எப்படி நடத்துவார்களோ அதே மாதிரிதான் அந்தப் பசுவையும் ஆசிரமவாசிகள் நடத்தி வந்தார்கள். பகவானுக்கு அதனிடம் இருந்த அன்பு யாவருக்கும் தெரியும். அது ஆறு மாசக் கன்றுக்குட்டியாக இருந்தபோது ஆசிரமத்துக்கு வந்தது. 1924-ஆம் வருஷம் முதல் 1948-ஆம் வருஷம் ஜூன் வரையில் அது அங்கே வாழ்ந்தது.

அன்று அது கீழே சக்தியற்றுப் படுத்துவிட்டது. அதற்கு இறுதி நேரம் அணுகிக்கொண்டிருந்தது. ரமண முனிவர் இதனை உணர்ந்தார். கோசாலைக்குச் சென்றார். காலை 10 மணி இருக்கும். லக்ஷ்மிக்கு அருகில் அமர்ந்து தம் மடியில் அதன் தலையை எடுத்து வைத்துக்கொண்டார். தம்முடைய ஞானப் பார்வையாலும் உபதேச மொழிகளாலும் ஆறறிவுடைய மக்களைக் கரையேற்ற வந்த மாஞானிகள் பலரைப் பற்றிக் கேட்டிருக்கிறோம். இந்தப் பெருமானோ தம்மை அடைந்த பசுவையும் முக்தி அடையச் செய்யும் பெருங் கருணை படைத்திருந்தார். தன்னுடைய இறுதிக் காலத்தில் பகவானுடைய மடியில் தலையை வைத்து உயிரை விடும் பெரும்பேறு அந்தப் பசுவுக்குக் கிடைத்தது. அதன் தலையை, "லக்ஷ்மியம்மா, லக்ஷ்மியம்மா, லக்ஷ்மி" என்று சொல்லிச்சொல்லித் தம்முடைய திருக்கரத்தால் அந்த மகாநுபாவர் தடவிக் கொடுத்தார்.

லக்ஷ்மியின் சடலத்திலிருந்து உயிர் பிரிந்தது. அந்தச் சடலத்தை வண்டியில் வைத்து எடுத்து வந்தார்கள். அதைச் சமாதி செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றன. அந்தப் பூஞ்சடலத்தை நன்னீராற் குளிப்பாட்டி மஞ்சள் பூசி நெற்றியிலே குங்குமமிட்டு மாலை அணிந்து பட்டுத் துணியைக் கழுத்தில் கட்டித் தூபம் காட்டிக் கர்ப்பூர ஹாரதி செய்து சமாதி செய்

தார்கள். பகவான் உடன் இருந்து கவனித்தார்.

அப்பால் பகவான், லக்ஷ்மி உயிர் நீத்து விமுக்தி நிலையை அடைந்த நாளை ஒரு தமிழ்ப் பாட்டில் அமைத்துப் பாடினார். அதைத் தெலுங்கிலும் மலையாளத்திலும் கூட மொழிபெயர்த்து அமைத்தார். இன்றும் லக்ஷ்மியின் சமாதியிலே பகவானுடைய திருவாக்காகிய இந்தப் பாடலைக் காணலாம். (வாழ்வு)

சாந்தியும் சுகமும்: "ஆத்ம விசாரத்தால் எனக்குச் சாந்தி வராதுபோலத் தோன்றுகிறதே! எப்படி நான் அதை அடைய முடியும்?" என்று ஒருவர் கேட்டார். ரமண பகவான் அதற்குப் பின் வருமாறு விடை அளித்தார்:

"சாந்தியை நீ அடையவாவது! உன்னுடைய இயல்பே அது தானே? அதை நீ அறியவில்லை. அதுதான் சங்கடம். அப்படி உன்னிடம் உள்ள சாந்தியை அறிய முடியாமல் செய்வது மனம். ஆதலால் அந்த மனத்தைப்பற்றியே ஆராய்ச்சி செய்யவேண்டும். மனம் என்பது என்ன என்று விசாரிக்கப் போனால், மனம். தொலைந்து போய்விடும். எண்ணத்தைத் தவிர மனம் என்று தனியே ஒன்று இல்லை. எண்ணங்கள் தோற்றுவதனால் அவை தோற்றும் இடம் ஒன்று உண்டென்று கற்பனை செய்துகொண்டு அந்த இடத்தையே மனம் என்கிறாய். உள்ளே நுழைந்து விசாரித்தால் உண்மையாய் மனமென்று எதனையும் காண முடியாது. இப்படி மனம் இல்லை என்ற இயல்பான நிலையை உணர்ந்து அடங்கினால் நிலையான சாந்தி உண்டாகும்." (வாக்கு)

முதலாளியின் ஞானம்

"தான் அறிந்ததை விட அதிகமாய் அறிந்த அறிஞர்களையே தன்னிடம் வேலைக்கு அமர்த்திக்கொண்ட புத்திமான் இங்கே சமாதியாகியிருக்கிறான்" என்ற வாக்கியம் அடங்கிய கல்லைத் தம் சமாதிமீது நிறுத்த வேண்டும் என்று கார்னீஜி என்ற பிரபல கோடீசுவரர் ஒரு சமயம் சொன்னார். ஆனால், அவருடைய இந்த ஆசையை அவர் இறந்த பின் மற்றவர் பூர்த்தி செய்யவில்லை.

—நீல் ஓஹாரா

குழந்தையின் சந்தேகம்

நான் சிறுமியாக இருந்தபோது, என்னையும் என் தம்பியையும் அழைத்துக்கொண்டு எங்கள் அம்மா ஒரு கல்யாணத்துக்குப் போனாள். கல்யாணம் நடந்துகொண்டிருந்தபோது, என் தம்பி உரத்த குரலில், "அம்மா, நீயும் அப்பாவும் கல்யாணம் பண்ணிக்கப் போனபோது, என்னையும் அக்காவையும் யார் பார்த்துக்கொண்டார்கள்?" என்று கேட்டான்.

—'ஸ்டார்' பத்திரிகையில் கடிதம்.

விநோபா யாத்திரை

★

அட்டைப் படத்தில் போடும் பிரபலஸ்தர்களைப்பற்றியெல்லாம் நல்லதாகவே எழுதும் வழக்கம் இந்த அமெரிக்கப் பத்திரிகைக்கு இல்லை. ஆனால் இவரைப் பற்றி நல்லதே எழுதியிருக்கிறது.

புண்ணிய நகரமான காசியைச் சுற்றிக் கங்கை நீர் பாயும் வளமுள்ள வயல்கள். கறுப்பு நிற மண்ணில் ஆள் உயரத்துக்குக் கரும்பு வளர்ந்திருக்கும். முழங்கால் ஆழத்துக்கு வயல்களில் நீர் தேங்கியிருக்கும். சுபிட்சமான இடம்; தளதளவென்று இருக்கும் குழந்தைகள் பாட்டையோரத்தில் நின்றுகொண்டு வருகிற போகிற கார்களைப் பார்த்துச் சிரித்துக் கையாட்டிக்கொண்டிருப்பார்கள். ஒல்லியான அழகிய குடியானவப் பெண்கள் வெட்கத்துடன் புன்சிரிப்புச் சிரித்துத் தலையை வர்ணச்சேலையால் மறைத்துக்கொள்ளும் காட்சியும், கிழவர்கள் குடிசை வாசலில் ஹுக்கா குடித்துக்கொண்டிருப்பதும் பார்க்க நேர்த்தியாக இருக்கும்.

நிதானமாக ஊர்ந்து செல்லும் ஸோன் நதி வழியே பிஹாரின் தென்பகுதிக்கு வந்தால் பூமி வறண்டு காட்சியளிக்கும். இங்குமங்கும் குன்றுகள். பெரிய பெரிய குண்டுக் கற்கள். வயலில் நரிகள் ஊளையிட்டுக்கொண்டு ஓடும். பருந்துகள் வானத்தில் வட்டமிட்டுக்கொண்டிருக்கும். பாட்டையோரத்தில் அங்கங்கே குக்கிராமங்கள் இருக்கும். மோட்டார் கார் ஏதாவது வந்தால் கோவணம் இல்லாத குழந்தைகள் பயந்து நடுங்கிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக ஓடும். ஒடிந்து விழுகிற மாதிரி இருக்கும் பெண்கள் சேலையை வரிந்து கட்டிக்கொண்டு வயலில் வேலை செய்வார்கள்.

இந்த வழியாகத்தான் கொஞ்ச நாளாக, எளிமையே உருவாய் விநோபா பாவே சுற்றுப் பிரயாணம் செய்துவருகிறார். இவர் அரசாங்கத்தில் எந்தப் பதவியும் வகிக்கவில்லை. ஆனால் ஓர் ஆசாரியர் - மகான் - என்ற முறையில் இவரை இந்தியர்கள் போற்றி வருகிறார்கள். புண்ணிய நதிகளும் ஸ்தலங்களும் நிறைந்த இந்தியாவில்தான் இந்தமாதிரி ஓர் அற்புதத்தைக் காண முடியும். பண்டித

காப்பிரைட்: (ஆங்கிலம்: 11-5-'53), டென்வெர் 2, கொலராடோ, ஐக்கிய அமெரிக்கா.

ஜவாஹர்லாலுக்கு அடுத்தபடி இன்று இந்தியாவில் பிரபலமாக விளங்குபவர் விநோபா. மகாத்மா காந்தியின் உபதேசத்தை அப்படியே கடைப்பிடித்து வருபவர். ஏறக்குறைய மகாத்மாவைப் போலவே இருக்கிறார். இவருக்குத் தலையில் சற்றுக் கருமயிரும் நரைத்த தாடியும் இருப்பதுதான் இருவருக்கும் உள்ள வித்தியாசம். மற்றப்படி அதே வறண்டு ஒல்லியான உடல்; அதேமாதிரி பை-ஃபோகல் (இரட்டை) மூக்குக் கண்ணாடி. மகாத்மாவைப்போலவே நிதானமாகவும் சற்றே ஹாஸ்யச் சுவையுடனும் பேசுகிறார். நன்றாகப் படித்தவர். சம்ஸ்கிருதம், பெர்ஷியன், உருது, ஹிந்தி, மராட்டி, குஜராத்தி, வங்காளி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம் இப்படிப் பல பாஷைகள் இவருக்குத் தெரியும். இந்தியாவில் இவர் சுற்றுப் பிரயாணம் செய்துவரும் இந்தச் சமயத்தில் இவை உபயோகமாக இருக்கும். இவர் படித்த மேதை என்பதற்காக மட்டும் இந்திய மக்கள் இவரிடம் இப்படிப் பக்தி செலுத்தவில்லை; பாபு (காந்தி) வைப் போல் ஒரு புதிய நம்பிக்கையை - ஏழை மக்களுக்கு விமோசனமுண்டு என்பதை - நேரில் காட்டி வருகிறார். இதுவே இவரை மக்கள் போற்றுவதற்குக் காரணம்.

இன்றைய நிலையில் நமக்கு இவர் சொல் புதுமையாகப் படலாமேயொழிய மற்றப்படி இவர் புதிதாக எந்தக் கொள்கையையும் போதிக்கவில்லை. இந்தியாவில் 7,00,000 கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமமாக நடந்தே போய்ப் பார்ப்பது என்று இவர் முடிவு செய்திருக்கிறார். ஏசுநாதருடைய கருத்துக்களையே இன்னொரு விதமாக மக்களுக்கு உபதேசிக்கிறார். நிலம் படைத்தவர்களைப் பார்த்து, "ஒன்றைப் பெறுவதைவிடக் கொடுப்பது உயர்ந்தது. உங்களை அன்பினால் கொள்ளை கொள்ள வந்திருக்கிறேன். உங்களுக்கு நாலு மக்கள் இருந்தால் என்னை ஐந்தாம் மகனாக ஏற்று எனக்குரிய பங்கைக் கொடுங்கள்" என்கிறார். ஏழை வாரக்காரர், நிலம் இல்லாத உழவர்கள் இவர்களைப் பார்த்து, "நாம் எல்லாரும் ஒரே மனித குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்" என்று தழுவிக்கொண்டு போகிறார்.

பூமிதான யக்ஞம் என்று இவர் இந்த இயக்கத்துக்குப் பெயர் வைத்திருக்கிறார். இந்த இயக்கம் அமோகமாகப் பயன் அளித்திருக்கிறது. இதைத் தொடங்கி 2 வருஷகாலம் ஆகிறது. விநோபா 6,500 மைல் காலாலேயே நடந்து, இதுவரை 10 லட்சம் எக்கர் நிலத்துக்குமேல் ஏழைகளுக்கு விநியோகித்திருக்கிறார். ஒரு மகாராஜா மொத்தமாக 1,00,000 எக்கர் தானம் அளித்திருக்கிறார் என்றால் பாருங்கள். இதுவரையில் கிடைத்த பூமிதானத்தில் இதுவே பெரிது. தெலுங்கானா குடியானவர் ஒருவர் தமக்கு இருந்த ஓர் எக்கரில் நாற்பதில் ஒரு பாகம் கொடுத்திருக்கிறார். இது கிடைத்ததற்குள் குறைந்த அளவு.

இப்படிக் கொடுத்த எல்லாருமே தர்ம சிந்தனை உள்ளவர்கள் என்று சொல்வதற்கில்லை. 'இந்துக்களின் தியாக சிந்தைக்கு ஏற்றது இது. பொதுவுடைமை பரவாதிருக்க இது உதவும்' என்றே சில பிரபல மிராசுதார்கள் இவரை ஆதரிக்



பவனூரில் தொடங்கி, ஹைதராபாதுக்கு வந்து, அங்கிருந்து புது டில்லி வழியாகப் பிஹார்வரை நடந்தே 6,500 மைல் தூரம் விநோபாஜி யாத்திரை செய்திருக்கிறார்.

கிறார்கள். ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகளைச் சிறையில் அடைப்பதைவிட இவர் செய்து வரும் இந்தத் தொண்டு மிகவும் பலன் அளித்திருக்கிறது. ஓர் ஊரில் இவர், "நான் போகிற இடத்திலெல்லாம் கம்யூனிஸ்டுகள் செய்த அட்டூழியங்களைப் பற்றி மக்கள் முறையிட்டார்கள். அப்படியிருந்தும் கம்யூனிஸ்டுகளிடமும் எனக்கு அன்பு நீடிக்க வேண்டும் என்றுதான் ஆண்டவனைப் பிரார்த்தித்து வருகிறேன். அவர்கள் என்னதான் அட்டூழியம் செய்திருந்தாலும் அவர்களை நாம் வெறுக்கக் கூடாது. ஆண்டவன் இருக்கிறான் என்பதை ஒவ்வொருவரும் உள்ளூற உணர வேண்டும். எல்லார் உள்ளத்திலும் நல்லெண்ணம் தழைக்கும்படி ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்" என்றார். இன்னும் ஓர் இடத்தில் இவர் கம்யூனிஸ்டுகளையே நேரில் பார்த்து, "உண்மையாகவே பலாத்காரத்தில் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் பட்டப் பகலில் வந்து கொள்ளை அடிப்பதுதானே? ஏன் இரவில் வரவேண்டும்? கொள்ளை யடிப்பதாக இருந்தால் என்னைப் போல் அன்பினால் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுங்களேன்" என்றார்.

கம்யூனிஸ்டுகளைத் தவிர மற்ற எல்லாக் கட்சியாருமே இவருடைய இயக்கத்தை ஆதரிக்கிறார்கள். கம்யூனிஸ்டுகளும் இவரையோ இவர் லட்சியத்தையோ குறை கூறவில்லை. இவருடைய முறையினால் விரைவில் பலன் ஏற்படுவது சாத்தியமில்லை என்றுதான் சொல்கிறார்கள். ஆனாலும் அது நல்ல பலன் அளித்துத்தான் வருகிறது.

முப்பது வருஷமாகக் காங்கிரஸ் கட்சி நிலச் சீர்திருத்தம், பலவகைத் திட்டங்கள் இவற்றைப்பற்றிப் பல தீர்மானம் நிறைவேற்றியும் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. சுதந்தரம் வந்த பிறகு அந்த அந்த ராஜ்ய சர்க்கார்களே நிலச் சீர்திருத்த விஷயத்தைக் கவனித்துக்கொள்ளும்படி விட்டுவிட்டார் நேரு. ஆனால் நிலச்சுவான்தார்கள் அதற்குத் தடையாக இருந்து வருகிறார்கள். 35 கோடி மக்கள் கொண்டது இந்தியா; பஞ்சம், பிணி, கொள்ளை நோய், வெள்ளம், கடன் பளு இப்படிப் பல விதத்தில் துன்பப்படுகிறார்கள் அவர்கள். இந்த நிலையில் விநோபா ஒருவர்தான் ஏழை மக்களுக்காக உருப்படியான தொண்டு செய்து வருகிறார் என்று சொல்ல வேண்டும்.

மேல்நாட்டு ரீதியில் பார்த்தால் பூதான யக்ஞத்திலும் குறைபாடுகள் இராமற் போகவில்லை. இதனால் விளைவு பெருகிவிட்டதாகவோ இந்தியாவின் விவசாயப் பிரச்னை தீர்ந்து விடுமென்றோ சொல்வதற்கில்லை; இதன் ஜனத்தொகையில் சுமார் 70 சதவிகிதம் பேர் விவசாயத்தையே நம்பியிருப்பவர். "அப்படி இருந்தும் இன்னும் வெளி நாட்டிலிருந்து உணவுப் பொருள் இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறதே! இல்லாவிட்டால் சாகத்தானே வேண்டும்!" என்று சிலர் குறை கூறுகிறார்கள். ஆனால் ஒன்று: விளைவு பெருகுகிறதோ இல்லையோ; நிலம் தங்களுடையது என்று ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு ஒரு திருப்தியாவது ஏற்படும்; அது நிச்சயம்.

விநோபா மிகவும் நோஞ்சல் ஆசாமி. வயிற்றில் ரணங் கண்டு கஷ்டப்படுகிறார். அதோடு மலேரியா ஜுரம் வேறு பீடிக்கிறது. தினம் இரண்டே வேளைதான் சாப்பிடுகிறார். அதுவும் பிரமாத உணவு இல்லை; ஒரு தம்ளர் பால்தான். அதில் கொஞ்சம் தேன் விட்டுச் சாப்பிடுகிறார். அப்படி இருந்தும் ஒரு நாளைக்குப் பத்து அல்லது இருபது மைல்கூட நடக்கிறார். இவரும் இவர் கோஷ்டியாரும் வழியில் எங்காவது தங்கினால் விடிகாலை 3 மணிக்கெல்லாம் எழுந்துவிடுவார்கள். உடனே கை தட்டிக்கொண்டும் ஜால்ரா கொட்டிக்கொண்டும் பஜனை செய்துகொண்டே மண்ணெண்ணெய் விளக்கு ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு செருப்பைத் தட்டிக் காலில் போட்டுக்கொண்டு புறப்பட வேண்டியதுதான். இந்தமாதிரி சந்தர்ப்பங்களில் விநோபா ஒரு மணிநேரம் முன்னதாகவே எழுந்துவிடுவார். 5 மணிக்கெல்லாம் முதல் தடவையாக ஒரு தம்ளர் பால் சாப்பிடுவார். பன்னிரண்டு பேருக்கு மேல் ஆண் பெண்கள் இவருடைய கோஷ்டியில் இருக்கிறார்கள். சுமார் இருபது, இருபத்து நாலு வயது இருக்கும் இவர்களுக்கு. மூன்று மாதமோ ஒரு வருஷமோ இவருடனேயே இருக்கிறார்கள். ஆகவே,

இவருடைய கோஷ்டியில் உள்ளவர்கள் அவ்வப்போது மாறிக்கொண்டே யிருப்பார்கள் என்று சொல்லலாம். சில சிஷ்யர்கள் முன்னுடியே ஒரு மோட்டார் டிரக்கில் ஏறி அடுத்த கிராமத்துக்குப் போய் முன்னேற்பாடுகளைச் செய்வார்கள். நிலையாக இவரோடு தங்குபவர் தாமோதர்தாஸ் என்பவர்தான்; தாமோதரருக்கு 38 வயதாகிறது. 18-ஆம் வயசிலேயே மகாத்மா காந்தியிடம் வந்து சேர்ந்தவர். மகாத்மா மறைந்த பிறகு விநோபாவின் காரியதரிசியாக இருந்து வருகிறார். அவ்வப்போது விநோபாவின் பிரசங்கங்களைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி, பூமிதான சம்பந்தமான கணக்குவழக்குகளைக் கவனித்துக்கொள்கிறார். விநோபாவும் ஒவ்வொன்றையும் அவ்வப்போது பரீட்சித்து வருவார்.

இரண்டு வருஷத்துக்கு முன் மத்தியப் பிரதேசத்திலுள்ள பவனார் என்ற ஊரில் விநோபா ஓர் ஆசிரமத்தில் இருந்து வந்தார். அது வர்தாவில் மகாத்மா காந்தி வசித்துவந்த ஆசிரமத்துக்கு ஆறு மைல் தொலைவில் இருக்கிறது. காந்தியை ஆதரித்து வந்த ஜம்னுலால் பஜாஜ் என்ற பிரபல கோடீசுவரர் அளித்த வீடு, வைராக்கிய புருஷரானவிநோபாவுக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் கடைசியில் அந்தத் தானத்தை ஏற்றுக்கொண்டார். ஆனால் அந்தப் பங்களாவைத் தம் இஷ்டம் போல் வேறு விதமாகவே மாற்றிவிட்டார். மகாத்மா காந்தியைப் போல் விநோபாவும் நன்றாக நூற்பார்; துணியும் நெய்வார். மழை பெய்தால்தான் உள்ளே படுக்கப் போவார். மற்றச் சமயங்களில் வெளியில்தான் படுப்பார்.

விநோபாவுக்கு இப்போது வயது 57 ஆகிறது. பிராமண குலத்தில் பிறந்தவர். ஊர் கங்கோதா. இது மேற்கு இந்தியாவைச் சேர்ந்தது. இவருக்கு முதலில் விநாயக் என்று பெயர். ஆனால் மகாத்மா காந்தி பின்னால் விநோபா என்று இவரை அழைக்கவே அந்தப் பெயரே நிலைத்துவிட்டது. பத்து வயதிலேயே வாழ்நாள் முழுவதும் பிரம்மசாரியாக இருப்பது என்று சபதம் செய்துகொண்டார். அதோடு தித்திப்புப் பண்டங்களைச் சாப்பிடுவதையும் விட்டுவிட்டார். நடந்தே இனி எங்கும் போய்வருவது என்றும் தீர்மானித்தார். விநோபா இள வயதிலேயே இப்படி நைஷ்டிகப் பிரம்மசாரியாகி வெகுதூரம் பக்குவமடைந்ததைக் கண்டு மெச்சினர் மகாத்மா காந்தி. 'நாம் அந்த மாதிரி இல்லாமல் இல்லற சுகத்தை அநுபவித்தோமே' என்றுகூடச் சில சமயம் மகாத்மா வருத்தப்பட்டதுண்டு.

20 வயதில் பம்பாய்க்குப் படிக்க அனுப்பினர்கள்; ஆனால் இவர் வங்காளத்துக்குப் போய்த் தேசிய இயக்கத்தில் சேர்ந்தார். பிறகு காசிக்குச் சென்று வேதாந்தம், தத்துவம் இவைகளில் ஈடுபட்டார். 1916 - இல் முதல் முதலாக மகாத்மா காந்தியைத் தரிசித்தார். அவரோடு நேரில் பேசக் கூச்சமாக இருந்ததால், அவருக்கு ஒரு கடிதம் எழுதினர். உடனே காந்தி இவரைச் சாபர்மதி ஆசிரமத்துக்கு வரும்படி அழைத்தார். விநோபா பல வருஷ காலமாக வீட்டுக்கே கடிதம் எழுதவில்லை என்று தெரிந்ததும் மகாத்மா தாமே இவர் தந்தைக்கு, "உங்கள் விநோபா என்னோடுதான் இருக்கிறார்.

நான் வெகு நாள் சிரமப்பட்டு வைராக்கிய நிலையை அடைந்தேன். உங்கள் விநோபா இப்போதே அந்த நிலையை எட்டிவிட்டார்'' என்று ஒரு கடிதம் எழுதி அனுப்பினுர்.

சிறிது காலம் சாபர்மதியில் இருந்து வந்தார் விநோபா. ஆனால் இவருக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை. "சம்ஸ்கிருதத்தை இன்னும் நன்றாகப் படிக்க வேண்டுமென்று ஆவலாக இருக்கிறது. மனசுக்கு நிம்மதி ஏற்படாவிட்டால் இன்னும் ஒரு வருஷத்தில் திரும்பி வந்துவிடுகிறேன்'' என்று காந்தியிடம் சொல்லிவிட்டுப் போனுர்.

ஆசிரமத்தில் இருந்த மற்றவர்கள் இதை மறந்துவிட்டாலும், வருஷ முடிவில் ஒரு நாள் காலை பிரார்த்தனையின்போது மகாத்மா, "இன்றுதான் விநோபா திரும்பி வருவதாகச் சொல்லியிருக்கிறுர்'' என்று சொன்னுர். அதேமாதிரி அன்று பொழுது சாய்வதற்குள் விநோபா வந்து சேர்ந்துவிட்டார்.

1932 - இல் நடந்த சட்டமறுப்பு இயக்கத்தில் விநோபா முதல்முதலாகச் சிறைத்தண்டனை ஏற்றுர். பிறகு பல தடவை-மொத்தம் சுமார் 2 வருஷம் - சிறைவாசம் அநுபவித்தார். இந்தியா சுதந்தரம் அடைந்த பிறகு, ஹிந்து-முஸ்லிம் கலவரம் ஏற்பட்டு மகாத்மா காந்தி இறக்கும் வரையில் விநோபா தம் ஆசிரமத்திலேயே இருந்து வந்தார். அவ்வப்போது பத்திரிகைகளுக்கு மட்டும் பணப் பொருளாதாரத்தை வெறுத்துக் கட்டுரைகள் எழுதி வந்தார். பணத்துக்குப் பதில் இத்தனை மணி நேரம் ஒருவன் வேலை செய்தான் என்ற குறிப்புச் சீட்டே புழக்கத்தில் இருக்க வேண்டும் என்கிறுர் விநோபா.

இரண்டு வருஷங்களுக்கு முன் காந்தீய ஊழியர்களின் கூட்டம் ஒன்று ஹைதராபாதில் நடந்தது. அதில் கலந்துகொள்ள விநோபா அங்கே போயிருந்தார். அப்போது தெலுங்கானுவில் கம்யூனிஸ்டுகளின் தொல்லை அதிகமாக இருந்தது.

10,000 சதரமைல் கொண்டது தெலுங்கானு ஜில்லா. 80,00,000 குடியானவர்களை அங்கே பல நூற்றுண்டுகளாக ஜாகீர்தார்கள் துன்புறுத்தி வந்தார்கள். அசல் அடிமைகளாகவே அவர்களை நடத்தி வந்தார்கள் என்றுகூடச் சொல்லலாம். கம்யூனிஸ்டுகள் அங்கங்கே கூடித் தங்கள் முறையில் இதற்குப் பரிகாரம் தேடினுர்கள். ஜாகீர்தார்களைக் கொன்றும் விரட்டியடித்தும் நிலத்தை மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். பல கிராமங்கள் அவர்கள் கைவசமாகிவிட்டன. சம்ஸ்தானப் போலீஸுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் நடந்த சண்டையில் 3,000 மக்கள் மடிந்தார்கள்; 35,000 கம்யூனிஸ்டுகள் போலீஸ் கையில் சிக்கிச் சிறையில் கிடக்க நேர்ந்தது. குடியானவர், மிராசுதார் இரண்டு பேருக்கும் பரஸ்பர துவேஷம் முற்றி வந்தது.

இந்த நிலையில் போலீஸார், "போக வேண்டாம். ஆபத்தான இடம்'' என்று தடுத்தும் விநோபா தெலுங்கானுவில் சுற்றுப் பிரயாணம் செய்யப் புறப்பட்டார். ஆனுல் இவரை யாரும் ஒன்றும் செய்யவேயில்லை. காந்தியைப் போலவே முதலில் அஹிம்ஸையின் பெருமையை மக்களிடம் விளக்கி

வந்தார். போகப் போக, "புதுக் கருத்து ஒன்று பரவும்போது ரத்த வெள்ளம் பெருகத்தான் பெருகும்; இது சகஜம். ஆகவே, பலாத்காரத்துக்கோ கொலைக்கோ பயந்து நடுங்க மாட்டேன். நீங்களும் வீண் கிலி அடையாமல் அமைதியான முறையில் இந்தச் சிக்கலைத் தீர்க்க வேண்டும். போலீஸால் இதற்குப் பரிகாரம் கண்டுவிட முடியாது. காட்டு விலங்கை வேட்டையாடிக் கொல் கிற மாதிரி விஷயம் இல்லை இது. என்னதான் தவறாக நடந்து கொண்டாலும் அவர்களும் (கம்யூனிஸ்டுகளும்) மனிதர்கள் தான் என்பதை நாம் கவனிக்க வேண்டும். புதிய கருத்து ஒன்று தோன்றும்போது அடக்குமுறையி னால் அதை ஒழித்து விடுவது சாத்தியமில்லை" என்று மக்க ளுக்கு ஆறுதல் மொழி சொல்லிக் கொண்டே போனார்.

பிறகு நிலச்சுவான்தார்களிட மும் போய், "நிலமில்லாதவர் களுக்குக் கொஞ்சம் நிலமாவது தானமாக வழங்குங்கள். இப் போது கொடுக்க மனம் வரா விட்டால் கம்யூனிஸ்டுகளோ அரசாங்கமோ எல்லா நிலத்தை யும் எடுத்துக்கொண்டு விடும். அப்புறம் உங்களுக்குத்தான் கஷ்டம்" என்று நயமாகச் சொல்லலானார். ரத்தக் களரி யாக விளங்கிய தெலுங்கானாவில் இப்படி முதல் முதலாகப் பூமி தான இயக்கம் தொடங்கியது. உலகத்தில் பெரிய பணக்காரர், 'கஞ்சன்' என்று பெயரெடுத்தவர் ஹைதராபாத் நிஜாம். அவர்கூட ஏதோ கொஞ்சம் நிலம் கொடுத் தார். 35,000 ஏக்கர் சேர்ந்த தும் அதைப் பல ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். கொஞ்சங் கொஞ்சமாகத் தெலுங் கானாவில் அமைதி ஏற்பட்டது.

இப்படி நல்ல பலன் விளை யவே, நேரு சர்க்காருக்கு ஒரே மகிழ்ச்சி. நேரு, காந்தியின் வாரிசாக இருந்தாலும் மேல் நாட்டு ரீதியாக வாழ்பவர்; காந் திக்கு அரசியல் பற்று உண்டு; நேருவும் அப்படியே. ஆனால் விநோபாவுக்கு அரசியலில் ஈடு பாடில்லை. நேரு, "யந்திரத் தொழில்வளமும் நீர்ப்பாசனமும் பெருகிப் பல திட்டங்களை நிறை வேற்றவேண்டும்" என்கிறார். விநோபா, "தியாகம், ராட்டை இந்த இரண்டுமே போதும்" என்று நம்புபவர். தெலுங்கானா வில் விநோபா வெற்றி கண்டதும், நேரு இவரை டில்லிக்கு வந்து தேசியத் திட்டக் கமிஷனைச் சேர்ந்தவர்களோடு பூமிதான சம்பந்தமாகச் சில விஷயம் தெளிவு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்; பிரத்தியேக விமானமும் அனுப்ப ஏற்பாடு செய்தார். ஆனால் விநோபா, "நான் கட்டாயம் வருகிறேன். ஆனால் வழக்கம்போல் நடந்து தான் அங்கே வந்து சேர்வேன்" என்று சொல்லிவிட்டார். சொன்ன சொல்படியே ஆசிரம வாசிகளோடு புறப்பட்டு இரண்டு மாத காலம் 795 மைல் நடந்து, டில்லி வந்து சேர்ந்தார். அப் போது வழி நெடுக ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் மக் கள் மாவிலையாலும் தென்னோலை யாலும் பந்தலும் தோரணமும் கட்டி இவரை வரவேற்றார்கள். அரை வயிற்றுக்கும் கூழ் இராத ஏழைக் கிராமவாசிகள் இவர் கால்களைத் தொட்டுக் கண்ணில்

ஒற்றிக்கொண்டார்கள்; அங்கங்கே தங்கும்போது இவர் கால்களைக் கழுவி வணங்கினார்கள். நகரசபைப் பிரமுகர்கள் இவருக்குப் பூமாலை சூட்டினார்கள். அவைகளை மக்களிடமே அளித்துவிட்டு மீண்டும் வழி நடந்தார் விநோபா. அந்த அந்த ஊர்ப் பிரமுகர்கள் ஒரு மைல் தொலைவாவது கூடவே வந்து இவரை வழி அனுப்பினார்கள். அன்றாடம் தங்கும் ஊர்களில் எல்லாம் பிரார்த்தனைக் கூட்டம் கூட்டிப் பூமிதானக் கருத்துக்களை உபதேசித்து வந்தார்.

புது டில்லியில் ராஜகாட்டிலே காந்தியடிகளின் சமாதிக்கு அருகில் ஒரு குடிசையில் தங்கினார். தேர்தல் மும்முரத்துக்கிடையே நேரு இவரை இரண்டுதரம் காண வந்தார். இந்திய ஜனாதிபதி ராஜேந்திரர் வந்து பிஹாரில் தமக்குள்ள நிலத்தில் எவ்வளவு வேண்டுமானாலும் தானம் வழங்கத் தயார் என்று விநோபாவிடம் தெரிவித்தார். தேசியத் திட்டக் கமிஷனைச் சேர்ந்தவர்கள் இவருடன் தம் திட்டம்பற்றிப் பல மணி நேரம் கலந்து ஆலோசித்தார்கள். தோழர் அஜய் கோஷ் தலைமையில் கம்யூனிஸ்டுகளும் இவரைக் காண வந்தார்கள். பதினொரு நாள் புது டில்லியில் தங்கிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார். நகரங்களென்றால் இவருக்குப் பிடிப்பதில்லை.

மூன்று மாதங்களுக்கு முன் பிஹாரில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருக்கும்போது மலேரியா கண்டு மிகவும் அவதிப்பட்டார். ஜுரம் 103 டிகிரி இருந்தபோதிலும் நடந்தே வந்தார். பிறகுதான் மாட்டுவண்டியில் பிரயாணம் செய்யத் தொடங்கினார். சாண்டில் என்ற கிராமத்துக்கு வந்ததும் அதற்குமேல் போக முடியாமல் படுத்த படுக்கையாகக் கிடந்தார். மருந்து எதுவும் சாப்பிட மறுத்துவிட்டார். "ஆண்டவன் இப்படியே என்னைக் கொண்டுபோனாலும் போகட்டும்; இல்லாவிட்டால் எழுந்து மீதிக் காரியத்தைப் பூர்த்தி செய்யச் சக்தி அளித்தாலும் அளிக்கட்டும். எல்லாம் அவன் அருள்" என்று சொல்லிவிட்டார். பாட்னா ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகப் பார்த்தார்கள். "பாட்னாவில் மட்டும் மனிதர்கள் சாகிறதில்லையா?" என்று சொல்லி அங்கே போக மறுத்துவிட்டார். மக்கள் இவர் தங்கிய வீட்டைச் சுற்றிக் கூடிவிட்டார்கள். பல இடங்களிலிருந்து பிரபல ராஜ வைத்தியர்களை மந்திரிகளும் அதிகாரிகளும் அனுப்பிவைத்தார்கள். ராஜேந்திர பாபுவே வந்து மருந்து சாப்பிடும்படி கேட்டுக்கொண்டார்.

மருந்தில் மாமிச சம்பந்தமானது எதுவும் இராது என்று வைத்தியர்கள் சொன்னதன்மேல் அதை உட்கொள்ளச் சம்மதித்தார். உடம்பு விரைவில் தேறத் தொடங்கியது. நேருவும் ராஜேந்திர பாபுவும் மறுபடியும் இவரைக் காண விமானமூலம் வந்தார்கள். இதற்குள் விநோபாவின் சிஷ்யர்கள் பூமிதான யக்ஞத்தில் ஈடுபட்டுப் பிஹாரில் 33,000 ஏக்கர் நிலம் சேர்த்துவிட்டார்கள். மறுபடியும் இவர் அங்கிருந்து பிரயாணம் புறப்படும்போது மக்கள் இன்னும் ஏராளமாகப் பூமிதானம் வழங்கினார்கள். குறித்துக்கொள்ளக்கூட முடியாதபடி தானபத்திரங்கள் குவிந்துவிட்டன. இப்படி 110 மைல் பிஹாரில் சுற்றுப்பிரயாணம்

செய்து சமீபத்தில் இன்னும் 3,65,000 ஏக்கர் சேர்த்து விட்டார்.

இப்போதெல்லாம் விநோபா பூக்கிளிட் எழுதிய 'எலிமெண்ட்ஸ்', ஈஸாப் கதைகள், 'பகவத் கீதை' இந்த மூன்று புத்தகங்களைத்தான் படித்து வருகிறார். காந்தியைப் போலவே இவரும் பகவத் கீதையைத் தமக்கு வழி காட்டும் நூலாகக் கருதிவருகிறார். மகாபாரதத்தின் ஒரு பகுதி பகவத் கீதை. வேதம், உபநிஷதம் இவைகளை விட இது பிற்பட்டது என்றாலும் இந்துக்கள் இதைத் தம் புண்ணிய நூல்களில் ஒன்றாகப் போற்றிவருகிறார்கள். சிறையில் இருக்கும் போது விநோபா ஞாயிற்றுக்கிழமைதோறும் கீதையைப்பற்றி உபந்நியாசம் செய்வது வழக்கம். கீதையை மராட்டியில் செய்யுளாகவே மொழிபெயர்த்திருக்கிறார். இது 10 லட்சம் பிரதிகளுக்குமேல் விற்பனையாகி யிருக்கிறது.

கீதை ஆண்டவனோடு ஐக்கியமாகக் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்ற மூன்று வழிகளை வகுத்திருக்கிறது. குருக்ஷேத்திர யுத்தகளத்தில் அர்ஜுனன் பகைவர்களாக இருந்தும் சகோதர முறையுள்ள தன் சுற்றத்தாரை எப்படிக் கொல்வது என்று தயங்குகிறான். அப்போது கிருஷ்ண பகவான், தன்னலம் கருதாமல் ஒரு காரியத்தைச் செய்யும் போது அப்படிச் செய்வது பாவமாகாது என்றெல்லாம் உபதேசிக்கிறார். "இது நிஜமாகவே நடந்த யுத்தம்" என்று பல அறிஞர்கள் சொன்னாலும்அஹிம்ஸா தர்மத்தில் ஊறிய மகாத்மா காந்தி, "இது நம் இருதயத்தில் உள்ள தீமைக்கும் நன்மைக்கும் ஏற்படும் போராட்டத்தை உருவகப்படுத்தும் நூல்" என்றே நம்பினார். விநோபா சிறந்த கர்மயோகி. "பலனை எதிர்பாராமல் தர்மத்தைச் செய்" என்ற கீதையின் வாக்கை அப்படியே கடைப்பிடித்து வருபவர். யோகாசன முறையினால் உடலையும் மனத்தையும் கட்டுப்படுத்தினால் தான் இது சாத்தியம்; அன்பு, பிரார்த்தனை இவற்றின் மூலம் தியானத்தில் ஈடுபட்டால் ஞானியாகலாம் என்று நம்புபவர் விநோபா.

இவர் மற்ற மத நூல்களையும் படித்து அவற்றைப் போற்றி வருகிறார். ஆகவே, இதற்குமுன் பல நாடுகளில் அன்பு வழியைக் கடைப்பிடித்துப் பல அரிய காரியங்களை எத்தனையோ மகான்கள் சாதித்தார்கள் என்பதை உணர்ந்தவர் இவர். இந்த நூற்றாண்டில் அதற்குப் புது மெருகு கொடுத்துப் பூமிதானத் தொண்டில் இவர் ஈடுபட்டு வருகிறார்.

"சமுதாயத்தையே அடியோடு மாற்றி அமைக்க வேண்டும். நெருப்பு, தன்மேல் பானையில் நீர் வைத்துச் சோறு கொதிக்க வேண்டும் என்று காத்திருக்கிறது. அது தன் பாட்டுக்கு எரிந்து கொண்டிருக்கிறது; அது தன் கடமையைச் செய்துகொண்டிருக்கிறது. அதைப்போல் அவரவர் தவறாமல் தம் கடமையைச் செய்ய வேண்டும். ஆகவே, மக்கள் தங்கள் சிக்கல்களைத் தாங்களேதான் தீர்த்துக்கொள்ள வேண்டும். நான் அதற்கேற்ற சூழ்நிலையை அமைத்து வருகிறேன்; அவ்வளவுதான். அப்புறம் கேட்பானேன்? யாரைக் கேட்டாலும் தானம் வழங்கத் தயாராக இருப்பார்கள்" என்கிறார் விநோபா.

மூக்கை மாற்றலாம்

★

மூக்கு கோணல் மாணலாகவோ, அதிக நீளமாகவோ, அகன்று விகாரமாக இருந்தால் அந்தமாதிரி ஆசாமிக்கு எரிச்சலும் ஆத்திரமும் உண்டாவது சகஜம். கவிஞர்களும் நாடக ஆசிரியர்களும், ''முக வசீகரத்தையே அது கெடுத்துவிடும்'' என்று எழுதியிருக்கிறார்கள். பிரபல பிரெஞ்சு வீரனான நெப்போலியன், ''ஒரு மனிதனின் குணத்தை அவன் மூக்கிலிருந்து கண்டுகொள்ளலாம். நீள மூக்கு ஆசாமியாக ஒருத்தன் எனக்கு வேண்டும்'' என்பாராம்.

இப்போது பிரபல விகட நடிகராக விளங்கும் ஒருவர் இந்த மாதிரி மூக்கினால்தான் பெயர் எடுத்தாராம். சண்டையிலோ விபத்திலோ அடிபடாமல் சகஜமாக மூக்கும் முழியுமாக இருப்பவர்களுக்கு இதெல்லாம் ஒன்றும் பிரமாதமாகப் படாது. ஆனால் அநேகம் பேர், 'நம் மூக்கு மட்டும் சரியாக இருந்தால் எவ்வளவோ முன்னுக்கு வந்திருக்கலாமே' என்றுதான் எங்குகிறார்கள். இந்த மாதிரி ஆசாமிகளுக்கு எற்றது ப்ளாஸ்டிக் ரண சிகிச்சை. இந்த முறையினால் நமக்கு எப்படி விருப்பமோ அப்படி நம் மூக்கை ஓரளவு சரிப்படுத்திக் கொள்ளலாம்.

ஃபிலடெல்ஃபியாவில் ப்ளாஸ்டிக் ரண சிகிச்சையில் தேர்ந்த மூன்று பிரபல வைத்தியர்கள் இருக்கிறார்கள். அங்கிருந்து ஓர் அம்மாள், ''என் மூக்கெல்லாம் குழி விழுந்து விகாரமாக இருக்கிறது. எக்ஸ்-ரே சிகிச்சை முதலிய என்ன என்னவோ செய்தும் ஒரு பலனுமில்லை. மேற்குக் கடற்கரைப் பக்கமாக எங்காவது போய் ப்ளாஸ்டிக் சிகிச்சை செய்துகொள்ள வேண்டும்'' என்று லூஷியஸ் டபிள்யூ. ஜான்ஸன் என்ற பிரபல ப்ளாஸ்டிக் ஸர்ஜனுக்கு எழுதியிருக்கிறாள்.

மெக்ஸிகோவிலிருந்து இன்னோர் அம்மாள், ''எனக்கு வயது நாற்பது ஆகிறது. சிறுவயதில் மூக்கில் அடிபட்டு அது கோணிவிட்டது. என் புருஷருக்கு என்னோடு வசிக்கவே அவமானமாக இருக்கிறது. அவர் வேறு இளம் பெண்கள்மேல் நாட்டமாக இருக்கிறார். நான் வட அமெரிக்காவுக்குப் போய் ப்ளாஸ்டிக் சிகிச்சை செய்துகொள்வதாக இருக்கிறேன்'' என்று அதே ஸர்ஜனுக்கு எழுதியிருக்கிறாள்.

கடவுள் படைத்த படைப்பை மாற்ற முடியுமா என்று சொல்வதுண்டு. அப்படிக்கூட ஒரு ரண சிகிச்சை அமெரிக்காவில் பரவி வருகிறது. அதுபற்றிய விவரமடங்கிய இந்த விஷயத்துக்கு ஆதாரம் 'யுவர் ஹெல்த்' என்ற பத்திரிகையில் உள்ள ஒரு கட்டுரை.

ஹவாய் தேசத்துப் பையன் ஒருவனுக்கு மூக்குச் சப்பையாக இருக்கிறதாம். அவன், "பெண்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். இதை எப்படியாவது சரிப்படுத்தியாக வேண்டும் என்கிறாள் என்னை மணக்கப் போகும் பெண். நான் அங்கே வந்து சிகிச்சை செய்துகொள்ள வேண்டும்" என்று அவருக்கு எழுதியிருக்கிறான்.

டெக்ஸாஸ் நகரில் ஒரு பெரிய கடையில் வேலை பார்க்கும் 40 வயது அம்மாள் ஒருத்தி, "எனக்குப் பிடிக்காத ஒரு பெண்ணை எனக்குத் துணையாக வேலையில் அமர்த்தியிருக்கிறார்கள். இனிமேல் உடைத் தினுசுகளை வாங்கி வர வெளியூருக்கு என்னை அனுப்பப் போகிறதில்லையாம்; அவளை அனுப்பப் போகிறார்களாம். என் மூக்கு நுனி அகலமாக இருப்பதே காரணம். எப்படியாவது சிகிச்சை செய்து அதைச் சரிப்படுத்த வேண்டும்" என்று அந்த ஸர்ஜனுக்கு எழுதியிருக்கிறாள்.

இவர்கள் அந்த ப்ளாஸ்டிக் ஸர்ஜனை நேரில் பார்த்ததுகூட இல்லை; ஆனாலும் மனம் விட்டுத் தங்கள் குறையை எழுதியிருக்கிறார்கள் என்றால் ஆச்சரியமாக இல்லையா? முறக்காதும், கோணல் மூக்கும் இருப்பவர்கள் ஏளனம் பொறுக்காமல் கொடியவர்களாக மாறிவிடுவார்கள் என்று ஆராய்ச்சியாளர் கண்டறிந்திருக்கிறார்கள். ஒன்று, தான் மிகவும் மட்டம் என்ற உணர்ச்சி இதனால் ஒருவனுக்கு ஏற்பட்டு அவன் குன்றிப் போய் விடுவான்; இல்லாவிட்டால், உலகத்தின்மேல் பழி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற முரட்டுப் பிடிவாதம் அவனுக்கு வந்துவிடும்.

சுமார் 5,000 ஆண்டுகளுக்குமுன் இந்தியாவில் மூக்கு ரண சிகிச்சை புழக்கத்தில் இருந்திருக்கிறது. வெற்றிகரமாக அந்தக் காரியத்தை இந்தியர்கள் செய்திருக்கிறார்கள். அரசர்கள் ஒரு நகரத்தை முற்றுகையிட்டுப் பிடித்ததும் அங்கிருந்த மக்களை அடிமைகளாக்கிக் கொள்வார்களாம். அதற்கு அடையாளமாக அவர்கள் மூக்கை அரிந்துவிடுவது வழக்கம். தன் மனைவி பிறத்தியாரிடம் சற்றுச் சிரித்துப் பழகுகிறாள் என்று புருஷனுக்குப் பட்டால் போதும்; அவள் மூக்கை அரிந்துவிடுவானும்! மனைவியை அடக்கி வைப்பது புருஷன் கடமை என்று எண்ணி வந்த காலம் அது.

அந்தக் காலத்தில் ஓடு அறுப்பவர், மூக்கை அறுத்துச் சிகிச்சை செய்வது இந்தியாவில் வழக்கமாம். இவர்கள் தாழ்த்தப்பட்ட ஜாதியார். மனிதர், மிருகங்களின் பிணங்களை அறுத்து இவர்களுக்குப் பழக்கம் உண்டு. பிணத்தை நெருங்கினாலே தீட்டுப்பட்டு விட்டதாகக் கொள்வார்கள் இந்துக்கள். ஆகவே, மிகவும் இழிவானவர்களே-விமோசனமே இல்லை என்று கைவிடப்பட்டவர்களே- துணிந்து பிணத்தைத் தொடுவார்கள்.

ஓடு அறுக்கும் அந்த ஜாதியார் செய்து வந்த முறையில்தான் இன்றும் மூக்கைச் சரிப்படுத்த ரண சிகிச்சை செய்கிறார்கள். வலி தெரியாதிருக்க மயக்க மருந்தைக் கொடுக்கும் முறை எவ்வளவோ அபிவிருத்தி அடைந்திருக்கிறது; ரண சிகிச்சைக்குரிய கருவிகளும் மிக நுண்மையாக இருக்கின்றன. என்றாலும், சிகிச்சையின்

அடிப்படையான அம்சங்கள் அப்படியேதான் இருந்து வருகின்றன.

முக்கால்வாசிப் பேர் இந்த மாதிரி ரணசிகிச்சை செய்து கொள்ளத் தொலைவில் ஏதாவது இடத்துக்குத்தான் போக விரும்புகிறார்கள். உள்ளூரிலேயே இருந்தால் தங்களுக்குத் தெரிந்தவர்கள் அதுபற்றியே பேசிக்கொண்டிருப்பார்கள்; கூச்சமாக இராதா? ஆகவே, எங்காவது போய்ச் சிகிச்சை முடிந்ததும் ஊருக்கு வந்தால்தான் அவர்களுக்கு நிம்மதியாக இருக்கும். அதற்குள் காயவடுவும் ஒரு விதமாக மறைந்துவிடும்.

உங்களுக்குப் பிடித்த இடமாகப் பார்த்து அங்கே ரண சிகிச்சை செய்துகொள்ள முடிவு செய்யும்போது சிகிச்சை செய்பவர் சரியான வைத்தியரா என்பதையும் கவனிக்க வேண்டும்.

இப்போது ஏராளமான பேர் இப்படி ரண சிகிச்சை செய்து கொள்வதால் இந்தத் துறையில் வைத்தியர்கள் அதிகமாகத் தேவை. சுமாரான பேர்வழிகள்கூடப் பிரமாத வைத்தியர் என்று தம் பெயரைத் தம்பட்டம் அடித்துக் கொண்டுவிடுகிறார்கள். ஆகவே, உஷாராக இருப்பது அவசியம்.

'ப்ளாஸ்டிக்' ரண சிகிச்சை செய்பவர் அந்தத் துறையில் அறிவு, பயிற்சி, அநுபவம், நேர்மை உள்ளவராக இருக்க வேண்டும். அவருக்குக் கலை நோக்கு வேண்டும்; அவர் தோற்றம் கவர்ச்சியாகவும் இருக்க வேண்டும். இவையெல்லாம் அவரிடம் இருந்தால் வருவோரின் மன நிலையை நன்கு அறிந்து அதற்கேற்றபடி ரணசிகிச்சை செய்யலாம். இந்த மாதிரி வைத்தியர்கள் விளம்பரம் செய்யவேண்டிய அவசியமே இராது. அவர்களைத் தேடிக்கொண்டு தாங்களாகவே அநேகம் பேர் சிகிச்சை பெற வருவார்கள்.

வைத்தியரின் தோற்றமும் அவர் சுபாவமுந்தான் முக்கியம். நம்மோடு பேசிப் பழகும்போது அவர் சுபாவம் நமக்குப் பிடிக்காவிட்டால் அவரிடம் சிகிச்சை பெற்றும் திருப்தி ஏற்படாது.

வைத்தியர் கலைநோக்கு உள்ளவராக இருந்தால் அகன்ற முகத்துக்கு மெல்லிதாக வளைந்த மூக்கு அமைக்காதபடி கவனித்துக்கொள்வார். சில ப்ளாஸ்டிக் வைத்தியர்கள் எந்த முகத்துக்கும் ஒரே மாதிரி மூக்குத்தான் அமைப்பது வழக்கம். சிகிச்சை பெறுபவர் சற்று ரோஷக்காரராஞல் அவர் மனசுக்குக் கஷ்டமாக இருக்கும்.

சில வைத்தியர்கள் முதலில் மன நிலையை ஆராயும் நிபுணர்களிடம் போய் அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டு வாருங்கள் என்று யோசனை சொல்லலாம். அதனால் நம்மை அவர் ஏதோ பிச்சு என்று எண்ணிக்கொண்டு விட்டார் என்று கோபங்கொள்ளக் கூடாது. நம் முகச் சாயல் மாற வேண்டும் என்பதற்கு மூல காரணம் என்ன என்றும் நம் சுபாவத்தைப்பற்றியும் அவருக்குத் தெரிந்தாக வேண்டும். இதனால் நமக்குத் திருப்தி அளிக்கும்படி சிகிச்சை செய்ய முடியும்.

சில சமயம் காரணம் காட்டி ரணசிகிச்சையேகூடத் தேவை இல்லை என்று வைத்தியர் சொல்லிவிடலாம். கைதேர்ந்த ப்ளாஸ்டிக் வைத்தியர் தாம் பிரமாதமாகச் சாதித்துவிட முடியும் என்று பெருமை அடித்துக்கொள்ள

மாட்டார். அப்படி யாராவது சொன்னால் அந்த மாதிரி ஆசாமியை நம்பக்கூடாது. நேர்மையுள்ள வைத்தியரானால் முன்னதாக இப்படி இப்படி நேரலாம் என்று நம்மிடம் எச்சரிப்பார். சிகிச்சை பெறுபவர்களுக்குத் திருப்தி ஏற்படும்படி நடந்துகொண்டால்தான் அவருக்குச் செல்வாக்கு ஏற்படும்.

அவருடன் ஃபீஸ் விஷயமாகவும் ஆஸ்பத்திரியில் தங்கும்போது செலவு எவ்வளவு ஏற்படும் என்றும் முதலிலேயே பேசித் தீர்மானித்துக் கொண்டுவிட வேண்டும். இல்லாவிட்டால் வீண் மனஸ்தாபம் ஏற்படும்.

அமெரிக்காவில் வைத்தியர் நல்ல அநுபவமுள்ளவரா என்பதை அந்த அந்த ஊரில் உள்ள வைத்திய சங்கடைரக்டரியைப் பார்த்தோ ஆஸ்பத்திரி மூலமோ தெரிந்துகொள்ளலாம். 1937-இல் நிறுவியது அமெரிக்கன் போர்டு ஆவ் பிளாஸ்டிக் ஸர்ஜரி என்ற ஸ்தாபனம். தேர்ச்சி பெற்றவர் என்றால் அதில் சர்ட்டிஃபிகேட் வாங்கியிருப்பார். வைத்தியத் துறையில் 9 வருஷ அநுபவமும் பயிற்சியும் உள்ளவராக இருந்து குறைந்தபட்சம் 2 வருஷகாலமாவது ப்ளாஸ்டிக் ஸர்ஜரி செய்து பழக்கமுள்ளவராக இருந்தால்தான் அந்த ஸ்தாபனத்தார் சர்ட்டிஃபிகேட் வழங்குவார்கள். அதற்கு முன் பலவிதமாகப் பரீட்சித்துப் பார்ப்பார்கள்.

இந்த ஸ்தாபனத்தார் வெளியிட்டிருக்கும் வைத்தியர்களின் ஜாபிதா பிரதேச வாரியாக அகராதி முறையில் அமைந்துள்ளது. அந்த அந்த வைத்தியரின் பெயருகில் அவரவருடைய கல்வி, பயிற்சி, இன்ன ஆஸ்பத்திரியில் இருக்கிறார் என்ற விவரம் இருக்கும். இப்படித் தேர்ந்து அநுபவப்பட்டிருப்பதோடு அமெரிக்கன் காலேஜ் ஆவ் ஸர்ஜன்ஸ் என்ற ஸ்தாபன வருஷாந்தர வெளியீட்டிலும் அவர் பெயர் இருக்கிறதா என்று பார்த்தால், அவர் பிரபலஸ்தர் என்று தெரியும். பிறகு வைத்தியரை நேரில் கண்டோ கடித மூலமோ சிகிச்சை பெற ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

சிகிச்சைக்கு முன் பரீட்சித்துப் பார்க்கும்போது முகத்தைப் பல விதமாகப் போட்டோ எடுப்பார்கள். மூக்கைப் பல தினுசில் காரையில் பதித்து அச்சு எடுப்பார்கள். இதைக் கண்டு மிரளவும் வேண்டியதில்லை; விஷயம் அபாரமாக இருக்கிறதே என்று வியப்படையவும் வேண்டியதில்லை. அடிக்கடி வைத்தியர் இப்படி விவரங்களைப் பதிவு செய்து வருவது சகஜம். வைத்திய மாணவர்களுக்குப் போதிக்கும்போது இந்த விவரங்கள் பயன்படும். இப்படிப் பதிவு செய்வதால் சிகிச்சை பெறுபவரின் முகத்தோற்றம் முன்னை விடப் படிப்படியாக மாறுகிற விதம் வைத்தியருக்குப் புலனாகும். இன்னொரு முக்கியமான விஷயம்: சில பேருக்கு எவ்வளவுதான் நன்றாகச் சிகிச்சை செய்திருந்தாலும் திருப்தியாகப் படாது. பின்னால் அவர்கள் அப்படி வீண் வழக்கு ஏதாவது தொடுத்தாலும், 'உங்கள் சம்மதப்படிதான் சிகிச்சை நடந்தது' என்று அத்தாட்சி காட்ட முடியும்.

மொத்தத்தில் மூக்கு விகாரமாக இருப்பவர்கள் கவலைப்பட வேண்டாம். ப்ளாஸ்டிக் ரணசிகிச்சை மூலம் அதைச் சரிப்படுத்தி விடலாம். நல்ல வைத்தியராகத் தேடிப் பிடிக்கவேண்டும். அதுதான் முக்கியம்.

கார்ட்டூன் கதம்பம்



ஐரோப்பாவில் அமெரிக்கா சுழற்றும் பெருந்தடி.

—'தி ஸெயிண்ட் லூயி க்ளோப் டெமொக்ராட்'

மொழிவாரி ராஜ்ய ஸர்ப்பங்களின் ஆட்டம்.

—'சங்கர்ஸ் வீக்லி'



போட்டா போட்டித் தூண்டில்.

—'தி க்றிஸ்தியன் ஸயின்ஸ் மானிட்டர்'

கயிற்றுக் கம்ப ஜாலம்.

—'ப்ளிட்ஸ்'

இணையற்ற நம்முடைய இந்தக் கலைக்குப் பிரசாரம் வேண்டாமா?

இந்தியச் சிற்பம்

டி. ஜி. வியாஸ்

இந்தியச் சிற்பங்கள் அலாதியான ஒரு பண்பைக் கொண்டவை; உலகெங்கும் பரவியிருப்பவை.

உலக ம்யூஸியங்களிலெல்லாம் அவை முக்கிய இடம் பெற்றிருக்கின்றன. இந்தியாவில் பல இடங்களிலும் ம்யூஸியங்களிலும் அவற்றைக் காணலாம். பூமிக்குள்ளிருந்து அநேகம் பழைய சிற்பங்கள் அடிக்கடி அகப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

இந்தியாவில் அவ்வப்போது தோன்றிய கலை மறுமலர்ச்சியை இந்தியச் சிற்பங்கள் விசேஷமாகப் பிரதிபலிக்கின்றன. வெவ்வேறு காலத்துச் சிற்பங்களாயினும், எல்லாம் ஒரே பாணியில் அமைந்திருக்கின்றன; எல்லாவற்றுக்கும் பொதுவான ஓர் ஒருமைப்பாடும் தென்படுகிறது. இந்த அம்சம் இந்தியச் சிற்பங்களின் தனிச் சிறப்பாகும். களிமண்ணோ, கல்லோ எதைக் கொண்டு செய்திருந்தாலும் சரி; வார்ப்படம், செதுக்கல், சிற்றுளி கொண்டு கொத்துதல் இப்படி எந்த முறையில் செய்திருந்தாலும் சரி - இந்தியச் சிற்பங்களின் பாணியிலும் உருவத்திலும் அடிப்படையான மாறுதலைக் காண முடியாது. ஆனால், வெவ்வேறு பிரதேசங்களின் தனிப் பண்புகளுக்கு எற்ற படி சிறு சிறு மாறுதல்களை மட்டும் காணலாம்.

எல்லோராச் சிற்ப நகல்; ராம் படீல் வரைந்தது.

இயற்கையை அநுசரித்தே இந்தியச் சிற்பங்களை அமைக்கிறார்கள். ஆயினும், அவற்றில் மனித உருவம் இனிமையான சிறிது மாறுதலைப் பெற்றிருக்கும். இந்தியர் வகுத்துக்கொண்டுள்ள சாமுத்திரிகா லட்சணமும், அலங்காரமான முறையில் கருத்துக்களை அவர்கள் வெளியிடும் வழக்கமுமே இதற்குக் காரணம். புராதனக் கலை என்று உலகமெல்லாம் கொண்டாடும் கிரேக்க, ரோமன் சிற்பங்களிலிருந்து மாறுபட்டுத் தனிச் சிறப்பு வாய்ந்திருப்பவை இந்தியச் சிற்பங்கள்.

மூலம்: பம்பாய்க் கிரானிக்கிள் (இங்கிலீஷ்; 15-2-'58), பம்பாய்.

அழகு, உயிர்த் துடிப்பு இந்த இரண்டு அம்சங்களிலும் இந்தியச் சிற்பங்களுக்கு ஈடு ஜோடியான வேறு சிற்பங்களே இல்லை. அளவைக் கொண்டு பார்த்தாலும், ஏராளமான பழைய சிற்பச் செல்வங்களை இந்தியா பிதுரார்ஜிதமாகப் பெற்றிருக்கிறது. இந்தியச் சிற்பங்களைக் கலா ரசிகர்கள் ஆவலோடு தேடுகிறார்கள்; ம்யூஸியங்கள் வாங்கி வைக்கின்றன. இப்படியெல்லாம் இருந்தும், இந்தியச் சிற்பத்துக்கு உலகம் போதிய பெருமை அளிக்கவில்லை; அநீதியும் இழைத்திருக்கிறது.

இந்தியச் சிற்பத்தின் அடிப்படையான சிறப்பைச் சில கல்விமான்கள் உணரவில்லை. மதத்தை அடிப்படையாகக் கொண்டது என்று இந்தியச் சிற்பத்தை அவர்கள் வகைப்படுத்தியிருக்கிறார்கள். இப்படிச் செய்த பின், வெவ்வேறு சிற்ப உருவங்களும் வெவ்வேறு மத ரீதியில் அமைந்தவை என்று விலாசம் ஒட்டிவிடுகிறார்கள். கிரேக்கச் சிற்பக் கலையின் செல்வாக்கு இந்தியச் சிற்பக் கலையைப் பெரிதும் உருவாக்கியிருப்பதாகக்கூடச் சிலர் சொல்லுகிறார்கள்.

ஆனால், பிற்காலத்திய ஐரோப்பிய அறிஞர் சிலர் இந்தியக் கலையை ஆராய்ந்து பார்த்தபின், இந்தியக் கலை ஒருபோதும் ஒரு மதத்துக்குரியதாக இருந்ததில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். சகல மதங்களும் சேர்ந்தே, இந்தியக் கலைக்குப் பொதுவான ஓர் ஐதிகத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன என்றே அவர்கள் சொல்லுகிறார்கள்.

இந்தியச் சிற்பம் பரிபூர்ணம் பெற்று ஒளி வீசத் தொடங்கி

மற்றோர் எல்லோராச் சிற்பம்; இதுவும் ராம் படில் செய்ததே.

விட்டது. அப்படியிருந்தும், உலகத்திலே கிரேக்கச் சிற்பத்துக்கு அடுத்தபடியாக இரண்டாவது ஸ்தானமே அதற்கு இன்னமும் இருந்து வருகிறது. சீனு, ஜப்பான், இண்டொனீசியா இந்த நாடுகளிலெல்லாம் இந்தியச் சிற்பத்தின் செல்வாக்கு நேரடியாகப் பரவியிருக்கிறது. இருண்ட காலமென்று சரித்திராசிரியர்கள் வர்ணிக்கும் காலத்திலேயே, இந்தியாவுக்கு வெளியிலே இந்தியாவின் செல்வாக்கினுல் மிக நேர்த்தியான கலைப் பொருள்கள் சிருஷ்டியாகியிருக்கின்றன. இப்படியெல்லாமிருந்தும், இந்தியக் கலைமீதுள்ள தப்பபிப்பிராயம் மாறவில்லை; அதன் பெருமை உயர்வதற்கு மற்றவர் இடம் கொடுக்கவில்லை.

கிரேக்கக் கலையில் சிரத்தையுடையவர்கள் அடிக்கடி அதைப் பற்றிப் பிரசாரம் செய்வதால் தான், அதற்கு உயர்ந்த ஸ்தானம் இருந்து வருகிறது என்று பாரபட்சமற்ற சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அது எப்படியாயினும்

சரி; உலகத்துக் கலைக்கூடங்களி லெல்லாம் புராதனக் கலையாகக் கிரேக்கச் சிற்பக் கலையைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இவ்வளவு பெருமை அதற்குக் கிடைத்திருக்கிறது.

இந்தியக் கலாசாலைகளி லேயே சமீப காலம் வரைக்கும் இந்தியச் சிற்பம் ஒன்றைக்கூட வைக்காமல், கிரேக்க, ரோமன் சிற்பங்களையே ஏராளமாக மாதி ரிக்கு வைத்திருந்தார்கள். திரி மூர்த்தி, நடராஜர், ஸாரநாத புத்தர் இந்த மாதிரி எத்தனையோ சிலைகள் உலகத்தின் சிற்ப அற்பு தங்கள் என்று பெயர் எடுத்திருக் கின்றன. இவைகளையெல்லாம் என் கிரேக்கச் சிற்பத்துக்குக் கீழ்ப் பட்டவையாக மதித்து ஒதுக்கினார் கள் என்று தெரியவில்லை. பிரசாரம் இல்லாததால்தான் இந்தியச் சிற்பத் துக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது.

புராதன இந்தியச் சிற்பங்களுக் குள்ளே தாஜ் மகலை அடிக்கடி புகழ்ந்து ஏராளமான பேர் எழுது கிறார்கள். தாஜ் மகல் அழ கானதுதான். ஆனால், க்ஷேத்திர கணித ரீதியாகத் திட்டம் தயா ரித்து அதன்படி கட்டிய ஒரு கட்டிடமே அது. அதனோடு எல்லோரா கைலாசத்தை ஒப் பிட்டுப் பார்த்தால், மலையில் குடைந்து செதுக்கிய சிற்ப அற் புதம் அது என்பது விளங்கும். எல்லோரா கைலாசம், மலையில் குடைந்த ஒரு கோயில். அதில் கட்டிடக் கலையும் சிற்பக் கலை யும் இணைந்திருக்கின்றன. இந்த முறையில் எல்லோரா கைலாசத் துக்கு ஈடு ஜோடியே இல்லை.

இந்தியாவின் புராதனச் சிற்பக் கலை அதற்குரிய பெருமையைப் பெறும்படி செய்விக்கக் கூடிய அந்தஸ்து இப்போது இந்தியாவுக் குக் கிடைத்திருக்கிறது. வெளி நாடுகளில் ஏற்பாடு செய்விக்கப் பெறும் கண்காட்சிகளால் ஒன் றும் பயனேற்படாது. தன் னுடைய பிதுரார்ஜிதமான கலைச் செல்வம், உலகத்துக் கலைக்கே பெரிதும் உதவியிருக்கிறது என்று இந்தியா அழுத்தமாய் எடுத்துரைத்தாக வேண்டும். அதுவே பயன் தரும்.

காய்ச்சல் எவ்வளவு டிகிரி?

ஒரு பெண் தன் கணவரின் உடம்பில் தெர்மாமீட்டரை வைத்துப் பிறகு எடுத்து எவ்வளவு டிகிரி என்று பார்த்தாள். வெளிச்சம் போதாததால் எழுத்துத் தெரியவில்லை. நெருப் புக் குச்சியைக் கிழித்து அதன் ஒளியில் பார்த்தாள். 160 டிகிரி உஷ்ணம் இருந்தது.

உடனே அவள் மிரண்டு போய், ஃபோனில் டாக்டரை அழைத்து, "160 டிகிரி காய்ச்சல் அடிக்கிறது என் கண வருக்கு. உடனே வாருங்கள்" என்று கூப்பிட்டாள்.

டாக்டர் இதைக் கேட்டு, "இதற்கு நான் வந்து பய னில்லை, அம்மா. தீயணைக்கும் படையைக் கூப்பிட்டுக் கொள்" என்றார்.

—'மெடிக்கல் ப்ரோக்ரஸ்'

பழைய கம்யூனிஸம்

அரிஸ்டோஃபேனீஸ் நகைச் சித்திரம்

இப்போதுதான் கம்யூனிஸம் என்ற பொது உடைமை வந்திருப்பதாக நினைப்போம். கி. மு. 444-முதல் 385 வரை வாழ்ந்த இந்தக் கிரேக்க ஆசிரியரின் நகைச் சித்திரக் கற்பனை ஒன்றிலே அதைக் காணலாம். இந்தக் கற்பனை உலகக் கட்டுரை வரிசையை எழுதி வருபவர் அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

நகைச்சுவை வேந்தன் என்ற சொல் அரிஸ்டோஃபெனீஸ் (Aristophanes) என்ற இந்த ஆசிரியருக்குத்தான் மிகப் பொருந்தும். இவர் சுமார் ஐந்து நாடகங்கள் எழுதினதாகச் சொல்லுகிறார்கள். இந்த நாடகங்களில் 11 நாடகங்கள்தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன; மற்ற நாடகங்கள் கால வெள்ளத்தில் மறைந்துவிட்டன போல் தோன்றுகிறது.

தம் காலத்தில் இருந்த சான்றோர்களையும் நிகழ்ந்த சம்பவங்களையும் இவர் எள்ளி நகையாடியிருக்கிறார். அந்தக் காலத்துப் பெரியோர்கள் கண்ட கனவுகளை எப்படிப் பாமர மக்கள் கருதி வந்தார்கள் என்ற விஷயம் இந்த ஆசிரியர் எழுதிய நாடகங்களின் மூலம் நமக்குப் புலனாகிறது. சம்பவங்களை நேர்க் கண்களோடு இவர் பார்க்கவில்லை என்பது மெய்யே என்றாலும், இவர் எழுதிய நாடகங்களில் ஓர் உண்மையொலி கேட்கிறது. 'பொது உடைமை என்றால், எல்லாருக்கும் பெண்கள் பொது; ஒருவரும் வேலை செய்ய வேண்டியதில்லை; ஒவ்வொருவரும் கண்டபடி உணவருந்தலாம்; குடிக்கலாம்' என்றெல்லாம் சாதாரண மக்கள் பேசுகிறார்கள் அல்லவா? இந்தச் சுருதியில்தான் அரிஸ்டோஃபெனீஸ் படைத்த பாத்திரங்களும் பேசுகின்றன. பாமர மக்களின் முறையைக் கைக்கொண்டு இவர் சாக்ரடீஸ், பிளேட்டோ இவர்களைக் கேலி செய்கிறார்.

ஷேக்ஸ்பியரும் தம் 'புயற்காற்று' (The Tempest) என்ற நாடகத்தில் ஒரு லட்சிய நாட்டை, கன்ஸலோ என்ற பாத்திர வாயிலாகச் சிருஷ்டித்திருக்கிறார். "என் நாட்டிலே எந்தவிதமான வியாபாரமும் இல்லை; இலக்கியமுமில்லை. செல்வமும் இல்லை; வறுமையும் இல்லை. அதிகாரிகள் இல்லை. வேலையில்லாமல் மக்கள் திரிவார்கள். கள்ளம் கபடமற்ற தூய பெண்கள்தான் காட்சி அளிப்பார்கள்." ஷேக்ஸ்பியர் நகையாடுகிறாரா? அல்லது தம்முடைய உண்மையான கனவுக்கு உருக் கொடுக்கிறாரா? ஒன்றும் விளங்கவில்லை.

பிளேட்டோவின் குடியரசை அரிஸ்டோஃபெனீஸ் கேலி செய்திருக்கிறார். 'மேகங்கள்' (The Clouds) என்ற இவருடைய நாட

கத்தில் சாக்ரடீஸ் சரியானபடி காட்சி அளிக்கவில்லை. அவரைக் குறித்த உண்மைக்கு மாறான சித்திரம் நம் முன் எழுகிறது. அவருடைய சுபாவத்தை இவர் திரித்து வெளியிட்டிருக்கிறார். ‘தவளைகள்’ (The Frogs) என்ற நாடகத்தில் ஒருவித நியாயமும் இல்லாமல் யுரிபிடீஸ் (Euripides) என்ற நாடகாசிரியரை இவர் தாக்கியிருக்கிறார். அந்த நாடக ஆசிரியரின் நூலில் இவர் தோய்ந்தவராதலால், வரி வரியாக அவரைப் பிய்த்துப் பார்க்கிறார். யுரிபிடீஸ் முற்போக்கானவர். நவீனக் கொள்கைகளை அவருடைய நூலில் பார்க்கலாம். அந்தக் காரணத்தால் அவரை இவர் எளனம் செய்கிறாரா? ‘குளவிகள்’ (The Wasps) என்ற நாடகத்தில் அத்தீனியர்கள் என்ற இனத்தவரை இவர் பரிகசிக்கிறார். வீணே சட்ட விவரங்களில் திளைக்கும் மனப்பான்மை அவர்களுக்கு உண்டாம். அதை இவர் விளக்கியிருக்கிறார். ‘பறவைகள்’ (The Birds) என்ற நூலில் கிரேக்கரின் புராணங்களை இவர் கேலி செய்கிறார். முன்பு பறவைகள் இன்பமாய்ப் பொழில்களில் பாடித் திரிந்தன. ஆனால் அந்தப் பறவைகளுக்கிடையே அழுக்காற்றையும், போட்டி உணர்ச்சியையும், அளவு கடந்த தருக்கையும், கர்வத்தையும் மனிதன் தூண்டி விட்டு விட்டான். தெய்வங்களைவிடத் தாமே சிறந்தவை என்ற விஷ விதையைப் பறவைகளின் உள்ளத்தில் மனிதன் தெளித்துவிட்டான். இதன் மேல் தெய்வங்களை எதிர்த்துப் பறவைகள் போராடின. வெற்றி அடைந்தாலும், தம் நாட்டைக் காப்பாற்றும் பொருட்டுக் கோட்டை கொத்தளங்களைக் கட்டுவதிலும் அரண்கள் சமைப்பதிலும் பறவைகள் பொழுது போக்கத் தொடங்கின. அமைதியாய் இன்பமாய்க் காலங் கழித்த நாட்கள் ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய் ஒழிந்தன. மாந்தர்களின் உணர்ச்சிகளைத் தக்கபடி அறியாது ஆகாயக் கோட்டைகள் கட்டினால் இப்படித்தான் துன்பச் சேற்றில் விழும்படி நேரிடும் என்பதை இந்த நாடகத்தில் இவர் நன்கு காட்டியிருக்கிறார்.

‘எக்கிலிசியாஸுஸீ’ (Ecclesiasuzoe) என்ற இவருடைய நாடகம் கவனிக்கத் தகுந்தது. அதில் ப்ராக்சகோரா (Praxagora) என்ற பெண்மணி ஒரு புதிய சமுதாயத்தை நிறுவப் பார்க்கிறாள். தன் கணவன் ப்ளிப்பிராஸ் (Blepyros) என்பவனோடு அவள் உரையாடுகிறாள்.

மனைவி: நான் நிறுவும் அரசியல் இதுதான். எல்லாரும் சமமே. எல்லாரும் எல்லாச் சொத்தையும் இன்பங்களையும் சரியாய்ப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒருவன் பணக்காரன், ஒருவன் எழை என்ற நிலை மாறவேண்டும். ஒருவனுக்குப் பரந்த நிலபுலங்களும், மற்றொருவனுக்குச் சவக்குழி நிலங்கூட இல்லாமலிருப்பதும் அழகல்ல. ஒருவனுக்கு ஆயிரக்கணக்கான சேவகர்கள் கைகட்டி வாய் புதைத்து நிற்க, மற்றொருவனுக்குச் சேவகனே இல்லாமலிருப்பது அறம் அல்ல. எல்லாருக்கும் ஒரே நியாயந்தான்; எல்லாரும் எல்லாச் செல்வமும் அடைய வேண்டும்.

கணவன்: இந்த நிலையை எப்படி நீ அமைக்கப் போகிறாய்?

மனைவி: நாட்டின் செல்வம், நிலம் முதலிய எல்லாவற்றையும் பொது

வுடைமையாய்ச் செய்துவிடுவேன். அந்த உடைமையிலிருந்து ஒவ்வொருவரும் சம பங்கு எடுத்துக் கொண்டு அதை நுகரவேண்டும்.

க: நிலம் சம்பந்தப்பட்டவரையில் நீ சொல்லுவது சரி. தங்கமும் வெள்ளியும் கையில் வைத்திருந்தால் நீ என்ன உபாயம் செய்வாய்?

ம: அவற்றையும் சமுதாயத்துக்கு அளித்துவிட வேண்டும்.

க: ஒருவருக்கும் தெரியாமல் கையில் அடக்கம் செய்துகொண்டு விட்டால் அப்போது என்ன செய்வாய்?

ம: தாங்கள் சொல்லுவது உண்மைதான். ஆனால் அந்தச் செல்வம் அவனுக்குப் பயன் அளிக்காதே.

க: நீ சொல்லுவது விளங்கவில்லையே?

ம: வறுமையினால் தோன்றும் நிர்ப்பந்தம் இப்போது இல்லையே. மனிதனுக்கு வேண்டிய துணி மணி, சாப்பாடு, பண்டம், பணியாரம் எல்லாம் கிடைத்து விடுகின்றனவே!

க: அதிகமான சாமான்களை அடைந்தவர்கள்தான் மேலும் பெற ஆசைப்படுகிறார்கள்.

ம: அது அந்தக் காலம். அந்த நிலைதான் மாறிவிடுகிறதே. இப்போது சொத்தை வைத்துக் கொண்டிருப்பதால், என்ன பயனை அடையப் போகிறான்? எல்லாப் பண்டங்களுந்தான் பொதுவாய்ப் போய்விடுகின்றனவே.

க: பெண்ணைக் காதலித்தால் அவளுக்குக் காதலன் பரிசு தர வேண்டுமே. அதற்கு அவன் என்ன செய்வான்?

ம: அப்படி ஒன்றும் செய்ய வேண்டிய தேவையில்லை. ஆண்களும் பெண்களும் எல்லாருக்கும் உரியவர்கள். கல்யாணம் முதலிய பந்தங்கள் அந்த ராஜ்யத்தில் இருக்கமாட்டா.

க: அழகு வாய்ந்த ஒரே பெண்ணை எல்லா ஆண்களும் காதலித்துப் போட்டி போட்டால் என்ன செய்வது?

ம: மிக அழகு வாய்ந்த கம்பீரமான பெண்களை நாடி அவர்களின் பக்கத்தில் போய்க் குள்ளர்களும் குரூபிகளும், விகாரமானவர்களும் நிற்கத்தான் நிற்பார்கள். அவர்கள் அவளை அடைவதற்குள் ஒரு கிழவியையோ, வாய்ப்பட்டியையோ காதலிக்க நேரிட்டுவிடும்.

க: பெண்கள் வனப்புள்ள ஆண்களைத்தானே தேர்ந்தெடுப்பார்கள்?

ம: சமுதாய உத்தரவில்லாமல் எந்தப் பெண்ணும் தானே மணந்து கொள்ள முடியாது. அழகு வாய்ந்த ஆண்களின் பக்கத்தில் அழகில்லாத பெண்களுந்தான் வந்து நிற்பார்கள்.

க: தகப்பன்மார் தம் குழந்தைகளை எப்படி உணர்வது?

ம: அவர்கள் உணர்ந்துகொள்ள முடியாது. குழந்தைகள் சமுதாயத்தைச் சார்ந்தவை.

க: நிலத்தை யார் உழுவது?

ம: அடிமைகள்தான் உழுது பாடுபட வேண்டும். உங்களுடைய வேலை சாயங்காலம் உண்டி அருந்துவதே.

க: உடைகளைப்பற்றி என்ன சொல்லுகிறாய்?

ம: அவைகள்தான் நிரம்ப இருக்கின்றனவே.

க: கடன் வாங்கினவன் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் போனால் என்ன செய்வது?

ம: கடன் வாங்கினவன் கொடுக்காமல் போனால் என்ன செய்வது என்கிறீர்களே! எல்லாம் பொது

வுடைமையாயிருக்கும்போது, கடன் கொடுத்தவனுக்கு எப்படி அந்தப் பணம் வந்திருக்க முடியும்?

க: குடித்துவிட்ட குடிகாரன் மற்றவர்களைத் தாக்கினல், என்ன செய்வது?

ம: குடியும் சோறும் அவனுக்குச் சில நாள் நிறுத்தப்படும். அப்போது அவன் இந்தமாதிரியான அலுவல்களில் இறங்க மாட்டான்.

க: திருடர்கள் அந்த ராஜ்பத்தில் உண்டோ?

ம: எல்லாருக்குமே எல்லாம் தங்கள் சொத்தாகிவிடுகின்றனவே! தங்களுடைய சொத்தையே அவர்கள் எப்படித் திருடிக் கொள்ள முடியும்?

இந்தச் சுருதியில் நாடகப் பாத்திரங்கள் பேசுகின்றன. பிளேட்டோவின் 'குடியரசு' இந்திரியங்களை அடக்கிய சான்றோர்களுக்காக ஏற்பட்டது. ப்ராக்ச கோரா சித்திரித்த குடியரசு நாட்டில், பாமர ஜனங்களும் உண்டு களித்து எல்லாச் சுகங்களையும் அடைகிருர்கள். பறவைகள் போலச் சேர்ந்து வாழ்கிருர்கள். பறவைகளின் குடியரசு பிளேட்டோ நிறுவிய குடியரசைவிடப் பதின்மடங்கு சாலச்சிறந்தது என்ற உணர்ச்சியை அரிஸ்டோஃபெனீஸ் தந்த சித்திரம் தூண்டுகிறது. எல்லாவற்றையும் ஒரு கோணலான பார்வை கொண்டு நோக்கினலும், இவர் தந்த சித்திரங்களில் சில உண்மைகள் தோன்ருமலில்லை.

க்விஸ் விடை

(1) செப்டம்பர் இரண்டாம் தேதிக்கு அடுத்த செவ்வாய்க்கிழமையில். (2) சங்க மருவிய பதினெண்கீழ்க் கணக்கில் ஒன்ருன நீதி நூல்; காரியாசான் இயற்றியது. (3) முன்பு. (4) சில சமயம் பெண்ணைக் குறிக்கவும் உபயோகித்திருக்கிருர்கள். ராணி என்று குறிக்கும் 'க்வீன்' என்ற வெறும் சொல் ராஜாவின் மனைவியைக் குறிக்கும். 'க்வீன் ரெக்னண்ட்' என்ற சொற்களே ஆட்சி புரியும் ராணியைக் குறிக்கும். (5) பாரிஸ் நகரில் உள்ள 'பிப்லியோதெகு நேஷனேல்' என்பதுதான். (6) தோற்றவனின் கப்பலில் உள்ள கொடிக்கு மேலே வென்றவன் தன் கொடியைக் கட்டுவது வழக்கம். இறந்த அரசன் எமனிடம் பணிந்ததற்கு அடையாளமாக இப்போதெல்லாம் கொடியைப் பாதி தாழ்த்துகிருர்கள். இந்தக் கொடிக்கு மேலே எமனின் கொடி நம் கண்ணுக்குத் தெரியாமல் பறப்பதாக ஐதிகம். (7) உண்மை; திருப்புவது (ஸ்டீயரிங்) சௌகரியமாயிருப்பதற்காக, முன் சக்கரங்களை இரண்டு 'டிகிரி' உட்புறம் சாய்ந்திருக்கும்படி அமைக்கிருர்கள். (8) ஸூயெஸ் கால்வாய் 100 மைல்; பனமா கால்வாய் 40 மைலுக்குச் சிறிது அதிகம். (9) உண்மைதான். (10) நிலக்கரியிலிருந்து. (11) 8+8+8+88+888 =1,000.

ஒரிஸ்ஸாவின் புதிய தலைநகராகப் போகிற இடம்—

மகிமை வாய்ந்த புவனேசுவரம்

ஸாதனா சட்டோபாத்யாய

ஒரு நாள் பிற்பகல் புவனேசுவரம் ஸ்டேஷனில் வந்து இறங்கினோம்; அங்கே 12 வயது சாரணச் சிறுவன் ஒருவன் எங்களுக்கு வேண்டிய ஒத்தாசையெல்லாம் செய்யத் தயாராகக் காத்திருந்தான். எங்களோடு பேசத் தெரியாவிட்டாலும் கையை ஆட்டியும் முகஜாடை காட்டியும் சைக்கிள்-ரிக்ஷா கொண்டு வருவதாகத் தெரிவித்தான். வேறு நல்ல வண்டி வசதி அங்கே இல்லை. நாங்கள், இரண்டு சைக்கிள்-ரிக்ஷாக்களில் ஏறிப் புறப்பட்டோம். அங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் கோவிலுக்குப் போகும் வழியில் ஹோட்டல் இருந்தது. குறுக்கு வழியாக ரிக்ஷாக்காரன் ஓட்டிக்கொண்டு போனான். ஆனால் பாதியில் ஒரு ரிக்ஷாவின் டயர் வெடித்துவிட்டது. அதனால் போய்ச் சேரத் தாமதமாயிற்று.

புவனேசுவரம் புராதனமான ஸ்தலம். ஒரிஸ்ஸாவின் தலைநகராகப் போகிறது. இப்போது ஆரோக்கிய ஸ்தலமாக இருக்கிறது. ஹோட்டலிலிருந்து கோவில் ஒரு மைல் தொலைவில் இருந்தது. மாலை வெகு நேரமாகிவிட்டதால் ஹோட்டலிலேயே தங்கிவிட்டோம். அன்று தூரத்திலிருந்து பார்த்ததோடு திருப்தியடைந்தோம். மறு நாள் காலை ஸ்வாமி தரிசனம் செய்யப் புறப்பட்டோம்.

புவனேசுவரத்திலிருந்து சற்றுத் தூரத்தில் தனித்தனியே எத்தனையோ இடிந்த கோவில்கள் இருக்கின்றன. அவைகளில் உள்ள சிற்ப வேலை அபாரமாக இருக்கிறது. இப்போது இவைகளில் ஏதோ சில கோவில்களில் மட்டுந்தான் பூஜை நடந்து வருகிறது. ஒரு காலத்தில் புத்த மூர்த்தியாக இருந்த உருவங்களை இப்போது சிவபெருமான் என்று கொண்டாடி வருகிறார்கள் என்று நெருங்கிக் கவனித்ததிலிருந்து தெரிந்தது. பழைய அசோக ஸ்தம்பம் ஒன்று துவஜஸ்தம்பமாக இன்று காட்சியளிக்கிறது.



காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளம்: மே '58), கல்கத்தா.

வயல் வழியாகத்தான் புவனேசு வரர் கோயிலுக்குப் போகவேண் டும். சற்றுத் தூரத்தில் காடு தெரிகிறது. அதில் அங்கும் இங் கும் சில கோவில்களின் சிகரங்கள் தலை காட்டின. ஒரு திருப்பத் தருகில் வந்ததும் பிந்து ஸரோ வரம் என்ற பெரிய குளம் தெரிந் தது. அதன் இரண்டு கரைகளி லும் விசாலமான பாட்டைகள்; வருஷந்தோறும் வைகாசி மாதத் தில் அக்ஷயத் திரிதியை முதல் பன்னிரண்டாம் நாள்முடியப் பிரம் மோற்சவம் நடக்கிறது. இதைச் 'சந்தன யாத்திரை' என்கிறார்கள். புரியில் ஜகந்நாதருக்கு நடப்பது போலவே இங்கும் பொதுவாக உற்சவமும் தேர்த் திருவிழாவும் விமரிசையாக நடைபெறுகின்றன.

பிந்து ஸரோவரத்திலிருந்து கோவிலைப் பார்க்க வேண்டும். பிரமாதமாக இருக்கிறது. குளக் கரையில் ஒரு சிறிய கடை வீதியும் சத்திரமும் இருக்கின்றன. இங்கே எப்போதும் யாத்திரிகர்கள் இருந்துகொண்டேயிருக்கிறார்கள். கோவில் கோபுரவாசலில் பௌத்த காலத்தில் செதுக்கிய சிங்க முகப் புக்களைக் காணலாம். உள்ளே கல் பாவிய பிராகாரம். அதன நடுவே புவனேசுவரரின் கர்ப்பக் கிருகம். இதன் விமானம் மிகவும் உயரமானது. எதிரே கருட ஸ்தம்பம் ஒன்று இருக்கிறது. இது வும் ஒரு காலத்தில் அசோக ருடைய தூணாகத்தான் இருந் திருக்கவேண்டும்.

புவனேசுவரம் சக்ர க்ஷேத்ரம்; அதாவது, விஷ்ணு ஸ்தலம். ஸ்வாமியின் பெயர் அனந்தவாசு தேவர். லட்சுமி தேவியோடு ஹரி ஹர உருவத்தில் காட்சியளிக் கிறார். ஒருபக்கம் சற்று வெளுப்பா கவும் இன்னொரு பக்கம் கறுப்பாக வும் அமைந்த உருண்டை உருவம் இது. ஒரு காலத்தில் இதுவும் சிவ லிங்கமாக இருந்ததோ, மதத் துவேஷிகள்தான் உடைத்து இப்படி உருத் தெரியாதபடி ஆக்கி விட்டார்களோ என்னவோ தெளி வாகத் தெரியவில்லை. பீடத்தின் கீழ் எப்போதும் தண்ணீர் கசந்து கொண்டே இருக்கிறது. கர்ப்பக் கிருகம் இருளடைந்துதான் கிடக் கிறது.

இந்தச் சிலை கறுப்பும் வெளுப்பு மாக இருப்பதற்கு அங்குள்ளவர் வேறு காரணம் சொல்கிறார்கள். "மதத்துவேஷிகள் வருகிறார்க ளென்று கேள்விப்பட்டதும் கோவிலைச் சேர்ந்தவர்கள், சிலை யைக் கோவிலின் நெற்களஞ்சியத் தில் மறைத்துவிட்டார்கள். வந்த துஷ்டர்கள் ஸ்வாமி சிலையைக் காணமல் கடைசியில் நெற்களஞ்சி யத்துக்குத் தீ வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். அப்போது சிலையின் ஒரு பகுதி இப்படிக் கருகிவிட்டது" என்று சொல்லிக் கொள்கிறார்கள். கோவில் மதிலில் உள்ள சிற்ப உருவங்களை யாரும் உடைத்ததாகத் தெரியவில்லை. பெரும்பாலும் மகாபாரதக் கதை யைப்பற்றிய சிற்பங்கள்தான். ஒவ்வொன்றையும் நிதானமாகக் கவனித்தால்தான் அதன் அருமை தெரியும். பிராகாரத்துக்குள் புவ னேசுவரி, பார்வதி, அன்னபூர்ணி, ஷஷ்டி தேவதை, சாவித்திரி இப் படிப் பல தெய்வங்களின் சந்நிதிகளைக் காணலாம். வெளியே விசாலமான ஒரு மேடைமேல் சின்ன மரம் ஒன்று இருக்கிறது. "இதுதான் கற்பக விருட்சம்; இங்கே எதாவது வேண்டிக் கொண்டால் அது நிச்சயமாகப்

பலிக்கும்'' என்கிறார்கள். மரத்தின் உயரம் இரண்டே அடிதான். எப்போதும் அப்படியேதான் இருக்கிறது என்று வதந்தி.

கோவிலிலிருந்து அரை மைல் தொலைவில் 'கேதார-கௌரி குண்டம்' இருக்கிறது. நெருங்கிப் பார்த்தபோது அங்கே மூன்று குட்டைகள் இருந்தன. முதல் குட்டைக்குப் 'பால் குண்டம்' என்று பெயர்; இதில் உள்ள தெளிந்த நீர் 'கேதார குண்ட'த்தில் பாய்ந்து, பிறகு 'கௌரி குண்ட'த்தில் போய்ச் சேருகிறது.

கௌரி குண்டத்தில் குளித்துவிட்டுப் போகத் தினந்தோறும் ஏராளமான யாத்திரிகர்கள் வருகிறார்கள். 'பால் குண்ட'த்தின் நீர் சில்லென்றிருக்கிறது. இதில் பல வகை ரசாயனப் பொருள்கள் இருப்பதாகத் தெரிகிறது. மொத்தத்தில் உடம்புக்கு ஆரோக்கியம் தருவது; இதைக் குடித்தால் வயிற்றுக் கடுப்பு எல்லாம் நீங்குகிறது. ருசியாகவும் இருக்கிறது. அநேகம் பேர் இந்தப் பால் குண்டத்தின் நீரைச் செம்புகளில் எடுத்துக்கொண்டு போகிறார்கள். நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலிலும் இந்த நீரைத்தான் குடிக்கக் கொடுத்தார்கள். குண்டத்தருகில் கேதாரர், கௌரி இவர்களுக்காகத் தனித்தனியே இரண்டு கோவில்கள் இருக்கின்றன. இன்னும் சித்தேசுவரர், முக்தேசுவரர், மேகேசுவ்ரர் இப்படிப் பல தெய்வங்களுக்கும் கோவில்கள் அங்கே இருக்கின்றன.

பழைய புவனேசுவரத்திலிருந்து ஆறு மைல் தொலைவில கண்டகிரி, உதயகிரி என்ற மலைகளில் சிற்ப வேலை அபாரமாக இருக்கும் என்று கேள்விப்பட்டோம். இரண்டு மலைகளுக்கிடையே பாட்டை போகிறது. ஒவ்வொரு மலையிலும் வரிசையாகக் குடைந்த குகைக் கோவில்களைப் பார்த்தோம். உள்ளே இருந்த சிலைகள் மூளியாகிக் கிடந்தன. உதயகிரிக் குகை ஒன்றில் அசோகர் காலத்துப் பிராம்மி லிபியில் சில விவரம் கல்லில் செதுக்கியிருக்கிறது. இங்குள்ள புலிக் குகையின் அமைப்பு, புலி முகம் போலவே இருக்கிறது. கணேசர் குகை வாசலில் இரண்டு யானை உருவங்களைக் காணலாம்.

கண்டகிரியில் திகம்பர வகையைச் சேர்ந்த ஆதிநாத தீர்த்தங்கரரின் கோவில் இருக்கிறது. அருகிலேயே பரேசநாதரின் கோவில். சலவைக் கல்லில் அவருடைய பிரம்மாண்டமான உருவம் செதுக்கி வைத்திருக்கிறது. அந்தக் கோவிலிலிருந்து பார்த்தால் கீழே தெரியும் காட்சி வெகு ரம்மியமாக இருக்கிறது. இந்தக் கோவில்கள் தொலைவிலிருந்து வரும்போதே பசுங் குன்றின்மேல் வெண்மையாகத் தெரிகின்றன.

அருகில் விமான நிலையம் ஒன்று இருக்கிறது. வாரத்தில் மூன்று நாள் கல்கத்தாவிலிருந்து பங்களூர் செல்லும் விமானங்கள் இங்கே தங்குகின்றன.

இங்கிருந்து திரும்பும்போது புதிய புவனேசுவரத்தைப் பார்த்தோம். புதிதாக ஹைகோர்ட்டு, சட்டசபை, கடைவீதி, சர்வகலாசாலை எல்லாம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கட்டிமுடிக்கக் கோடிக்கணக்கில் ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. ஆனாலும் பழைய புவனேசுவரத்தின் பெருமை இதற்கு வருமா?

ராணியின் மகுடாபிஷேகம்

★

பிரிட்டிஷ் ராணி – 'காமன்வெல்த்' தலைவி – இரண்டாம் எலிஜபெத்துக்கு இந்த ஜூன் 2-ஆம் தேதி மிக வைபவமாக மகுடாபிஷேக விழா நடக்கப்போகிறது. ரேடியோவில் நிமிஷத்துக்கு நிமிஷம் அது பற்றிய வர்ணனை உலகெங்கும் முழங்கும். பிரிட்டன் எங்கும், பல 'காமன்வெல்த்' நாடுகளிலும் அன்று பெருந் திருவிழாவாக இருக்கும். பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் காரியாலயத்தினர் 'மஞ்சரி'க்கென்று பிரத்தியேகமாய் அளித்த கட்டுரைகளிலிருந்து முக்கியமான சில விவரங்களைக் கீழே சுருக்கித் தந்திருக்கிறோம்.



மகுடாபிஷேக ஊர்வலம்: **பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்துக்கு இப்படித்தான் ஜூன் 2-இல் ராணி ஊர்வலமாய்ச் செல்லுவார். படம் 12-5-'37-இல் நடந்த ஆறாம் ஜார்ஜ் மகுடாபிஷேக ஊர்வலம்.**

ஆங்கில முடியாட்சி: கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில், அதாவது 829-இல், எக்பெர்ட் என்ற ஸாக்ஸன் அரசர்தான் முதல் முதலாக இங்கிலாந்து முழுவதையும் ஆளத் தொடங்கிய மன்னர். பின்னால் வேல்ஸ், அயர்லாந்து, ஸ்காட்லாந்து இவையும் சேர்ந்து, 'யுனைடெட் கிங்டம்' அல்லது 'க்ரேட் பிரிட்டன்' என்ற பெயர் பெற்றன. பிற்காலத்தில் அயர்லாந்தை நீக்கிய மீதிக்கே 'க்ரேட் பிரிட்டன்' என்று வழங்குகிறார்கள். எக்பெர்ட் காலத்திலிருந்து வார்சுக் கிரமமாகப் பிரிட்டிஷ் மன்னர்கள் சிம்மாசனம் ஏறி வந்திருக்கிறார்கள். ஒரே ஒரு முறைதான் இதற்குப் பங்கம் நேர்ந்தது. இடையிடையே சில இடைஞ்சல்கள் ஏற்பட்டாலும் வார்சுக் கிரமக் கொள்கையை மட்டில் கைவிடவில்லை.

'யுனைடெட் கிங்டம்' இன்று 'காமன்வெல்த்' என்பதில் ஓர் உறுப்பாகவும் இருக்கிறது. பிரிட்டிஷ் ராணி, 'காமன்வெல்த்' தலைவியாகவும் இருக்கிறாள்.

கிரேட் பிரிட்டன், வட அயர்லாந்து, கானடா, ஆஸ்திரேலியா, ந்யூஸீலந்து, தென்னாப்பிரிக்கா, ஸிலோன் இவையும் மற்றும் பல காலனிகளும் இந்தியாவும் 'காமன்வெல்'தில் சேர்ந்தவை. இவைகளுக்குள் இந்தியா ஒன்று மட்டும் 'சுதந்தரக் குடியரசு' (ரிப்பப்ளிக்) ஆகும். பிரிட்டிஷ் ராணிக்கு இந்தியா ராஜ விசுவாசம் செலுத்தவில்லை. பாகிஸ்தான் உள்பட மற்ற உறுப்புக்களெல்லாம் பிரிட்டிஷ் ராணிக்கு ராஜ விசுவாசம் செலுத்துகின்றன.

'காமன்வெல்'தின் உறுப்பு நாடுகள் அனைத்தும் தம்மிச்சையாகச் சேர்ந்த கூட்டுறவின் சின்னமாகவும், அந்த முறையில் 'காமன்வெல்'தின் தலைவியாகவும் மட்டுமே ராணியை இந்தியா அங்கீகரித்திருக்கிறது.

ராஜ குடும்பம்: இரண்டாவது எலிஜபெத் ராணிதான் இன்று



ராஜாங்கக் கிரீடம்: இப்பீரியல் ஸ்டேட்ம் க்ரவுன் என்ற கிரீடம். மகுடம் சூடிய பிறத அடுத்தபடி இதை ராணி அணிந்துகொள்ளுவாள்.

பிரிட்டிஷ் ராஜ குடும்பத்தில் தலைமை ஸ்தானம் வகிப்பவள். இவள் ட்யூக் ஆவ் யார்க் தம்பதிகளுக்கு 1926 எப்ரல் 21 - ஆம் தேதி மகளாகப் பிறந்தாள். எலிஜபெத் அலெக்ஜாண்ட்ரா மேரி என்பது முழுப் பெயர். இவளுக்கு நான்கு வயது சின்னவள் இவளுடைய தங்கை மார்காரெட். ஐந்தாம் ஜார்ஜ் காலமானதும், அவருடைய மூத்த மகன் எட்டாவது எட்வர்டாகச் சிம்மாசனம் ஏறினார். ஆனால், வாலி விம்ஸன் என்பவளைக் காதலித்ததால், 1936 - இல் அவர் முடி துறக்க நேர்ந்தது. இப்போது ட்யூக் ஆவ் விண்ட்ஸர் என்று குறிக்கப்படுகிறவர் அவர்தான். அவருக்குப் பின் அவர் தம்பி ட்யூக் அவ் யார்க் ஆறாவது ஜார்ஜ் மன்னராகச் சிம்மாசனம் ஏறினார். 1951 - இல் அவர் திடீரென்று காலமானதால், வார்சு முறைப்படி இரண்டாவது எலிஜபெத் ராணியானாள்.

ராணியின் கணவர் ட்யூக் ஆவ் எடின்பரோ என்பவர். இவர் கிரீஸ் ராஜகுமாரரான ஆண்ட்ரூ என்பவரின் மகனாக, கார்ஃபு என்ற இடத்தில் 1921 ஜூன் 10 - ஆம் தேதி பிறந்தார். இவருக்கு இயற் பெயர் ஃபிலிப் என்பது. இவர் 1947 - ஜூலையில் பிரிட்டிஷ் பிரஜையாகி, தாயின் குடும்பப் பெயரான மவுண்ட்பாட்டன்

என்பதைத் தமது பெயருடன் சேர்த்து, ஃபிலிப் மவுண்ட் பாட்டன் என்று வைத்துக் கொண்டார். இந்தியாவின் கடைசி வைஸிராயாக இருந்தாரே, அந்த மவுண்ட்பாட்டனின் குடும்பந்தான் இது. 1947 - நவம்பர் 20 - ஆம் தேதியில் அரசகுமாரி (இப்போது ராணி) எலிஜபெத்தை மணந்துகொண்டார்.

ராஜ்யத்தை ஆட்சி புரியும் அதிகாரம் ராணிக்குத்தான். ராணியின் கணவருக்கு அதில் உரிமை கிடையாது. தனக்கு அடுத்த ஸ்தானம், பிராதான்யம், அந்தஸ்து இவையெல்லாம் சகல சந்தர்ப்பங்களிலும் கூட்டங்களிலும் இவருக்கு அளிப்பதாக 1952-செப்டம்பரில் ராணி ஒரு கட்டளை பிறப்பித்தாள். இவர் பல கௌர



ராஜ குடும்பம்; ராணியும் கணவரும் குழந்தைகளும்

வச் சின்னங்களும் பட்டங்களும் பதவிகளும் பெற்றிருக்கிறார்.

இந்த ராஜ தம்பதிகளுக்கு 1948 - இல் பிரிட்டிஷ் பட்டத் திளவரசனான சார்லஸ் பிறந்தான்; 1950 - இல் அரச குமாரி ஆன் பிறந்தாள்.

மகுடாபிஷேகம்: வார்சு உரிமைப்படி, இரண்டாம் எலிஜபெத் ஏற்கனவே பிரிட்டிஷ் ராணி யாகிவிட்டாள். ஜூன் 2 - ஆம் தேதி நடக்கவிருக்கும் மகுடாபிஷேகம் சமய ரீதியான விழாவே யாகும். மகுடாபிஷேக தினத்தன்று அதிகாலையில் பளபளவென்று ஜொலிக்கும் ஆடையாபரணங்களும் ஆயுதங்களும் தரித்த குதிரை வீரர் புடை சூழ தங்கத் தகடிழைத்த கோச்-ரதத்தில் ஊர்வலமாகப் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்துக்கு ராணி செல்லுவாள். தாரைகள் முழங்க, மணிகள் ஒலிக்க, அங்கே அவளுக்கு மகுடாபிஷேக விழா நடைபெறும்.

முதல் முதலாக அந்தத் தேவாலயத்தில் 1066- இல் ஜயசீலன் வில்லியம் என்ற முதல் வில்லியம் மன்னனுக்குத்தான் இப்படி மகுடாபிஷேகம் நடந்தது. பின்னல் 1603 முதல் வந்த ஒவ்வொரு பிரிட்டிஷ் அரசருக்கும் இங்கே தான் மகுடாபிஷேகம் நடந்தது. ஆனல் ஐந்தாம் எட்வர்டு, எட்டாம் எட்வர்டு என்ற இரண்டே பேர் மட்டில் மகுடாபிஷேகம் பெறவில்லை.

ராணியின் மகுடாபிஷேகச் சடங்குகள் நடந்து முடியச் சுமார் மூன்று மணி நேரத்துக்கு மேல் ஆகும். கூடியிருக்கும் மக்களுக்கு முதலில் ராணியைக் காண்டர்பரி



கலசம்: பூகோளத்தைக் குறிக்கும் பந்து போன்ற இந்தத் தங்கக் கலசங்களில் இடதுபக்கம் உள்ளது மகுடாபிஷேகச் சின்னங்களுள் ஒன்று. இதில் பெரிய மரகதங்களும் கெம்புகளும் இழைத்திருக்கிறார்கள்.



சாரணப் பெண்: ராணி 1944-இல் சாரணப் பெண்கள் முகாமில் இருந்தபோது பாத்திரம் பண்டங்களைக் கழுவித் தன் பங்கு வேலையைச் செய்தாள்.

ஆர்ச்பிஷப் அறிமுகம் செய்து வைப்பார். மக்கள் தங்கள் அரசனைத் தாங்களே தேர்ந்துகொள்ளும் பூர்விக வழக்கத்தை ஒட்டியது இந்தச் சடங்கு. "இவளிடம் விசுவாசம் கொண்டு சேவை புரிய நீங்கள் தயாரா?" என்று மக்களை அவர் கேட்பார். "கடவுள் எலிஜபெத் ராணியைக் காப்பாராக!" என்று அத்தனை மக்களும் சேர்ந்து கோஷிப்பார்கள். தாரைகள் முழங்கும்.

அடுத்தாற்போல் மகுடாபிஷேகப் பிரமாணத்தை ராணிக்கு ஆர்ச்பிஷப் செய்து வைப்பார். சட்டங்களையும் மாமூல்களையும் அநுசரித்து மக்களை ஆட்சி புரிவதாக ராணி பிரமாணம் செய்வாள். பிறகு இதற்கென்று பிரத்தியேகமாய்த் தயாரித்த தைலத்தை ராணியின் தலையில் இடுவார்கள். பின்பு, ராஜ உடையை ராணி தரிப்பாள். 'நீதியோடு ஆள, சமயத்தைப் பாதுகாக்க, கைம் பெண்களையும் அநாதைகளையும் காப்பாற்ற' இவைகளுக்கெல்லாம் அடையாளமாக வாள்; 'உலகமே கிறிஸ்து ரட்சகரின் அதிகாரத்துக்கு உட்பட்ட சாம்ராஜ்யம்' என்று குறிப்பிடும் சிலுவையிட்ட பந்து போன்ற கலசம்; 'ராஜ கம்பீரத்தையும், கத்தோலிக்க சமயத்தைக் காப்பாற்றும் உறுதியையும்' காட்டும் மோதிரம்; 'நீதி, கருணை இவைகளின் குறி'களான இரண்டு செங்கோல்கள்— இந்த ராஜ சின்னங்களையெல்லாம் ராணி பெற்றுக்கொள்வாள்.

இதன் பின்பு, 'க்ரவுன்' என்ற மணிமகுடத்தை எல்லா மக்களும் காணும்படி, பிற பிஷப்புகளின் உதவியோடு ஆர்ச்பிஷப் மிக உயரத்தில் தூக்குவார். அப்படியே 'காரொனேஷன் சேர்' என்ற மகு

டாபிஷேக பீடத்தருகே சென்று மிக்க பயபக்தியோடு அதை அவர் ராணியின் தலையில் சூட்டுவார். உடனே சபையினரெல்லாம், "கடவுள் ராணியைக் காப்பாராக!" என்று வாழ்த்துவார்கள்.

ராணி மகுடம் சூடும் அதே சமயத்தில் 'பீரஸ்' என்ற பிரபுக்கள் தங்கள் தங்கள் அந்தஸ்துக்குரிய 'காரொனெட்' என்ற கிரீடங்களை அணிந்துகொள்வார்கள். தாரைகள் முழங்கும். 'லண்டன் டவர்' என்ற கோபுரத்துப் பீரங்கிகளும் வேறிடத்துப் பீரங்கிகளும் வேட்டுக்கள் போடும்.

பிறகு, ராணி உயரமாகப் போட்டிருக்கும் 'த்ரோன்' என்ற சிம்மாசனத்துக்குப்போய் உட்காருவாள். சமய ரீதியான (ஸ்பிரிச்சுவல்) பிரபுக்கள், லௌகிக ரீதியான (டெம்பொரல்) பிரபுக்கள் இந்த இரண்டு பிரிவினரும் ராணியின் முன்பு மண்டியிட்டு மரியாதை செலுத்துவார்கள். மீண்டும் ஒரு முறை சபையினரெல்லாம் ஏகோபித்து ராணியை வாழ்த்துவார்கள்.

சட்டப்படி முன்பே பட்டம் பெற்ற ராணிக்குச் சமய ரீதியான அங்கீகாரம் - கடவுளின் அருள் - பெறுவதற்காகவே இந்த மகுடாபிஷேகம் நடத்துகிறார்கள். ஆகவே, 'உலகத்திலே கிடைக்கக் கூடிய பொருள்களுள் மதிப்பரிய' பைபிள் பிரதி ஒன்றைத்தான் முதல் முதலில் ராணியிடம் அளிக்கிறார்கள். பின்பு, கிறிஸ்துவின் 'சதையும் குருதியு'மான புனிதப் பிரசாதங்களைத் தருகிறார்கள்.

இவ்வளவு நேரமும் வெளியிலே வீதிகள்தோறும் லட்சக்கணக்கான ஜனங்கள் காத்திருப்பார்கள். ஆலயத்தில் சடங்குகள் முடிந்ததும், மகுடதாரியாய், ராஜ சின்னங்களுடன், 'காமன்வெல்த்' நாடுகளின் துருப்புகள் அணிவகுத்துச் செல்ல, வீதி மக்களெல்லாம் கோஷம் செய்து ஆர்ப்பரிக்க, அலங்காரமான கோச்சில் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு ஊர்வலமாய் ராணி திரும்புவாள்.

கிரீட ஆபரணங்கள்: ஏறக்குறைய ஆயிரம் வருஷங்களாகப் பிரிட்டிஷ் மன்னர்களின் மகுடாபிஷேகங்களில் கிரீட ஆபரணங்கள் விசேஷமாக வழங்குகின்றன. ஒரு மகுடாபிஷேகம் நடந்ததும் அடுத்த மகுடாபிஷேகம் வரைக்கும் அந்த ஆபரணங்களை லண்டன் டவரில் வைத்து வருகிறார்கள். கலைச்சுவையுடன் மிக்க வேலைப்பாடுகளோடு அமைந்து ஜொலிக்கும் அவைகளை, ஆயிரக்கணக்கான மக்கள் வரிசை வரிசையாக அணிவகுத்துச் சென்று பார்த்து மகிழ்வார்கள்.

ஆலிவர் க்ராம்வெல் ஆட்சியில் அநேகம் ஆபரணங்களை அழித்து விட்டார்கள். அவைகளுக்கெல்லாம் பதிலாக 1660-இல் இரண்டாம் சார்லஸ் ஆட்சி வந்தபோதுதான் இப்போதுள்ள பல ஆபரணங்களைச் செய்தார்கள். கழுகுபோல் அமைந்த தங்கக்கெண்டி ஒன்றின் மூக்கு வழியாகத்தான் மகுடாபிஷேக தைலத்தை ஊற்றுவார்கள். இந்தக் கெண்டி, தைலம் தடவும் தங்க ஸ்பூன், முதலாவது எலிஜபெத் ராணியின் உப்புப் பாத்திர அடுக்கு இவைகள் மட்டுமே க்ராம்வெல் ஆட்சியில் அழியாமல் தப்பின.

வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் ராணிக்குச் சூட்டப் போகும் கிரீடம், ஸெயிண்ட் எட்வர்டு தி கன்ஃபெஸர் என்பவருக்குச் சூட்டிய அதே மகுடந்தான். இதன்



குதிரைப் படைத் தலைமை: *1951*-இல் ராஜகுமாரியாக இருந்தபோது, க்ரெனடீர் கார்ட்ஸ் என்ற குதிரைப் படையின் கர்னல் பதவியை ராணி வகித்தாள்.

நிறை ஏழு பவுண்டு. ராணி சில நிமிஷநேரந்தான் இதைத் தரித்திருப்பாள். இதில் வைரம், கெம்பு, மரகதம், முத்து முதலிய நவரத்தினங்கள் பதித்திருக்கும்.

இந்த மகுடத்துக்குப் பிறகு 'இம்பீரியல் ஸ்டேட் க்ரவுன்' என்ற மற்றொரு மகுடத்தை ராணி அணிந்துகொள்வாள். இதன் நிறை 39 அவுன்ஸ்தான். பார்லிமெண்ட் ஆரம்பிக்கும் போதெல்லாம் இதையே ராணி அணிந்துகொள்வாள். இதன் ப்ளாட்டினம் வளையத்தில் 2,783 வைரங்கள், 277 முத்துக்கள், 17 நீலங்கள், 11 மரகதங்கள், 5 கெம்புகள் இவையெல்லாம் பதித்திருக்கிறார்கள். ஆப்பிரிக்காவின்

ரண்டாவது வைரமான 'கல்லினன்' என்பதில் வெட்டிய வைரமும் சரித்திரப் பிரசித்தி பெற்ற வேறு சில நவரத்தினங்களும் இவைகளில் அடங்கியிருக்கின்றன.

இன்னும் ஐந்து வாள், ஐந்து செங்கோல், பந்து போன்ற இரண்டு தங்கக் கலசங்கள், மகுடாபிஷேகத்துக்குப் பிறகு தெய்வப்பிரசாதம் அளிப்பதற்காக உள்ள தங்கக் கோப்பை இவையெல்லாவற்றையும் சேர்த்து 1900-ஆம் ஆண்டில் 30 லட்சம் பவுன் பெறுமானமுள்ளவை என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைய நிலையில் இவைகளுக்கு விலை மதிப்பே போட முடியாது.

மருந்து—ஜாக்கிரதை

வீட்டிலே கண்டபடி தாறுமாறாக மருந்துகளைச் சில வீடுகளில் இறைத்து விடுகிறார்கள். உட்கொள்ளுவதிலும் முறையில்லை. இது மிகவும் அபாயம். மருந்துகள் விஷயத்தில் சில எச்சரிக்கைகள் எடுத்துக்கொள்வது அவசியம். இதோ அவைகளைக் கவனியுங்கள்:

★ விஷங்களைத் தனியே பிரித்து ஒதுக்கிப் பூட்டி வையுங்கள்.

★ சீசாக்களுக்கெல்லாம் மூடிபோட்டு, மருந்தின் பெயர், வாங்கிய தேதி, யாருக்கு என்ற விவரம் அடங்கிய சீட்டு ஒட்டுங்கள்.

★ தேவையானபோது எடுத்து, சீட்டைப் படியுங்கள்.

★ ஊற்றி அளக்குமுன் சீசாவைக் குலுக்குங்கள்.

★ சீட்டுமீது வழியாதபடி மறுபுறமாய் மருந்தை ஊற்றுங்கள்.

★ அளவு கிளாஸைக் கண் மட்டத்துக்குத் தூக்கிக் கணக்காய் மருந்தை அளவுங்கள்.

★ சரியான அளவு எடுத்துக்கொண்டீர்களா என்றறிய மறுபடியும் சீட்டைப் படியுங்கள்.

★ சீசாவை நன்றாகத் துடைத்து மூடி அலமாரியில் வையுங்கள்.

★ இருட்டிலோ அவசரமாகவோ மருந்தை உட்கொள்ளாதீர்கள்.

—'தி பையர்ஸ் கைடு', க்ரெக் பப்ளிஷிங் கோ.

மூடர்களா ஜோஸ்யம் பார்ப்பவரெல்லாம்;
இல்லையென்பதற்குப் பல உதாரணம் தருகிறார் இவர்.

ஜோஸ்யம் பலித்தது!

அம்ராஸ்

நம் பிரதம மந்திரி ஜவாஹர் லால், "முட்டாள்கள் தான் ஜோஸ்யம் கேட்பார்கள்" என்று சொல்லியிருக்கிறார். இந்தியர்களாகிய நாம் எல்லாரும் அந்த மாதிரி முட்டாள்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தான் சற்று நாசுக்காக அவர் இப்படி வெளியிட்டார். நான் இந்தியன் என்பதில் பெருமை கொள்பவன்; ஆகவே, நானும் ஒரு முட்டாளாகத்தானே இருக்க வேண்டும்! 1923 பிப்ரவரி மாதம் பண்டித ஜவாஹர்லாலின் தாயார் என்னை அழைத்து, சிறையில் இருக்கும் தன் மகனைப்பற்றி எவனாவது ஜோஸ்யனிடம் விசாரிக்க வேண்டுமென்று தெரிவித்தாள். அந்த அம்மாள் பிரயாகை சங்கமத்தில் தினந்தோறும் ஸ்நானம் செய்துவிட்டுத் தன் மகன் நல்லபடியாக வீடு திரும்ப வேண்டுமே என்று வேண்டிக்கொள்வது வழக்கம்.

* * *

கடைசியில் கங்கைக்கரையில் காலணா ஜோஸ்யன் ஒருவன்தான் கிடைத்தான். அவனுக்கு அரசியல் என்றாலே இன்னதென்று தெரியாது. வெறும் செப்புக் காசான காலணாதான் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பான் அந்தக் கிழ ஜோஸ்யன். அவன் கையில் எதிர்பாராதபடி வெள்ளி நாணயங்களை அள்ளிக் கொடுத்த அம்மாள் யார் என்றும் அவனுக்குத் தெரியாது. அவன், "அம்மா, கவலைப்படாதீர்கள்! இன்னும் கொஞ்ச நாளில் உங்கள் மகன் விடுதலையாகி விடுவார். பின்னால் இந்தப் பாரத தேசத்தையே அவர் ஆளப்போகிறார்" என்றான்.

'அமிர்தபஜார் பத்திரிகை'யை நடத்திவந்த ஸ்ரீ மோதிலால் கோஷ் என்ற பிரபல வங்கத் தலைவருக்கு ஜோஸ்யத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை. அந்தக் காலத்தில் இந்திய வைஸ்ராயாக இருந்த ஹார்டிஞ்சு பிரபு கல்கத்தாவிலிருந்து தலைநகரத்தை டில்லிக்கு மாற்றும்போது மோதிலால் கோஷ் 'வேண்டாம்' என்று சொன்னார். இப்படி மாற்றுவது அப்போதுள்ள கிரக நிலைக்குப் பொருந்தாது என்றும் அதனால் இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சீர்குலைந்துவிடும் என்றும் மோதிலால் கோஷிடம் ஜோஸ்யர் சொன்னதால்தான் அவர் இப்படி எச்சரித்தார். ஆனால் ஹார்டிஞ்சு பிரபு அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

கராச்சியில் டாக்டர் தாராசந்து என்று ஒரு வைத்தியர் இருந்-

காப்பிரைட்: அஸ்ட்ராலஜிக்கல் மகஸின் (ஆங்கிலம்; மே '58), பங்களூர்.

தார். அவர் எனக்குப் பழக்க முள்ளவர். 'கராச்சி டெய்லி' என்ற தினசரிப் பத்திரிகையைப் பொழுதுபோக்காக நடத்தி வந்தார். அதோடு அவருக்கு ரேகை சாஸ்திரமும் தெரியும். கராச்சியில் இருந்த சிலபேரின் கைரேகையைப் பார்த்து 1947-1948-க்குள் அவர்களில் அநேகம் பேர் அடி, உதை பட்டுச் சிரமப்படுவார்கள், சில பேர் சாவார்கள் என்று சொல்லியிருந்தார். இதென்ன இப்படி எல்லாருக்குமா நேரும் என்று நான் கேலியாக எண்ணுவதுண்டு. ஆனால் பின்னால் எனக்குத் தெரிந்த பத்துப் பன்னிரண்டு பேருக்கு இந்தக் கதி நேர்ந்ததை நேரில் பார்த்தேன்.

* * *

1947-இல் இந்தியாவை விட்டுச் சிந்து பிரிந்து பாகிஸ்தான் ஏற்பட்டபோது நடந்த வகுப்புக் கலவரத்தில்தான் அவர்கள் இப்படிக் கஷ்டப்பட்டார்கள். அப்போது தாராசந்து, பத்திரிகைக்காரரான என் நண்பர் ஒருவருடைய மனைவியின் கை ரேகையைப் பார்த்துவிட்டு, ஏதோ அதிர்ச்சியினால் அவளுக்கு 'ஹிஸ்டிரியா' நோய் கண்டு உடம்பு குணமாகாமலே போய்விடலாம் என்று சொல்லியிருந்தார். நான் அதை அடியோடு மறந்துவிட்டேன். கொஞ்ச நாளைக்கு முன் அந்த நண்பரைத் தற்செயலாக மறுபடியும் பார்க்க நேர்ந்தது. அப்போது அவர், "1948 ஜனவரி 6-ஆம் தேதி கராச்சியில் நடந்த வகுப்புக் கலவரத்தின்போது ஏற்பட்ட அதிர்ச்சியினால் அவளுக்குப் பலத்த 'ஹிஸ்டீரியா' கண்டுவிட்டது" என்று நடந்ததை விவரமாகச் சொன்னார். எனக்கு ரொம்ப வருத்தமாக இருந்தது.

* * *

மைசூரை ஆண்ட மகாராஜா ஒருவருக்கு மனசில் ஏதோ கவலை. அவர் ஜோஸ்யர்களை வரவழைத்து ஆரூடம் கேட்டார். இரண்டு ஜோஸ்யர்கள் வரப்போவதை அப்படியே சொன்னார்கள். அவர்களில் ஒருவர் மிகவும் ஏழை; கிராமவாசி. என்ன வெகுமதி வேண்டும் என்று மகாராஜா அவரைக் கேட்டார். அதற்கு அவர் ஒவ்வொரு சனிக்கிழமையும் இரண்டு கரண்டி எண்ணெய் கொடுத்துதவினால் போதும் என்றாராம். அப்படியே உத்தரவாயிற்று.

அந்த ஏழை ஜோஸ்யரின் ஊர், பெயர் நமக்குத் தெரியாது. ஆனால் இன்னொரு ஜோஸ்யர் திருச்சி ஜில்லாவில் காவிரிக் கரையோரத்தில் உள்ள புளியம்பட்டியைச் சேர்ந்த வைதிகப் பிராம்மணர். இவர் கெட்டிக்காரர். "உமக்கு என்ன வேண்டும்?" என்று மகாராஜா கேட்டதும் இவர், "காவிரிக்கரையில் ஒரு கிராமம் கொடுங்கள்" என்றார். அப்படியே உத்தரவாயிற்று. இந்த ஜோஸ்யரின் பேத்திதான் கல்கத்தா கஸ்டம்ஸ் கலெக்டர் ஆக இருக்கும் ஸ்ரீ என். எம். ஐயர், ஐ. ஸி. எஸ்., அவர்களின் மனைவி.

* * *

சிலபேர் சொல்லும் ஜோஸ்யம் பலிக்காமல் போவதும் உண்டு. நேரு குடும்பத்துக்குச் சொந்தமான 'இண்டிபெண்டெண்ட்' என்ற பத்திரிகையை 1919-இல் வசந்த பஞ்சமி அன்று தொடங்கும்படி ஒரு ஜோஸ்யர் நாள் பார்த்துக் கொடுத்

தார். கொஞ்ச காலம்வரையில் பண முடையினுல் தட்டித் தடுமாறிக் கொண்டே அது வெளிவந்தது. கடைசியில் அதைத் தொடங்கி நாலாம் வருஷ ஆரம்பத்தன்று அந்தப் பத்திரிகாலயத்தை மூட வேண்டியதாயிற்று.

* * *

ஆனுல் பிஹாரில் சாரன் ஜில்லாவில் இன்னொரு ஜோஸ்யர் சொன்னது அப்படியே பலித்திருக்கிறது என்று ஜனங்கள் சொல்கிருர்கள். குழந்தையாக இருந்தபோது ராஜேந்திர பாபுவின் ஜாதகத்தைக் கணித்தார் அந்த ஜோஸ்யர். அப்போதே, 'இந்தக் குழந்தை இந்தியாவுக்கு ராஜாவாக இருக்கும்' என்ருராம். இதைக் கேட்டதும் எல்லாரும் அப்போது கேலியாகச் சிரித்தார்களாம். ஆனுல் ராஜேந்திரரின் தமையனுர் மகேந்திர பாபுவுக்கு ஜோஸ்யத்தில் தீவிர நம்பிக்கை உண்டு. அவர் மட்டும் இன்று உயிரோடு இருந்தால் பண்டித நேருவைப் பார்த்து, "ஆமாம். நான் மடையன்தான், ஐயா! இருந்தாலும் இந்த மடையன் நம்பினது பலித்துவிட்டதே!" என்று நிச்சயமாகப் பதில் சொல்லியிருப்பார்.



கூண்டும் குருவியும்

இதோ இந்தக் குருவிக்கும் கூண்டுக்கும் நடுவிலே உள்ள கோட்டிலே ஒரு போஸ்ட் கார்டு அல்லது மெல்லிய அட்டையைச் செங்குத்தாக வைத்துப் பிடித்துக்கொள்ளுங்கள். அதன் மேல்புற ஓரத்திலே உங்களுடைய மூக்கை ஒட்டப் பதித்துக்கொண்டு, ஒரு கண்ணில் குருவியும் மறு கண்ணில் கூண்டும் தெரியும்படி பாருங்கள். இப்படிப் பார்க்கும்போது ஒரு விநோதம் நிகழும். என்ன தெரியுமா? குருவி மெல்ல மெல்லக் கூண்டுக்குள்ளே புகுந்துவிடும்.

—'ஃப்ரீ இந்தியா,' சென்னை.

பல சரக்கு

★

இதோ இது பழமையான ஒரு கடிகாரம். 200 வருஷங்களுக்கு முன் செய்தது. பிரிட்டனில் பர்ட்டன் என்ற ஒரு கிராமத்து மாதா கோயிலில் இதை மாட்டியிருக்கிறார்கள். இந்தக் கடிகாரம் இப்போது என்ன மணி காட்டுகிறது, சொல்வீர்களா? 'நாலு அடிக்கப் பத்து நிமிஷம்' இருப்பதாகத்தானே தோன்றுகிறது!

அதுதான் இல்லை. சந்நியாசிகள் 13-ஆம் நூற்றாண்டில் செய்த கடிகாரங்களுக்கு ஒரே ஒரு முள்தான் உண்டு. அந்தக் கடிகாரங்களில் ஒவ்வொரு மணியையும் டயலில் நான்கு கூறுகப் பிரித்திருந்தார்கள். 1670- வரையில் நிமிஷ முள் வைக்கவே யில்லை. படத்தில் கண்ட கடிகாரம் ஒரே முள் உடையது. மணி 3-30 என்றே காட்டுகிறது.

* *

1952 மார்ச் 31-ஆம் தேதிக் கணக்குப்படி இந்தியாவில் மொத்தம் உள்ள அட்வகேட்டுகள் 26,465; ப்ளீடர்கள் 38,377; வக்கீல்கள் 1,173; முக்தியார்கள் 6,330. ஸுப்ரீம் கோர்ட் ஸீனியர் அட்வகேட்டுகள் 315; ஜூனியர் அட்வகேட்டுகள் 1,173; ஏஜெண்டுகள் 146. சென்னையில் தான் மிக அதிகமான அட்வகேட்டுகள் இருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை 7,268.

* *

1951-ஆம் வருஷத்திய கணக்குப்படி உலகம் முழுவதும் உள்ள மொத்த மோட்டார்க் கார்களின் எண்ணிக்கை 5 கோடியே 60 லட்சம். அதில் 4 கோடியே 26 லட்சம் ஐக்கிய அமெரிக்காவில் பதிவானவை. மோட்டார் லாரிகளையும் சேர்த்தால், மொத்தம் 7 கோடியே 40 லட்சம். அதில் 5 கோடியே 20 லட்சம் ஐக்கிய அமெரிக்காவில் பதிவானவை.

* *

'ஜான் புல்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகையில், மிஸஸ் ஆர். எச். ப்ரைட்டன் என்பவள் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறாள்:

"சில வருஷங்களுக்கு முன் நாங்கள் பம்பாயில் வசித்தோம். போட்டோவில் கண்ட சிங்கம் அங்கே எங்கள் அண்டை வீட்டு நண்பனாயிருந்தது. அது மிகவும் சாது. அதன் எஜமானும் ஒரு சாதுவே. ஆனால், சாதுவும்

அவருடைய சிங்கமும் நெடுநாள் எங்கள் அண்டை வீட்டு நண்பர்களாக இல்லை. அக்கம் பக்கத்தில் இருந்த ஜனங்களெல்லாம் 'இந்தச் சிங்கம் எந்நேரமும் கர்ஜிக்கிறதே!' என்று புகார் செய்தார்கள். ஆகவே, சிங்கத்தை அழைத்துக்கொண்டு சாது எங்கேயோ போய்விட்டார்.''

* *

நம் நாட்டில் மழை பெய்யாவிட்டால், கொடும்பாவி கட்டி இழுப்பார்கள். வருண ஜபம் செய்வார்கள். ஆனால், வருண பகவானின் உருவ சித்திரமோ சிலையோ அபூர்வம். இதோ இங்கே உள்ள படம் மெக்ஸிகோ நாட்டு மழைக் கடவுள். இந்தக் கடவுளின் சிலை ஒன்று பிரிட்டனில் டேட் காலரி என்ற கண் காட்சிச்சாலைக்கு வந்திருக்கிறது. 'மழைப் பஞ்சமே தெரியாத பிரிட்டனுக்கு மழைக் கடவுள் எதற்கு?' என்று ஓர் ஆங்கிலேயர் முணுமுணுக்கிறார். ஸஹாரா பாலைவனத்துக்கு வேண்டுமானால், அந்தக் கடவுளை அனுப்பிப் பார்க்கலாமே!



இங்கிலாந்தைச் சேர்ந்த பெர்மிங்ஹாம் நகரில் ஒரு பெரிய தொழிற்சாலைக்கு முன் நிகழ்ந்ததாம் இந்தக் காட்சி. பிரம்மாண்டமான இரும்பு வளையம் ஒன்றை அங்கே இரண்டு ஆசாமிகள் மிக்க சிரமப்பட்டு ஒரு லாரிமீது ஏற்ற முயன்றுகொண்டிருந்தார்களாம். இதைக் கண்டவரின் கண்கள் நிமிர்ந்து, 'இது என்ன தொழிற்சாலை?' என்று விளம்பரப்

பலகையை எறிட்டுப் பார்த்தன. அங்கே என்ன எழுதியிருந்ததாம் தெரியுமோ? 'சாமான்களைத் தூக்கும் க்ரேன் செய்யும் தொழிற்சாலை' என்றுதான் எழுதியிருந்ததாம்!

* *

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த நெப்ராஸ்கா மாகாணத்தில் உள்ள கீர்னி என்னுமிடத்தில் ரெவரண்டு ஃபாஸ்டர் மையர்ஸ் என்ற பாதிரியார், கொஞ்ச காலத்துக்கு முன் ஒரு நாள், ''இன்று பாவிகளுக்கு மாத்திரம் பிரசங்கம் செய்யப்போகிறேன். உத்தமர்களும் புண்ணியாத்மாக்களும் தேவாலயத்துக்கு வரவேண்டாம்'' என்று அறிக்கை செய்திருந்தார். அன்று பாவிகளெல்லாம் தேவாலயத்துக்கு வரும்போது, அவர்கள் உள்ளே புக முடியாதபடி பெருங்கூட்டமாக 'உத்தமர்களும் புண்ணியாத்மாக்களும்' முன்னாடியே வந்து கூடியிருந்தார்கள்! இந்தப் பாவிகள் யார் என்று பார்ப்பதில் அந்த உத்தமர்களுக்கும் புண்ணியாத்மாக்களுக்கும் அவ்வளவு ஆவல்!

யுத்த அபாயம்

ஐஸன்ஹோவர்

அமெரிக்கப் பத்திரிகாசிரியர் சங்கக் கூட்டத்தில் ஏப்ரல் 16-ஆம் தேதி அமெரிக்க ஜனாதிபதி செய்த பேருரையின் ஒரு பகுதி இது.

முன்பு சோவியத் யூனியன் மற்ற நாடுகளுக்கு அச்சமூட்டியது; இன்று சோவியத் யூனியன் மற்ற நாடுகளைப்பற்றி அச்சங் கொள்கிறது. எட்டு ஆண்டுகளாக நடந்துள்ள காரியம் இதுவே.

இந்த நிலைமை மாறாவிட்டால், இந்த உலகத்துக்கு ஏதாவது நம்பிக்கை உண்டா? எந்த நாட்டுக்காவது நம்பிக்கை உண்டா? அணுக்குண்டு யுத்தம் ஏற்படலாம். இல்லாவிட்டாலும் அஞ்சி அஞ்சித்தான் வாழவேண்டியிருக்கும். மக்களின் பொருளையும் உழைப்பையும் வீணாக்க வேண்டி வரும். உலக மக்களுக்கு வேண்டிய பொருளெல்லாம் நிரம்பக் கிடைப்பதற்கும், அவர்கள் மகிழ்ச்சியாய் வாழ்வதற்கும் இடையூறு ஏற்படும். உணவும் உடையும் இல்லாமல் வருந்துவோருக்குக் கொடுக்கவேண்டிய பொருளெல்லாம் பீரங்கியும் போர்க்கப்பலும் குண்டுகளும் செய்வதற்கு உபயோகமாகும். பசித்தவருக்குரிய உணவைப் பறித்துப் போர்க்கப்பல் செய்யலாமா? மக்கள் குளிரால் நடுங்கும்போது, அவர்களுக்கு உடுக்க உடை கொடுக்காமல் குண்டுகள் செய்யலாமா? அப்படிச் செய்வது களவேயாகும். யுத்தத்தால் பொருள்மட்டுமா அழிகிறது? நெற்றி வேர்வை சிந்த மக்கள் உழைக்க வேண்டியதாகிறது; விஞ்ஞானிகளின் அறிவெல்லாம் யுத்தத்துக்கே பயன்படுகிறது; பிற்காலத்து மக்களுக்கு எந்தவிதமான நம்பிக்கையும் இல்லாமல் போகிறது.

குண்டுவீசும் ஒரு விமானத்துக்காகச் செலவு செய்யும் தொகையைக் கொண்டு, 30 நகரங்களில் நல்ல பள்ளிக்கூடக் கட்டிடம் கட்டிவிடலாம்; 60 ஆயிரம் மக்கள் கொண்ட இரண்டு நகரங்களுக்கு வேண்டிய மின்சார உற்பத்திக் கூடம் அமைத்துவிடலாம்; தற்கால வசதிகள் எல்லாம் உள்ள இரண்டு வைத்தியசாலைகள் அமைக்கலாம்; 50 மைலுக்கு நல்ல

மூலம்: அமெரிக்கன் ரிப்போர்ட்டர் (தமிழ்: 25-4-'53), சென்னை.



சாலை போட்டுவிடலாம். ஒரு போர் விமானம் செய்வதற்குரிய தொகையைக் கொண்டு, 5 லட்சம் மரக்கால் கோதுமை வாங்கிவிடலாம். ஒரு சிறு போர்க்கப்பல் செய்வதற்கு வேண்டிய பணம் எண்ணாயிரம் மக்கள் குடியிருப்பதற்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப் போதும்.

ஆயுத விஸ்தரிப்பு, வாழ்வதற்குரிய முறையாகுமா? இது சிறந்த முறை அல்ல. யுத்த பயம் இருக்கும்போது, மனித சமூகம் இரும்புச் சிலுவையில் தொங்குகிறது என்றுதான் கூற வேண்டும்.

இந்த நிலைமை எவ்வளவு ஆபத்தானது என்பதை இந்த உண்மைகள் காட்டுகின்றன. நீதியான நிலைத்ததொரு சமாதானம் ஏற்பட வேண்டுமானால், இன்னது செய்ய வேண்டும் என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். உலகத்திலுள்ள அரசாங்கங்கள் உண்மையாகவும் தெளிவாகவும் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டிய சமயம் இது. இந்த உலகம் வாழ்வதற்கு வழி இல்லையா என்பதை ஆராய வேண்டிய காலம் இது.

ஜோஸப் ஸ்டாலினின் மரணம் ஒரு யுகத்தின் முடிவு என்பதை உலகம் அறியும். அவர் 30 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினார். அந்தக் காலத்தில் பால்டிக் கடலிலிருந்து ஜப்பான் கடல்வரையும் சோவியத் ஏகாதிபத்தியம் பரவியது; 80 கோடி மக்கள் அந்த ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டார்கள். ஸ்டாலினும் அவருக்கு முன் வாழ்ந்த தலைவர்களும் வகுத்த சோவியத் திட்டம், ஓர் உலக யுத்தத்தில் பிறந்தது. இரண்டாவது உலக யுத்தத்தில் வியக்கத் தகுந்த வீரத்தால் அது அழியாமல் பிழைத்தது. இன்று மூன்றாம் உலக யுத்தத்தைத் தோற்றுவிக்கும் முறையில் அது நிலவுகிறது.



இன்று சோவியத் யூனியனில் புதிய தலைமை ஏற்பட்டுள்ளது. புதிய தலைவர்கள் பழைய முறையையே முற்றும் கடைப்பிடிக்க முடியாது; மாறுதல் செய்யத்தான் வேண்டும். வருங்காலப் போக்கை அவர்களே ஆக்க வேண்டியவர்கள்.

இன்றைய நிலைமை வேறு. சுதந்தர உலகம் சுதந்தரத்தைக் காப்பாற்றுவதற்கு வீறுகொண்டு எழுந்து நிற்கிறது. விழிப்பாயிருந்து தியாகம் செய்யத் தயாராய் இருந்தாலொழிய உரிமையைக் காப்பாற்ற முடியாது என்பதைச் சுதந்தர உலகம் அநுபவத்தால் அறிந்திருக்கிறது. சுதந்தர உலகத்தை இந்த நிலையில் காண்கிறார்கள் சோவியத் அரசாங்கத்தின் தலைவர்கள். சுதந்தர உலகத்தின் உரிமையையும் நோக்கங்களையும் சோவியத் தலைவர்கள் மதிக்கவேண்டும். சுதந்தர உலகம் மற்றவரின் உரிமையை எப்போதும் மதிக்கும்.

நாடுகளுக்குள் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால், எத்தகைய குறைபாடுமில்லாத சமாதானத்தைத் தோற்றுவிக்க உழைப்போர் அனைவரோடும் சேர்ந்து உழைக்க நாம் தயாராக இருக்கிறோம். மீண்டும் நம்பிக்கை கொண்டு உறுதி பூண்டு நாம் உழைப்போம்.

குற்றப் பித்தர்கள்

'இஸாபெல்லா கவுண்டி ரிபப்ளிகன்' என்ற அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் இந்த அறிக்கை பிரசுரமாகியிருக்கிறது: ''இந்தப் பத்திரிகையில் ஏதாவது ஒரு பிழையைக் கண்டால், அது ஒரு காரியத்துக்காகவே போட்டிருக்கிறது என்று மதியுங்கள். ஒவ்வொருவருக்கும் திருப்தியாக இருக்கும்படி பல விஷயங்களையும் பிரசுரிப்பது எங்கள் நோக்கம். குற்றம் காண்பதையே தொழிலாகக் கொண்டவர்களின் திருப்திக்காகவே பிழைகளைப் போட்டிருக்கிறோம்.''

எதைப் படிக்கிறார்கள்?

இந்தக் கொரியா யுத்தம் நடக்கிறதே, இதைப்பற்றிய செய்திகளை எத்தனை பேர் படிக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பியது 'வான்குவர் ஸன்' என்ற பத்திரிகை. இதற்காக ஒரே ஒரு நாள் வந்த கொரியா யுத்தச் செய்தியைத் தொடர்ந்து மூன்று நாள் இதழ்களில் திரும்பத் திரும்ப அது பிரசுரித்தது.

என்ன நடந்தது? ஒன்றும் இல்லை. அந்தப் பத்திரிகையின் ஐந்து லட்சம் வாசகர்களில் ஒரே ஒருவர்கூட இதைப் பற்றிப் புகார் செய்யவில்லை.

ஆனால், தமாஷ் பகுதியின் படங்களையோ, வேறு விசேஷ அம்சங்களையோ நிறுத்தினால், எண்ணற்ற வாசகர்கள் கோபங்கொண்டு புகார் செய்வதாக அதன் ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

—ஏ. பி., 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'

அலங்காரப் பொருளான இது
அருமருந்தாகவும் உதவுகிறது.

நலம் தரும் பொன்

நிம்ப

உலகத்தில் அலங்காரத்துக்கு மட்டுமே பொன்னை எல்லாரும் உபயோகிக்கிறார்கள். பொன் நகைகள் உடலுக்கு அழகு தந்து மனத்தைக் களிப்பிக்கின்றன. இந்த ஒரு விஷயத்தில்மட்டுமே பொன் உபயோகப்படுகிறதென்று நினைப்பது பிசகு. இது மனிதனுடைய உடலுக்கும் உயிருக்கும் வளர்ச்சி கொடுக்கிறது. நம் முன்னோர்களும் சில சித்தர்களும் கண்ட உண்மைகள் பொன்னின் உபயோகத்துக்கு ஆதாரமாக இருக்கின்றன.

வட மொழியில் பொன்னுக்குப் பெயர் சுவர்ணம் என்பது. நல்ல நிறமும் ஒளியும் பெற்றிருப்பதாலேயே இதற்கு இந்தப் பெயர் வந்தது.

பொன் இயற்கையாகப் பூமியில் தோன்றுகிறது. செயற்கை முறையாலும் பொன் செய்ய முடியும். பொன் ரசங்களுக்கெல்லாம் தலைமையானது என்பதால், அதை ரசேந்திரன் என்னும் பெயரால் வேதம் குறித்தது. இந்தக் காலத்திலும் மனிதருடைய மனத்தை வசீகரிக்கும் முதல் பொருள் பொன்னே. சுரங்கத்தில் வேறு பொருள்களுடன் சேர்ந்து பொன் கிடைக்கிறது. இப்படிக் கிடைப்பதை மின்சாரத்தின் உதவியாலும் வேறு முறைகளாலும் பிரித்தெடுக்கிறார்கள். பொன் கலந்த ஓர் உப்பை வைத்திய முறையில் அதிகமாக உபயோகிக்கிறார்கள். இது பாம்பின் விஷத்தைப் போக்குகிறது. இதை நகை நட்டுகளுக்கும் பூச்சுக்குங்கூட உபயோகிக்கிறார்கள். பல தேசங்களில் பொன் சுரங்கங்கள் இருக்கின்றன.

இந்தக் காலத்து விஞ்ஞானிகள் 'பொன் பசுமை கலந்த மஞ்சள் நிறம் உடையது; ருசியற்றது; இழுத்தபடியெல்லாம் நெகிழக் கூடியது; எத்தகைய சீதோஷ்ண நிலையிலும் மாறாத தன்மை உடையது' என்றெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள். பழைய காலத்துச் சித்தர்கள் பொன்னைப்பற்றி இன்னும் விரிவான ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்கள். "பொன்னை மருந்தாக உபயோகித்தால் மிக நன்மை தருகிறது. பொன் வேறு பொருளோடு ஒன்றிவிடக் கூடியது. துவர்ப்பு, கசப்பு, இனிப்பு ஆகிய ருசிகளைக் கொண்டது. இது மருந்தாக உடலுக்குச் சேரும்போது குளிர்ச்சியாகவும் இனிப்பாகவும் இருந்து, கப, வாத, பித்தங்களால் ஏற்படும் தோஷங்களைப் போக்குகிறது. மூப்பைத் தடுக்கிறது. வாய்க்கு ருசியை உண்டாக்கிக் கண்ணுக்கு ஒளியைக் கொடுக்கிறது. ஆயுளை வளர்க்கிறது. ஞாபக சக்தியை அதிகப்படுத்துகிறது. வீரியத்தை வளர்க்

காப்பிரைட், பிரஜா மதம் (கன்னடம்; 19-4-'53), பங்களூர்.

கிறது" என்று சித்தர்கள் சொல்லுகிறார்கள்.

"பொன் கரையக்கூடியது. புஷ்டியைக் கொடுக்கும். விஷத்தால் ஏற்பட்ட தீமையை மாற்றும். வாதம் முதலிய திரிதோஷங்களால் இளைத்த உடலுக்குப் பலம் தரும். க்ஷயம், பைத்தியம் முதலிய நோய்களை நீக்கிப் புத்தியையும் ஞாபக சக்தியையும் வளர்க்கும். சுகத்தைக் கொடுக்கும். ருசியைக் கொடுக்கும். பசியைத் தூண்டி, உடல் கை, கால்களில் உள்ள நோயைத் தீர்க்கும். இனிய ருசி உள்ளது. கிழத்தனத்தை விரட்டி உடலை வஜ்ரகாயம் ஆக்கும்" என்று ஒருவர் சொல்லுகிறார்.

"பொன் குளிர்ச்சியானது. மூப்பை அகற்றுவது. பலம் கொடுப்பது. ஆயுளை வளர்த்துக் கிழவனைக் குமரனாக்குவது. துவர்ப்பு, கசப்பு, இனிப்பு என்னும் ருசிகளை உடையது. பவித்திரமானது. வாதம் முதலிய நோய்களால் மெலிந்த உடலைப் பலப்படுத்துவது. கண்ணுக்கு நன்மை தருவது. புத்தியையும் ஞாபக சக்தியையும் சிறப்பாக வைப்பது. இதயத்துக்கு இதமானது. காந்தியைக் கொடுப்பது, வாக்கைச் சரிப்படுத்துவது. க்ஷயம், பைத்தியம், திரிதோஷ ஜ்வரம் முதலிய நோய்களைத் தீர்ப்பது" என்று வேறொரு வைத்தியர் அபிப்பிராயம் சொல்லுகிறார்.

இந்தக் காலத்தில் பொன்னைத் திராவகங்களில் இட்டு அது கரைவதிலிருந்தோ கரையாமலிருப்பதிலிருந்தோ அதன் மதிப்பை அறிகிறார்கள். பொன்னின் மாற்றைக் கொண்டும் சுத்தப் பொன்னா இல்லையா என்று தெரிந்துகொள்ளுகிறார்கள்.

பொன்னை மருந்தாக உபயோகிக்கும்போது சுத்தப்படுத்தியே உபயோகிப்பார்கள். சரியாகச் சுத்தம் செய்யாத பொன் உடலுக்கு நன்மை செய்வதைவிட்டுத் தீமையும் செய்துவிடும். அதனால் மருந்தாக உபயோகிக்கு முன், பொன்னின் தோஷங்களை அறிந்து நீக்கிய பின்பே உபயோகிப்பார்கள்.

பொன் எல்லா விஷ நோய்களையும் நாள் பட்ட குடல் நோய்களையும் போக்கும். சுவர்ண பஸ்மம் திவ்வியமான காந்தியைக் கொடுப்பதால், க்ஷயரோகம், பித்தவாதம், பிரமேகம், கிராணி, அதிசாரம் முதலிய கொடிய நோய்களையும் பல ஜுரங்களையும் போக்கி உடலுக்குச் செழிப்பைக் கொடுக்கிறது. இந்தக் காலத்திலும் பொன்னைப் பற்றி நிறைய ஆராய்ந்து பல நோய்களுக்கு மாற்றாக இதை உபயோகிக்கிறார்கள். இதை அளவுக்கு மீறி உபயோகித்தால் வாந்தி, பேதி உண்டாகும். பொன்னை ஊசி மூலமாய் உடலில் ஏற்றுவதால், ரத்த அழுத்தம் என்ற நோய் நீங்குகிறது. ஏனென்றால், கௌரீபாஷாணம் என்ற மருந்தைப் போல் இது ரத்தக் குழாய்களை விரியச் செய்கிறது. பொன்னைக் கௌரீபாஷாணத்தோடு சேர்த்து மேக நோய்க்கும், ப்ரோமைடுடன் சேர்த்துக் குஷ்ட ரோகத்துக்கும் ஊசிமூலம் மெயில்கார்டு என்னும் மேல் நாட்டு டாக்டர் ஒருவர் க்ஷயரோகத்துக்கு மருந்தாக உபயோகித்திருக்கிறார். பொன் சம்பந்தப்பட்ட மருந்துகளை ஊசிமூலமாக ஏற்றும்படியே தயாரித்திருக்கிறார்கள். இதனால் குடல் நோய்கள், ஜுரங்கள், வாய்ப்புண், அஜீரணம், உடம்பு இளைத்தல் முதலிய நோய்கள் குணமாகின்றன. ஆனால்

மருந்து ஏராளமாக ஏற்றிய பின்பே குணம் தெரியும்.

நம் நாட்டில் நம் முன்னோர்கள் தங்க பஸ்மத்தை அதிகமாகப் பயன்படுத்தினார்கள். இப்போது அதன் உபயோகத்தை அறிந்தவர்கள் மிகச் சிலரே. மேல் நாட்டு முறையில் ஜன்னிகளுக்குப் பொன்னை உபயோகித்ததில் நூற்றுக்கு எழுபது விகிதம் நோய் குணமாகியிருப்பதாக எல்லா நாட்டு டாக்டர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பொன்னில் பாதி மல மூத்திராதிகளுடன் வெளியேறிவிடுகிறது. பாக்கி கல்லீரலிலும் மற்றப் பகுதிகளிலும் தங்கி உடலில் கலக்கிறது.

மனிதனுக்கு உபயோகப்படக் கூடிய மருந்து வகைகளில் பொன் மிகச் சிறந்தது. இதைச் சிறிய அளவில் $\frac{1}{4}$ கிரெயினிலிருந்து 1 கிரெயின் வரைக்கும் கொஞ்சங் கொஞ்சமாக அதிகப்படுத்தி உபயோகிக்கவேண்டும்.

குடி மயக்கம்

ஒரு நாள் மாலையில் ஆசாமி குஷியாய் நண்பர்களோடு கூடி நிறையக் குடித்துவிட்டான்.

பிறகு தட்டித் தடுமாறி வீட்டுக்கு வந்துகொண் டிருந்தான். அப்போது நேரே ஒரு மரத்தில் போய் மோதிக் கொண்டான். வெகு ஜாக்கிரதையாய்ப் பின் வாங்கி மறுபடியும் முன்னேறினான். மீண்டும் மரத்தை மோதினான். பல்லைக் கடித்துக்கொண்டு மூன்றாவது முயற்சி புரிந்தான். அப்போதும் மோதுதல்தான். பல படையெடுப்பு நடத்தியும் மரம் மோதிக்கொண்டே யிருந்ததே யொழிய வழி விலகிக் கொடுக்கவில்லை.

ஆசாமி கடைசியிலே சலித்துச் சோர்ந்து உட்கார்ந்து கொண்டே மனங் குழம்பியவனாய், "தொலைந்தேன்; தொலைந்தேன்! நடுக்காட்டிலே சிக்கிக்கொண்டு தொலைந்தேன்" என்று புலம்பலானான்.

—'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்'

தமக்குத் தாமே பேசுகிறவர்

ஒரு புரொபஸர் எப்போதும் தமக்குத் தாமே பேசிக் கொள்வார். ஒரு கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது, அவருடைய சகா ஒருவர் கேலியாக, "புரொபஸர், நீங்கள் தனக்குத்தானே பேசிக்கொள்கிறீர்களே. சுயப்பிரக்ஞையோடுதான் இப்படிப் பேசுகிறீர்களா? பிரக்ஞையில்லாமலோ?" என்று கேட்டார்.

"பிரக்ஞையோடு, வேண்டுமென்றேதான் இப்படிப் பேசுகிறேன். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, ஒரு புத்திமான் பேசுவதையே கேட்க எனக்கு ஆவல்; இரண்டு, ஒரு புத்திமானுடன் பேசுவதிலேயே எனக்கு ஆவல்" என்று புரொபஸர் பதில் அளித்தார்.

—சார்லஸ் ஃபாலின்

நவீன இந்தியாவின் இரும்புத் தொழில் நகரம்—

டாடா தொழிற்சாலை

★

இந்தியா இப்போது காமன் வெல்திலுள்ள நாடுகளுக்குள் எஃகு உற்பத்தியில் சிறந்து விளங்குகிறது. இங்கே 12,00,000 டன் கட்டி இரும்பு உற்பத்தியாகிறது. 10,00,000 டன்னுக்குக் கட்டி எஃகும் சுமார் 7,50,000 டன்னுக்குப் பலவித எஃகுக் கருவிகளும் வருஷந்தோறும் இங்கே தயாராகின்றன.

'டிஸ்கோ' என்ற டாடா இரும்பு, எஃகுக் கம்பெனியார் சென்ற வருஷம் 11,12,000 டன் கட்டி இரும்பும், 10,61.000 டன் கட்டி எஃகும், 7,84,800 டன் இரும்பு, எஃகுக் கருவிகளும் தயாரித்திருக்கிறார்கள்.

இவ்வளவு பெரிய உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் டாடா கம்பெனியைப்பற்றிய வரலாறு ரசமானது. ஜம்ஷேத்ஜி நுஸர்வான்ஜி டாடா, இந்தியாவில் தொழில்துறையில் முதல் முதல் ஈடுபட்டவர்களில் முக்கியமானவர்.

இரும்பும் எஃகும் உற்பத்தி செய்தால்தான் ஒரு நாடு தொழில் துறையில் முன்னுக்கு வர முடியும் என்று உணர்ந்தார் ஜம்ஷேத்ஜி. இருபத்தைந்து வருஷ காலம் ஆராய்ந்து பிஹாரிலுள்ள சாக்சி என்ற கிராமத்தில் நிலக்கரிச் சுரங்கங்களுக்கருகில் உள்ள இடத்தில் இரும்பு ஏராளமாகக் கிடைக்கும் என்று கண்டார். தண்ணீர் வசதியும் அங்கே ஏராளமாக இருந்தது. இப்போது அந்த இடத்தில்தான் ஜம்ஷேத்பூர் தொழிற்சாலை அமைந்திருக்கிறது.



தொழிற்சாலையின் ஸ்தாபகர்
ஜம்ஷேத்ஜி டாடா

மூன்றே வாரத்தில் அதற்கான மூலதனம் 66 லட்சத்து 30 ஆயிரம் சேர்ந்துவிட்டது. 1907 - இல் டாடா இரும்பு எஃகுக் கம்பெனி ஸ்தாபிதமாயிற்று. 1908-இல் கட்டிட அமைப்பு வேலைகள் தொடங்கின. அங்கே 1911-இல் கட்டி இரும்பும் 1912-இல் கட்டி எஃகும் உற்பத்தி செய்யத் தொடங்கினார்கள். 1914-இல் பெருவாரியில் எஃகு உற்பத்தி செய்யலானார்கள்.

ஆரம்பத்தில் ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் தொழில் நிபுணர்கள் வந்து பல

மூலம்: காமன்வெல்த் டுடே (ஆங்கிலம்; 18), லண்டன்.

விதத்தில் துணை புரிந்தார்கள். இப்போது கம்பெனியை இந்தியத் தொழில் நிபுணர்களே கவனித்துக் கொள்கிறார்கள். இவர்களில் பலர் ஜம்ஷேத்பூர் டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் என்ற ஸ்தாபனத்தில் பயிற்சி பெற்றவர்கள். இந்தியர்களே விஞ்ஞானிகளாகவும், தொழில் நுணுக்கம் அறிந்தவர்களாகவும் இருந்தால்தான், உற்பத்திப் பொருளைப்பற்றி இந்தியாவில் செய்தது என்று சொல்லிப் பெருமை கொள்ளமுடியும் என்பதை அப்போதே உணர்ந்து இந்தப் பயிற்சி நிலயத்தை நிறுவ முயற்சி எடுத்துக்கொண்டார் டாடா.

இப்போது இந்தத் தொழிற்சாலையில் இரும்பு எஃகுத் தகடுகள், தட்டுகள், கம்பிகள், கட்டிட வேலைக்குப் பயன்படும் தூண், கிராதிகள், ரெயில் வண்டிக்குப் பயன்படும் ஸ்லீப்பர்கள், சக்கரம், அச்சு முதலியவை, விவசாயக் கருவிகள், மின்சாரத் தொழிலுக்கு வேண்டிய விசேஷத் தகடுகள் இப்படிப் பல பொருள்களைத் தயாரிக்கிறார்கள். இன்னும் தார், அம்மோனியம் ஸல்ஃபேட், பென்ஸால் முதலிய பொருள்களும் இங்கே கிடைக்கின்றன. இந்தத் தொழிற்சாலையோடு சம்பந்தமுள்ள பல கம்பெனிகள் அருகில் இருக்கின்றன. அவைகளில் ஆணி, திருகு, தகரத்தகடு, மின்சாரக் கேபிள், எஃகு உருளைகள் முதலியவை தயார் செய்கிறார்கள். டாடா எஃகுக் கம்பெனிக்கே சொந்தமான இரும்புச் சுரங்கங்களும் நிலக்கரிச் சுரங்கங்களும் வேறு இருக்கின்றன.

இப்போது 8,50,000 டன் எஃகுக் கருவிகள் தயாராகின்றன. இன்



தொழிலாளர் குழந்தைகளுக்கு உணவளிக்கும் சிற்றுண்டிச்சாலை

னும் சற்று முயன்று 93,00,000 டன் தயாரிப்பதாகத் திட்டமிட்டிருக்கிறார்கள். இதனால் மிகுதியாக 30 கோடி ரூபாய் மதிப்புக்கு உற்பத்தி செய்ய முடியும். இந்தத் திட்டம் நிறைவேற ஆறு அல்லது ஏழு வருஷமாகும்.

ஒரு காலத்தில் பட்டிக்காடாக இருந்த இந்த இடம் இன்று எஃகு உற்பத்தியால் பெரிய நகரமாக விளங்குகிறது. ஒழுங்காகத் திட்டமிட்டு அமைந்த இந்த நகரத்தில் பூங்காக்கள், அழகிய குளங்கள், நல்ல கடைவீதிகள், ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், பால் தயிர்ப் பண்ணை, சினிமா, ஹோட்டல் வசதிகள் எல்லாம் இருக்கின்றன.

ஐக்கிய அமெரிக்காவுடன் யுத்தம்

லத்தீன் அமெரிக்க நாடு ஒன்றுக்குப் பொருளாதார நிலையில் கஷ்டம் ஏற்பட்டது. மந்திரி சபை கூடியது.

திடீரென்று ஒரு மந்திரி எழுந்து, "இதற்கு ஒரு யுக்தி எனக்கு உதயமாகிவிட்டது. ஐக்கிய அமெரிக்காவுடன் போர் தொடுப்போம்" என்றார்.

"என்ன! உம்மை நாளைக்கே தூக்கில் போட்டுவிடுவேன்" என்று கண்டித்தார் குடியரசின் தலைவர்.

"ஏன்? உங்களுக்குப் புரியாமல் பேசுகிறீர்கள். ஜெர்மனியைப் பாருங்கள். அது ஐக்கிய அமெரிக்காவுடன் போரிட்டது. இன்று அதன் நிலை என்ன? ஏராளமாகப் பணம், உணவு, வேலை எல்லாம் அங்கே கொழிக்கின்றன. இத்தாலியைப் பாருங்கள். அதுவும் ஐக்கிய அமெரிக்காவுடன் சண்டையிட்டதுதான். அதன் ஆலைத்தொழில்கள் அதிவேகமாய் வளர்கின்றன. அங்கே ஏராளமான ஐக்கிய அமெரிக்கர் பிரயாணம் செய்து பணத்தைக் கொட்டுகிறார்கள். ஜப்பானைத்தான் பாருங்களேன். அதற்கு நல்ல மார்க்கெட்டுகள் கிடைத்திருக்கின்றன; நல்ல நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள்; ஐக்கிய அமெரிக்காவின் பணம் கிடைத்திருக்கிறது. ஆகவே, நாமும் ஐக்கிய அமெரிக்காவுடன் போர் தொடுப்போமே!" என்றார் அந்த மந்திரி.

மந்திரிகளெல்லாம் வெகு உற்சாகமாக இதை வாதிக்கத் தொடங்கினார்கள்.

"நல்லது; யுத்தப்பிரகடனத்தைத் தயாரிக்கட்டுமா?" என்று கேட்டார் தலைவர்.

"சரிதான். ஆனால் அதில் ஒரு சங்கடம் இருக்கிறது" என்றார் நிதி மந்திரி.

"அதென்ன?"

"அதாவது, யுத்தத்தில் நாம் ஜயித்துவிட்டால் என்ன செய்வது?"

விவாதம் இதோடு முடிவுற்றது.

—'மகஸீன் டைஜெஸ்ட்'

திபேத்து நாடோடிக் கதை:

லாமாவின் மாடு

பால் ரோச்

திபேத்தில் ஒரு லாமா இருந்தார். அவர் புண்ணிய கர்மங்களைச் செய்வார்; பிரார்த்தனை புரியத் தவற மாட்டார். யாக் என்ற வகையைச் சேர்ந்த ஒரு சடை மாடு அவரிடம் இருந்தது. அவருக்குச் சுமை மாடாக அது உதவியது. நல்ல மாடு. ஆனால், ரொம்பவும் அப்பாவி.

லாமா ஒரு நாள் கீழே பசுமையான பள்ளத்தாக்குக்குச் சென்று விட்டுத் திரும்பி வந்தார். அப்போது சடை மாடு தன்னுடைய மிருதுவான மோவாய்க் கட்டையை லாமாவின் தோள்மீது வைத்து உராய்ந்தது.

தம்மிடம் சடைமாடு இப்படிக் கொஞ்சுவதைக் கண்ட லாமா, மாட்டின் தாடியை அன்போடு உருவித் தடவிக் கொடுத்தார்.

மாடு, "ஐயனே, மூன்று வருஷ காலமாய் உங்களிடம் நான் சுமை மாடாக உழைக்கிறேன். சந்தோஷமாய்த்தான் இருக்கிறேன். ஆனால், சமய உண்மைகளை எனக்கு நீங்கள் சொல்லிக் கொடுக்கவில்லையே. எனக்கு வயசு மூன்றரை ஆகிவிட்டது. இன்னமும் சமய ரகஸ்யத்தை அறியாத சழக்கனாயிருக்கிறேன்; பகவானைப் பற்றி ஒன்றும் அறியாத கசடனாயிருக்கிறேன்" என்று ஏங்கியது.



காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம், 15-2-'53), கல்கத்தா.

"சரிதான். சமய உண்மைகளை அறிவதால், உனக்குப் பிரயோ ஜனம் என்ன? அதனுல் லாபம் உண்டென்று நினைக்கிருய்?" என்று லாமா கேட்டார்.

"நிச்சயம் லாபம் உண்டு."

"அப்படியானுல் சரி. நான் உனக்கு அவைகளைச் சொல்லிக் கொடுக்கிறேன். ஆனுல் ஒன்று: நீ உண்மையான மதபக்தனுக வேண்டும் என்றுல், பிறரால் உன்னை அப்படி ஆக்க முடியாது; நீயாகவேதான் ஆக வேண்டும்."

மாடு அடுத்த நாள் காலையில் தேவதாரு மரக்கட்டைகளைக் காட்டிலிருந்து குகைக்குச் சுமந்து வந்தது. பிறகு, தன் எஜமானின் பக்கத்தில் சென்று முகத்தைக் கோணிக்கொண்டு ஆவலோடு பாடம் கேட்கத் தயாராய் நின்றது.

"முதலில் பரமாத்மாவைப் பற்றி ஆரம்பிக்கலாம். அவரை எங்கே தரிசிக்கலாம் என்பதை உனக்குப் போதிக்கிறேன். துயரமும் கஷ்டமும் நிறைந்த பொருள்களிலெல்லாங்கூட அவருடைய சாயையை நீ காணலாம்" என்றுர் லாமா.

"சாயையை என்ன? அவரையே கூட நாம் காணலாமே" என்று கண்களைத் தருத்தி விழித்துக் கொண்டு சொல்லியது சுமை மாடு.

"முடியாது, நண்பனே, முடியாது. அவரை இங்கே நாம் காண முடியாது. இந்த உலகம் பகவானின் மகிமையில் பிறந்த ஓர் அற்பப் பொருள். இதைக் காணும் போதே நாம் லாகிரி அடைந்து விடுகிறேம். பரிபூர்ண அழகு வாய்ந்த பகவானை நேரே பார்த்தால், நாம் கண் கூசிப் போய்விட மாட்டோமா? இங்கே பகவானிடம் நம்பிக்கை வைத்துப் பக்தி செலுத்துவதுதான் நம்மால் முடியும். அதுதான் பத்திரமான வழி" என்றுர் லாமா.

இப்படியாகப் பாடம் ஆரம்பித்து விட்டது. ஒவ்வொரு நாள் காலையிலும் லாமாவின் சங்கீர்த்தனம் முடிந்ததும், மாடு குகையில் வந்து லாமாவின் பக்கத்தில் நிற்கும்; அதன் கண்களில் ஆர்வம் ததும்பும். எஜமானின் சாந்தமான குரலை மணிக்கணக்காய் அது செவி சாய்த்துக் கேட்கும். இடையில் எவ்விதச் சந்தடியும் இடைஞ்சலுமின்றி நிம்மதியாயிருக்கும். ஆனந்த மேலீட்டால் மாடுமட்டும் சில சமயம் 'அம்மா' என்று கத்துவதுண்டு.

வாரங்கள் சென்றன. பாடங்கள் ரொம்ப தூரம் முன்னேறி விட்டன. மாரி சென்று வசந்தம் வந்தது. பனி உருகியது. மரங்கள் தளிர்த்துப் பூத்தன. செம்மலரும் வெண்மலரும் மிதக்க அருவிகள் பெருக்கெடுத்துப் பாய்ந்தன.

சகல விலங்குகளையும்விடச் சடைமாடே மிக மகிழ்ச்சியுற்று நிம்மதியாயிருந்தது. அதன் நடையிலே ஒரு மிடுக்குத் தோன்றியது. அதன் முகத்திலே ஓர் உற்சாகம் ததும்பியது. மாடு பாடம் கேட்கும் போது இடையிடையே மறித்துப் பேசத் தொடங்கியது; "இதைத்தான் முந்தியே சொல்லிவிட்டீர்களே", "இதுதான் தானே புரியும் விஷயமாயிற்றே" என்றெல்லாம் முழங்கியது.

மற்ற விலங்குகளோடு மாடு பழகும் விதத்திலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. ஒரு காலத்தில் இந்தச் சடை மாடு சிறு கன்றுக இருந்தபோது, இதன் உயிரைக் காப்பாற்றியது ஒரு வெள்ளாட்

டின் பால்தான். அந்த வெள்ளாட்டையே இப்போது, "கிழட்டு மூடம்" என்று மாடு தூஷிக்கத் தொடங்கியது. மண வாழ்க்கையின் புனிதத்தைப்பற்றி லாமா செய்த பிரசங்கங்களைக் கேட்ட பிறகு, பெட்டைக் கோழிகளையெல்லாம் "வேசைக் கும்பல்" என்று மாடு கேலி செய்தது. "பாவ வாழ்க்கை வாழும் குழி முயல்களுக்கு இனி நான் தீனி சுமந்து வரமாட்டேன்" என்றும் மாடு பிரகடனம் செய்துவிட்டது.

இந்தக் குறிகளையெல்லாம் கண்ட லாமாவுக்கு ஒரு விஷயம் புலனாயிற்று. மத விஷயங்களைப் பற்றிய உபதேசங்களை மாடு எவ்வளவுக் கெவ்வளவு கேட்டதோ அவ்வளவுக் கவ்வளவு அதன் நடவடிக்கையும் சகிக்க முடியாமல் போய்விட்டது என்பதை அவர் கண்டு கொண்டார். முதலில் கர்வம், அப்புறம் முரட்டுத்தனம், கடைசியில் அடங்காப்பிடாரித்தனம் எல்லாம் மலிந்துவிட்டன.

மே மாசம் ஒரு நாள் வெயில் கன கடுமையாய்க் காய்ந்துகொண்டிருந்தது. சடை மாட்டின்மீது சவாரி செய்தபடி மலையிலிருந்து அடிவாரத்துக்கு லாமா இறங்கிக் கொண்டிருந்தார். அடிவாரத்தில் யாரோ ஒரு பெண் பிரசவ அவஸ்தையிலிருந்தாள். அவளுக்கு மருத்தவ உதவி புரியத்தான் லாமா சென்றுகொண் டிருந்தார். நடந்துகொண்டே இருந்த சடை மாடு சட்டென்று ஒரு மூங்கில் புதர் அருகே போய் நின்று கொண்டது.

"ஐயனே, இறங்குங்கள். ஜப தபங்களைச் செய்ய வேண்டிய உச்சி நேரம் வந்துவிட்டது. ஆயுளின் அற்பத்தையும், சகல ஜீவன்களின் அநித்தியத்தையும்பற்றி இன்று சிந்தனை புரிந்து தியானிப்போம்" என்றது.

"என் அருமை மாடே, இப்போது நாம் இங்கே நின்று தாமதிக்கக்கூடாது. அப்படிச் செய்தால், ஒரு ஜீவனின் ஆயுள் மேலும் அற்பமாய்க் குறுகிவிடும். நடந்துகொண்டே தியானத்தைச் செய்" என்றார் லாமா.

"என்னது! கல்லும் கரடுமான இந்தப் பாதையில் நடந்து கொண்டே நான் தியானம் புரிவதா? அது உங்களுக்குச் சௌகரியமாயிருக்கலாம். உங்களுக்கென்ன? டலாய் லாமா மாதிரி ஜம்மென்று உட்கார்ந்துகொண்டிருக்கிறீர்கள்! நானல்லவா தட்டித் தடுமாறி நடந்துகொண்டிருக்கிறேன்! நான் சொல்வதைக் கேளுங்கள்; இறங்குங்கள்" என்றது மாடு.

லாமா மிகவும் பொறுமைசாலி. அவருக்கே இப்போது மகா கோபம் வந்துவிட்டது.

"மாடே, நட! ஏற்கனவே ரொம்ப நேரமாகிவிட்டது" என்று கர்ஜித்தார்.

"வீணே என் பணிவைச் சோதிக்கிறீர்கள். இனி நான் என்ன செய்யட்டும்" என்றது மாடு.

இரண்டு முன்னங் கால்களையும் மண்டியிட்டுப் படுத்து, மூங்கில் புதரிலே லாமாவைத் தள்ளியது. நல்ல வேளையாக லாமாவை முள் ளுக் குத்தவில்லை. அவர் தப்பினார். ஆனால், அவருக்கு மன எரிச்சல் மாத்திரம் மூண்டது. ஆயினும், என்ன செய்வது? மெல்ல எழுந்து உடம்பைத் துடைத்துக்கொண்டு, கீழே கார்ப்பஸ்திரீ இருந்த கிராமத்துக்கு ஓட்டமாய் ஓடினார். மருத்துவ உதவி புரிந்து அவள் உயிரைக்

காப்பாற்றினார். அந்தப் பெண் அருமையான ஒரு சிசுவைப் பெற்றாள்.

சடை மாடோ, மிக்க நிம்மதியாக அந்த மூங்கில் புதர் அருகிலே படுத்தபடி ஒருமணி நேரம் ஆனந்தமாய் ஜபதபங்களைச் செய்தது. அதன் உள்ளத்திலே உணர்ச்சி கொந்தளித்தது; பக்தி வெள்ளம் பொங்கியது; மாடு நெக்கு நெக்குருகிப் பிரார்த்தனை புரிந்தது.

அடுத்த நாள் போது விடிந்ததும், குகையில் லாமாவிடம் வழக்கப்படி மாடு பாடம் கேட்க வந்தது. அப்போது எஜமானின் முகத்தில் புதுமையான ஓர் ஒளி துலங்கியதை அது கண்டது.

"என் மகனே" என்று மாட்டை விளித்தார் லாமா. "இதோ பார்; இந்தப் பாடங்களை நாம் ஆரம்பித்தபோது மாரிக்காலம். அது போய் வசந்த காலம் வந்துவிட்டது. பள்ளத்தாக்கில் உள்ள மரங்களெல்லாம் தளிர்த்துப் பசுமையாக இருக்கின்றன. பாடங்களில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்பதை இப்போது கணக்குப் பார்க்க வேண்டும்" என்றார்.

"ஆமாம், ஐயனே. 'உன்னை அறி' என்றுதானே வேதமும் சொல்கிறது" என்றது மாடு.

மாட்டின் இந்த ஞான வாக்கை லாமா சட்டையே செய்யவில்லை.

"மத விஷயத்தில் படிப்படியாய் நீ முன்னேறி வந்திருப்பதை நான் கவனித்தேன். இப்போது உன் பாடங்கள் பூர்த்தியாகிவிட்டன. இப்போது நீ பரிபூர்ண சமய ஞானி ஆகிவிட்டாய்" என்றார்.

"அப்படியா!" என்று கனைத்தது மாடு. பெருமை பூரிக்கத் தன் சடைமயிரை உலுப்பியது. "இனி நான் சந்நியாசி மடலாயம் ஒன்றில் புகுந்துவிட வேண்டியதுதான். சமய வாழ்க்கை வாழ எனக்குப் பேராவலாயிருக்கிறது" என்று சொல்லியது.

லாமா புன்சிரிப்புடன், "நீ போதிய அளவு முன்னேறி விட்டாய். திபேத்திலுள்ள அத்தனை சந்நியாசிகளும் சேர்ந்தால்கூடச் சமய ஞானத்தில் உன்னை மிஞ்ச முடியாது. ஆனால் ஒரே ஒரு விஷயம் பாக்கியிருக்கிறது" என்றார்.

"அதென்ன, ஐயனே?"

"அது ரொம்பவும் அற்ப விஷயம். அப்படி ஒன்றும் பிரமாதம் இல்லை. நீ புரிந்துகொள்வாயா?"

"குருபிரானே, என் காதுகளை அகலத் திறந்துகொண்டிருக்கிறேன். என் மூளை அருவிபோல் தெளிவாயிருக்கிறது" என்றது மாடு.

"சரி. கவனமாய்க் கேள். உனக்கு நான் ஒரு கதை சொல்லப் போகிறேன்."

மாடு சௌக்கியமாய்த் தரையில் மண்டியிட்டுப் படுத்தது; சடைத் தலையைச் சாய்த்து, குருவின் வாயையே கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது.

"முன்னொரு காலத்தில் குடியானவ வாலிபன் ஒருவன் இருந்தான். அவனுக்கு வரனாக ஓர் அழகான பெண்ணை நிச்சயித்திருந்தது. கல்யாண முகூர்த்தத்துக்குச் சில நாளைக்கு முன்பு நகை வாங்குவதற்காக வாலிபன் கிராமத்துக்குப் போனான். அந்த அழகிக்கு ஏற்ற நகை ஒன்றும் கிடைக்கவில்லை. பக்கத்தில் உள்ள பட்டணத்துக்குப் போனான். அங்கேயும் ஒன்றும் கிடைக்கவில்லை. பிறகு பெரிய தலைநகரத்துக்குப் போனான். பாவம்! அங்கே இருந்த மிக நேர்த்தியான நகை

களையெல்லாம ராஜா தன் மகளுக்காக முன்னதாகவே வாங்கிவிட்டான். குடியானவ வாலிபன் ஒரு வார காலம் வீணே அலைந்து விட்டுத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வெறுங்கையனாய் வீடு திரும்பினான். தன் வீட்டுக்குக் கூப்பிடு தூரத்தில் வரும் போது, தன் மாமனைக் கண்டான். மாமன் ஒரு பெரிய கிழவன்.

" 'பையா, என் இப்படித் துயருற்றிருக்கிறாய்?' என்று கேட்டான் மாமன்.

"வாலிபன் தன் சங்கடத்தைச் சொன்னான்.

" 'இவ்வளவுதானே! என்னோடு வா' என்றான் மாமன். வாலிபனைத் தன் வீட்டுக்குள்ளே அழைத்துக் கொண்டு போனான். ஒரு நகைப் பெட்டியை எடுத்துத் திறந்து, அப்படியே தரையில் குப்புறக் கவிழ்த்தான். சாணத்தால் மெழுகிச் சுத்தமாயிருந்த தரையில் தக தக வென்று மின்னிக்கொண்டு, பல நகைகள் விழுந்தன. வெள்ளி மெட்டிகளும் தங்க மோதிரங்களும் வளையல்களும் முத்துச் சிமிக்கிகளும் ரத்தினப் பதக்கங்களும் அட்டிகைகளும் அவற்றில் இருந்தன.

" 'பையா, இவையெல்லாம் என் தாய் வாலிபப் பெண்ணாயிருந்த போது அணிந்திருந்த நகைகள். என் மனைவிக்கு இவை கிடைத்திருக்கும். ஆனால், நான் மணமே செய்துகொள்ளாது கிழவனாகிவிட்டேன். உனக்கு இஷ்டமானவைகளை நீ பொறுக்கி எடுத்துக்கொள். இவ்வளவு பக்கத்திலே இருக்கும் நகைகளை விட்டு நீ எங்கெங்கேயோ போய்த் தேடியிருக்கிறாயே, அது தான் எனக்கு வருத்தமாயிருக்கிறது' என்றான் மாமன்.

"இவ்வளவுதான்; இதோடு என் கதை முடிந்தது" என்றார் லாமா. பிறகு, மேஜையின் மறு பக்கத்துக்குச் சென்றார். ஒரு கோப்பையில் ஆட்டுப்பாலை ஊற்றிக் குடித்தார்.

மாடு ஒரே ஆட்டமாய் ஆடிக் கொண்டு, "இந்தக் கதைக்கும் என் விஷயத்துக்கும் என்ன சம்பந்தம்? இதனால் கிடைக்கும் படிப்பினை என்ன?" என்று உறுமியது.

"படிப்பினையா! அட மாடே, உன் புத்தி என்ன கன்றுப் புத்தியாயிருக்கிறதே! நீதான் படிப்பினை. உன்னைப்பற்றியேதான் இந்தக் கதையைச் சொன்னேன்" என்றார் லாமா.

"உங்கள் கருத்து எனக்குப் புரியவில்லையே."

"புரியாது; புரியத்தான் புரியாது. நான்தான் சொன்னேனே; இந்தக் கதையின் சூட்சுமம் உன் புத்திக்கு எட்டுவது கஷ்டந்தான். முன்னொரு காலத்தில் நீ உன் கடமையைச் செய்தாய்; விநயத்தோடிருந்தாய்; உன்னை ஓர் ஊழியனாக மதித்தாய்; பிறருடனெல்லாம் நட்போடிருந்தாய். அப்போது உனக்கே தெரியாமல் நீ ஓர் உண்மையான சமய ஞானியாக இருந்தாய்; எப்படியென்றால், உலகமே பகவானின் சித்தத்தில் தோன்றிய அற்புதக் காட்சி என்று நீ மதித்தாய். பிறகு ஒரு மாறுதல் ஏற்பட்டது. சமய விஷயங்களைப் பாடம் கேட்கத் தொடங்கினாய். நீண்ட ஜபதபங்களில் ஈடுபட்டாய். பிரமாதமான சிந்தனைகள் புரியத் தொடங்கினாய். இப்போது பரம சமய ஞானியாகிவிட்டாய். ஆமாம்; இப்போது இந்தப் பக்கத்துப் பிராணிகளுக்குள்ளேயே தலை சிறந்த சமய ஞானி நீதான்" என்றார் லாமா.

இங்கே சற்று நின்றுவிட்டுப் பிறகுமீண்டும்தொடர்ந்து, "ஆனல், ஆத்ம பக்குவமே இல்லாத பிராணியும் நீதான்" என்று முடித்தார்.

சடை மாடு அப்படியே மூர்ச்சை போட்டுச் சாய்ந்துவிட்டது. பிறகு மெல்ல விழித்து, "என்ன, ஐயனே? என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டது.

"நான் சொன்னது இதுதான்; ஆத்ம பக்குவமே இல்லாத விலங்கு நீயே. என்னிடம் சுமை மாடாக இருக்கும் வாழ்வு உனக்குப் பிடிக்கவில்லை. அட மூடமே! ஆத்ம பக்குவம் இல்லாத சமய ஞானம் துளியும் பயனில்லை என்று உனக்கு ஏன் தெரியவில்லை?" என்று லாமா கேட்டார்.

"ஆனல்.. ஆனல்.. ஆத்ம பக்குவம் உள்ள எவனுமே சமய ஞானி இல்லையா?" என்று கண்களில் நீர் மல்க மிரள மிரள விழித்துத் திக்கிக்கொண்டே கேட்டது மாடு.

"ஆமாம், மாடே; ஆமாம். ஆத்ம பக்குவம் உள்ள ஒவ்வொருவனும் சமய ஞானிதான். ஆனல், ஒவ்வொரு சமய ஞானியும் ஆத்ம பக்குவம் உடையவன் இல்லை" என்ருர் லாமா.

இதைக் கேட்ட மாடு சற்று யோசித்துப் பார்த்தது. பிறகு அது பேசத் தொடங்கியபோது, அதன் குரலிலே சிறிது பணிவு தொனித்தது.

"அப்படியானல், ஆத்ம பக்குவம் என்பது என்ன?" என்று கேட்டது.

"இன்னதற்கு இன்னது என்று மதிப்பறிந்து நடப்பதுதான் ஆத்ம பக்குவம்."

"என்ன என்ன மதிப்பை அறிய வேண்டும், ஐயனே?"

"அழகு, நன்மை, உண்மை இவையே நிரந்தரமான மதிப்புள்ளவை."

"இவற்றை நான் எங்கே காண்பது?"

"எங்கும் காணலாம். முதலாவதாக, உன் அண்டை வீட்டானிடம் காணலாம். எப்போதும், பகவானிடம் காணலாம். உனக்கு அந்தக் குடியானவ வாலிபனின் கதையை எதற்காகச் சொன்னேன் தெரியுமா? நீயும் அவனைப் போலவே, உன் பக்கத்தில் உள்ள வஸ்துவைத் தேடி எங்கெங்கேயோ வெகு தூரத்தில் அலைந்துவிட்டாய். இனி உன்னிடத்துக்கே திரும்பி விடு. உன் அருகிலேயே பார்" என்று சொன்னர் லாமா.

"அப்படியே செய்கிறேன், ஐயனே" என்றது மாடு. அதன் கண்ணிலே பழைய சாந்தம் மீண்டும் உதயமாயிற்று.

"இதுதான் சரி, என் அருமை மாடே. உன் இருதயத்திலேயே இருக்கிறது பெரும் பொக்கிஷம்" என்று முடித்தார் லாமா.

எதிரெதிரே வரும் இரண்டு ரெயில் வண்டி

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள கன்ஸாஸ் மாகாணத்தில் ஒரு சட்டம் கூறுவது இது: "ஒன்றை ஒன்று 'க்ராஸ்' செய்ய இரண்டு ரெயில் வண்டிகள் எதிரெதிரே வருமானல், இரண்டும் அப்படியே முற்றும் நின்றுவிட வேண்டும்; மற்ற வண்டி போகிற வரையில் இரண்டில் எதுவும் கிளம்பக் கூடாது."

புத்தகச் சுருக்கம்:



பர்மா அகதி

★

இது உல்லாச யாத்திரை வரலாறன்று. பர்மாவிலேயே நெடுநாள் வாழ்ந்து ஊறிப்போன இந்தியக் குடும்பங்கள், கடைசியில் ஜப்பானியரின் வருகைக்கு அஞ்சித் தாய் நாட்டில் அடைக்கலம் புக 1942-இல் ஓடி வந்தன. இத்தகைய அகதிகளில் ஒருவர்-வங்கப் பெண்மணி - இன்னாதும் இனியதும் கலந்த அநுபவங்களைத் தம் நூலில் வெளியிடுகிறார். அவை எவர் நெஞ்சையும் அசைக்கும்.

மூல ஆசிரியர்: *மானஸீ முகோபாத்யாய*
தமிழாக்கம்: *த. நா. குமாரஸ்வாமி*

காப்பிரைட்: 'பிதாய் பர்மா' (வங்காளி நூல்)

பர்மா அகதி

★

மாந்தலே நகரம் இருள் சூழ்ந்து, பெரியதோர் ஆபத்தை எதிர்நோக்கி மருண்டு நின்றது. பர்மா எங்குமே பரபரப்பு, பீதி; ஜப்பானிய ஆக்கிரமிப்புத் தொடங்கியதுமே, பர்மாவை விட்டு இந்தியாவுக்குத் திரும்பிவிடுவது என்று தீர்மானித்தோம். ஆனால் என் கணவர், 'பார்க்கலாம்' என்று காலம் ஓட்டினார். கடைசியில், சமயம் மிஞ்சும் போது, பர்மாவைத் துறப்பதைத் தவிர வழி இல்லை என்று தெரிந்தது. ரங்கூன் மார்க்கம் அடைபட்டு விட்டது; ஜப்பானியப் படை ஒன்று சூறாவளி போல் பெருவழியாக முன்னேறிக் குறுக்கே நின்றது. ஆகவே, நடைப் பாதையாகவே குழந்தை குட்டிகளுடன் நாங்கள் 1942-பிப்ரவரி, 24-ஆம் தேதி புறப்பட்டோம்.

இத்தனை நாள் பழகிய வீட்டையும், நாங்கள் அரும்பாடு பட்டுச் சேகரித்த பொருள்களையும் ஒரு தரம் அழாக் குறையாகப் பார்வையிட்டேன். எந்தச் சாமானைத் தான் எடுத்துக்கொள்வது? ஒவ்வொன்றும் முக்கியமாகவே தோன்றியது. வழி நடப்போர், தலைக்கு இருபது ராத்தலுக்கு மேல் சுமை எடுத்துச் செல்லக்கூடாதென்று சர்க்கார் உத்தரவாம். மிகவும் அவசியமான பொருள்களையே திரட்டிக்கொண்டோம்.

இரவு மணி ஒன்பது; குதிரை வண்டியில் ஏறிக்கொண்டோம்: நான், என் கணவர், என் இரு சிறு பெண்கள் லீனு, தீரா, மாந்தலே வங்காளி ஸ்கூல் ஹெட்மாஸ்டர், வேலைக்காரன் நாயுடு ஆக நாங்கள் ஆறு பேர்.

வழியெங்கும் ஒரு வீட்டிலாவது விளக்கொளி காணவில்லை. பிரயாணிகளின் காலடி ஓசை தவிர வேறு சந்தடியே இல்லை. பத்து ஆண்டுகளுக்கு முன் இந்த நாட்டில் புக்ககத்துக்கு வந்தேன். என் உடலுக்கு ஊட்டமும் உறுதியும், என் மனத்துக்குத் தெம்பும் தெளிவும் தந்து வளர்த்த அன்னை போன்ற இந்த நாட்டைத் துறந்து செல்கிறோமே என்று நினைத்ததும் எனக்கு ஒரே துக்கம். கண்ணீர்த் திரை வெளிக் காட்சியை மறைத்தது. 'மானு, போகிறாயே; என்னை நினைவில் வைத்துக்கொள்' என்று சொல்வது போல் இருந்தது மாந்தலேயின் இருளடைந்த தோற்றம்.

ஸ்டேஷன் வந்தடைந்தோம். ஒரே ஜனக் கூட்டம். எங்கே பார்த்தாலும் சாமான்கள் சிதறிக் கிடந்தன. ஒரு மூலையில் இடம் தேடிக்கொண்டோம். அவ்வளவு கூட்டமிருந்தும், துளியும் சத்தமில்லை. 'விபரீத காலங்களில் எவ்வளவு விரைவாக மனித இனம் ஒரு கட்டுக்கு அடங்கி விடுகிறது பார்' என்று நான் எண்ணிக் கொண்டேன்.

ஜனங்கள் அத்தனை பேரும் 'மனுவா'வுக்கு ரெயில் ஏற வேண்டியவர்கள். காலை எட்டு



மணிக்கு வண்டி புறப்படுகிறதாம். ராத்திரியே வந்ததால்தான் வண்டியில் கொஞ்சமாவது தொத்திக்கொள்ள முடிந்தது.

பிப்ரவரி 25-ஆம் தேதி காலை வண்டி நகர்ந்தது. புளி அடைத்தாற்போல் கும்பல். ஒரே இரைச்சல், துர்க்கந்தம், வேதனைப் பெருமூச்சுத்தான்.

நாங்கள் ஏறிய பெட்டியில் பல ஜாதி மனிதர்கள் இருந்தார்கள். ஓர் ஆங்கிலோ இந்தியக் கும்பல்- இத்தனை சங்கடத்துக்கிடையே கணவனும் மனைவியும் ஹாய்யாகத் தம் மக்களுடன் - இடத்தைப் பரப்பிக்கொண்டு உண்பதும் சிரிப்பதுமாகப் பொழுது போக்கி வந்தது எனக்கு அருவருப்பாக இருந்தது. சுமார் ஐந்து மணிக்கு, மனுவா வந்தது. 'டாமு' ரஸ்தா வழியாக இந்தியாவுக்குப் பிரயாணமாவோர் இங்கே இறங்க வேண்டும். அதனால் ஸ்டேஷனிலிருந்து, அந்த ஊர் நெடுக ஒரே ஜனத்திரள். மனுவா மேற்குப் பர்மாவில் சிந்த்வின் ஆற்றங்கரையிலுள்ள ஊர். புழுதி பறக்கும் இடம். பிரயாணிகள் செய்யும் அட்டூழியங்களால் அது நரகமாகவே தோன்றியது. மனுவாவில், எங்கள் பழைய நண்பரான ஸ்ரீமான் ஸாஹா என்பவர் வீட்டில் தங்கினோம். நாங்கள் இருந்த இடத்துக்குச் சமீபத்திலேயே காலரா கண்டிருப்பதாகச் சொன்னார்கள். மனுவாவிலிருந்து சிந்த்வின் ஆற்றைக் கடந்து 'கலேவா'வுக்குப் போக வேண்டியவர்கள் நாங்கள். ஆற்றைக் கடக்கச் சர்க்கார் 'லாஞ்சு'கள் எப்போதும் போய் வருமாம். ஆனால் ஆங்கிலோ இந்தியர்களுக்கு மட்டுமே அந்த வசதி கிடைத்தது. எங்களுக்குப் படகுதான் கதி. சிரமமாக இருந்தாலும் சில நாள் அங்கே தங்கி ஒரு படகை எங்களுக்கென்று அமர்த்திக்கொண்டோம்; அதற்கு வாடகை முந்நூறு ரூபாய். ஹேமேந்திர ராய் என்பவரின் குடும்பத்தாரும் அங்கே கலந்துகொண்டார்கள். பெரிய குடும்பம். எல்லாரும் ஒரே படகில் சேர்ந்து செல்வதாக ஏற்பாடு. லாஞ்சில் சென்றால் கலேவாவை அடைய நான்கு நாட்கள் பிடிக்குமாம். படகு போகப் பன்னிரண்டு நாட்கள் ஆகுமாம். மனுவாவில் ஒவ்வொரு நாளும் ஜப்பானிய விமானங்கள், "விரைவில் ஊரை விட்டுச் செல்லுங்கள். தங்கினால் ஆபத்துக்குள்ளாவீர்கள்" என்றெல்லாம் பர்மிய மொழியில் துண்டுப் பிரசுரங்களை வீசின. நாங்கள் 28-ஆம் தேதி இரவே, மூட்டை முடிச்சுகளுடன் படகில் ஏறிவிட்டோம். கோரங்கிக்காரன் ஒருவன் சாமான்களைப் படகில் ஏற்றிக்கொண்டிருந்தான். கூலி தரும்போது அவன், கூலிக்குப் பதிலாகத் தன்னையும் அழைத்துப் போகும்படி எங்களை வேண்டிக்கொண்டான். பரிதாபமாக இருந்தது அவன் முகம். அவனையும்

சேர்த்துக்கொண்டோம். இப்போது ஏழு பேர் நாங்கள்.

படகு ஏறிவிட்டோம். ஹேமேன் ராய் ஓடி வந்து தம் நண்பர் ஒருவர் உதவியால் 'லாஞ்சு' கிடைத்துவிட்டதென்ற நற்செய்தியைச் சொல்லவே, சாமான்களுடன் இறங்கினேம். 'லேடி இனர்' என்ற லாஞ்சில் மூன்று அறைகள் கிடைத்தன. நான் களைத்துப் போய் ஓர் அறையில் நிம்மதியாகப் படுத்துக் கொண்டேன்.

மார்ச்சு 4. நடு நிசியில் கலேவாவை அடைந்தோம். அன்றிரவெல்லாம் லாஞ்சில்தான் கழித்தோம்.

மார்ச்சு 5. பகலெல்லாம் லாஞ்சிலேயே தங்கி, மாலைப் பொழுது கலேவாவில் இறங்குவதாக ஏற்பாடு. எங்கள் துரதிருஷ்டம் ஆங்கிலோ இந்தியர்களை ஏந்தி ஒரு லாஞ்சு வந்தது. அவர்களுக்கு இடம் போதாதென்று, எங்களையெல்லாம் விரட்டிவிட்டு, எங்கள் லாஞ்சையும் அவர்களுக்கு ஒழித்து விட்டார்கள் அதிகாரிகள்.

கலேவாவிலிருந்து பஸ் ஸிலாவது, மாட்டு வண்டியிலாவதுதான் டாமுவுக்குப் போக வேண்டும். பஸ் இந்தியர்களுக்கு அகப்படாதென்று தெரிந்தது. அந்த ஊரார் 'சிகன்' என்ற இடம் வரைக்கும் படகேறிப் போகும்படி வழி சொன்னார்கள். எட்டுப் படகுகளை அமர்த்திக்கொண்டோம். ஆற்றங் கரையிலேயே ஏதோ சிறிது சமைத்து உண்டதும் நாங்கள் படகு ஏறினேம். இரண்டு பக்கமும் அடுக்கடுக்காகக் குன்றுகள். இவைகளுக்கிடையில் ஆறு வளைந்து வளைந்து பாம்பு ஊர்வது போல் விளையாடிக்கொண்டே போயிற்று. அந்த அழகில் என்னையே நான் மறந்தேன்.

மூன்று மைல் சிந்த்வின் நதியில் சென்றதும் வேறொரு மலையாற்றுக்குள் புகுந்தோம். அது ஆறல்ல. பெரிய அளவு அருவி; மலைப்படி வழியாக ஒயிலுடன் இறங்கிப் பெரிய ஆற்றுடன் கலந்தது.

இந்த இடத்தில் பெரிய தழைகளைப் படுகையில் ஊன்றி, படகுகளை மேலே தள்ள வேண்டியதாயிற்று. உலைநீர் கொதித்துப் பொங்குவது போல் ஆற்றுநீர் குபு குபுவென்று எழுந்தது. வானமும் பூமியும் தெரியாதபடி இருண்டன. திக்குத் திசை புரியாமல் கன மழை பொழியத் தொடங்கியது. ஆற்றுநீர் அலைபட்டுப் பாறைக் கரைமீது மோதியது. பயங்கரமான இந்த இயற்கைக் கூத்துக்கு நடுவில் எங்கள் படகுகள் சருகு போல் நடுங்கின. கொஞ்ச நேரந்தான். மேகங்கள் விலகி வெயில் வந்தது.

'சிவு இந்தன்' என்ற கிராமம் வந்தது. கலேவாவிலிருந்து ஏழே மைல்தான் இந்த ஊர். தட்டியினுல் ஆன ஒரு பங்களாவில் நாங்கள் இளைப்பாறினேம். சர்க்கார் விடுதி; அது வங்காளி ஒருவர் வசத்தில் இருந்ததால், அவருடைய தாட்சிண்ணியத்தின்மேல் உள்ளே புக அநுமதி கிடைத்தது.

மார்ச்சு 6. நன்ருக விடிவதற்குள்ளேயே சிகன் செல்வதற்காக எழுப்பிவிட்டார்கள். பத்து மணிக்குப் பிரயாணம். அந்த இடத்தைவிட்டு வரவே மனம் இல்லை எனக்கு. என் இஷ்டப்படி ஆற்றில் தளைந்சேன். கற்கள் குத்திட்ட ஆற்றில் பிரயாணிகளுடன் படகைச் செலுத்துவது கடின

மென்று நாங்கள் கொஞ்சம் தொலைவு நடந்து சென்றோம். சுற்றுப் புறமெங்கும் குறுங்காடு. முருக்க மரங்கள் நெருப்புப் போல் பூத்து விளங்கின. உரிய இடத்தில் படகில் ஏறினோம். மேடு ஏற ஏற ஆற்றுநீர் ஆழமாகிக் கொண்டே வந்தது. சிகனில் எங்கள் படகுப் பயணம் முடிவடைந்தது. இனிமேல் நூற்றிருபது மைல் ரஸ்தாவை மாட்டு வண்டியில் ஏறிக் கடக்க வேண்டிய கட்டம்.

அப்பா, என்ன கூட்டம்! என்ன கூட்டம்! இத்தனை பேருக்கும் எங்கிருந்து வண்டி கிடைக்கப் போகிறது? ஜனங்கள் வசதியாகத் தங்குவதற்குச் சர்க்கார் எழுப்பியிருந்தார்களே, அவை பந்தல்களா? பிணத்தின் மேல் போடும் சாவோலைதானா? நோயுற்றவர்கள், பிரசவ வேதனைப்படும் பெண்கள், வழி நடந்து அலுத்தவர்கள், கட்டக் கந்தல்கூட இராதவர் எல்லாரும் சேர்ந்த குழப்பம்; நாற்றம். நினைத்த இடத்தில் அவரவர் சமையல் செய்யத் தொடங்கினார்கள். சுற்றிலும் புகை.

அன்று இரவு சந்திரன் தோன்றவில்லை. ஒரே கருக்கல். நட்சத்திரங்களிலிருந்து வரும் வெளிச்சந்தான். இருண்ட பூதங்கள் போல் மலைகள் வெவ்வேறு விதமாகத் தோன்றின.

மாந்தலையிலிருந்து தொலைவில் தெரியும் மேமியோ மலைமேல் தீக்கொழுந்து படர்வதை முன்னே கவனித்திருக்கிறேன். ஆனால் இங்கே அருகிலேயே மலைமேல் மஞ்சம் புல் பற்றி, நெருப்பு மேலாடை போல் மலையைச்சுற்றி ஒளிர்ந்தது. பாதி ராத்திரி ஜனக் கடலின் அலை ஓசை அடங்கிவிட்டது. எல்லாரும் தூங்கியும், என் கண் மட்டும் இமையோடு இமை மூடவில்லை. நானும் களைத்துப் போய் ஓரிடத்தில் சுருட்டிப் படுத்தேன். பிரயாணிகள் எத்தனையோ சாமான்களைக் கொண்டு வந்திருந்தார்கள்; அவைகளைப் பார்த்து என் கணவர் என்னிடம் வந்து, "மானு, அந்த 'பாஞ்ஜோ' வாத்தியத்தை ஏனோ போட்டுவிட்டு வந்தோம்?" என்று வருத்தப்பட்டார்.

மார்ச்சு 7. எல்லாரும் மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டார்கள். அயர்ந்து தூங்கும் லீனாவையும் தீராவையும் வண்டியில் படுக்க விடும்போது அழத் தொடங்கினார்கள். அவர்களைச் சமாதானப் படுத்த நான் பக்கத்தில் உட்கார வேண்டியதாயிற்று. இல்லாவிட்டால் வண்டியோடு நடந்தே இருப்பேன். வண்டிகள் காட்டில் புகுந்து சென்றன. நட்சத்திரங்



கள் அகல் விளக்கு அவிவது போல் ஒவ்வொன்றாக மறைந்தன. இரவு கழிந்து பொழுது விடிந்தது. இன்னும் ஏழு மைல்தான்; ‘இண்டாயிங்கேல்’ என்ற ஊர் வந்து சேருவோம். செம்மண் பாதை. அதன் இரண்டு பக்கமும் எத்தனை பச்சிளங் கொடிகள் பூத்துக் குலுங்கின! கீழே உதிர்ந்த சிலவற்றைப் பொறுக்கி எடுத்துக் கொண்டேன். என்னுடைய பர்மா நினைவுகளைப் போல இவையும் வாடி வதங்கிப் போக வேண்டியவைதான்!

நடுப்பகல். ‘இம்பாவும்’ என்ற ஊர் எல்லையை அணுகினோம். இத்தனை நேரம் கண்ணில் படாமல் மறைந்து திரிந்த ஆற்றைக் கண்டேன். சரிவாகக் கரை இறங்கியது. அங்கே பர்மியச் சிறுவர்கள் சிலர் ஆற்றில் குளித்துக் கொம்மாளம் அடித்தார்கள். தொட்டாற்சிணுங்கி என்ற கொடி ஆற்று நீரில் பாசிபோல் படர்ந்திருந்தது. வண்டி நிழலில் உட்கார்ந்து நாங்கள் பகல் உணவை முடித்துக்கொண்டோம். சாயங்காலம் எங்கள் விடுதிக்கு எதிரே பிரயாணிகள் நிரம்பிய பஸ் ஒன்று வந்து நின்றது. கலேவாவிலிருந்து இந்தியர்களை டாமுக்கு ஏற்றிச் செல்லும் பஸ் அது. மாந்தலையில் எனக்குத் தெரிந்த வைத்தியருடைய மனைவி அதிலிருந்து இறங்கினாள். நாகரிக உடுப்பு அணிந்திருந்தாள். இந்தப் பிரயாணத் தொல்லைக்கிடையில் கூட அழகு, அலங்காரம் வேண்டியிருக்கிறதே என்று எண்ணினேன்.

சரியாக மாலை ஐந்து மணிக்குப் பிரயாணமானோம். புழுதி மிகுந்த ரஸ்தா. மூக்கிலும் வாயிலும் தூசு விழாமல் இருப்பதற்கு, துணித் திரை கட்டிக்கொண்டோம். கல் மீது இடறுவதால் வண்டியில் ஒரே குலுக்கம். இரவு ‘காஞ்சி’ என்ற இடத்தில் நின்றோம். புழுதி அப்பிய சோற்றை வாயில் போட்டுக்கொண்டு கிளம்பினோம். பெரிய காட்டில் நுழைந்தோம். பின்னிய மரக்கிளை இடுக்கிலிருந்து நிலா எட்டிப்பார்த்தது. எனக்குத் தூக்கம் வரவில்லை. மற்றவர்கள் சுவாரஸ்யமாகத் தூங்கி விழுவதைப் பார்த்துப் பொறாமை கொண்டேன். பொழுது புலர்ந்தது. எட்டு மணிக்கு வண்டியெல்லாம் ஒரு மைதானத்தில் வந்து தங்கின. இடத்தின் பெயர் ‘ஒயுக்கன்’. அங்கே இறங்கினோம். தொலைவில் ஓர் அருவி தள்ளி ஓடியது. அதில் இறங்கி ஒருவிதமாகக் குளித்துச் சற்றுக் களைப்பாறினோம்.

அந்த ஊர்ப் பர்மியர்கள் - பெண்களும் ஆண்களும்-கூடி அருவியில் துளைந்து கோலாகலம் செய்வதைப் பார்த்தேன். யுத்த பயம் இன்னும் அங்கே படரவில்லை.

திடுமென்று வண்டிக்காரர்களுக்குள் பெரிய குழப்பம் மூண்டது. வண்டிமாடு ஒன்று காணாமல்போய் விட்டதாம். பாவம், வண்டிக்காரன் தலையில் கை வைத்து அழுதான். எங்கள் வண்டி கிளம்பியது. மனிதர் நடமாட்டமிராத பாட்டை. எங்கள் எதிரே சில காலி வண்டிகள் வந்தன. நாங்கள் இப்படித் தனியாகச் செல்வதைப் பார்த்து, இரண்டொரு தினங்களுக்கு முன்னால்தான் அங்கே வழிப்பறி நடந்ததென்று அவர்கள் எச்சரிக்கை செய்தார்கள். ஆனால் சிறிது நேரத்துக்கெல்லாம் கூலிகள் சாரிசாரியாகப் போவதைப் பார்த்தேன். கொஞ்

சம் தைரியம் வந்தது. பாதையில் எத்தனையோ இடங்களில் பள்ளமும் மேடும். வண்டி ஓட்டுபவர்கள் பர்மியர்களானதால், பக்குவமாகச் செலுத்தினார்கள். நாங்கள் இரவு எட்டு மணிக்கு, 'ஸோயேஜி' என்ற வளமான கிராமத்தை அடைந்தோம். நாங்கள் தங்கிய மைதானத்துக்கு எதிரில் ஓர் அழகிய 'பகோடா'- புத்தர்கோயில் - தெரிந்தது. மனுவாவை விட்ட பிறகு, இந்த இடத்தில்தான் இப்படி ஒன்றைப் பார்த்தேன். அழகிய மரவேலைப்



பாடுகளுக்குப் பர்மியர் கோயில்கள் பெயர் போனவை. இதிலும் நுண்ணிய சிற்பங்கள் இருந்தன. அன்று இரவு அந்தக் கிராமத்திலேயே தங்க எண்ணும்போது, காலரா நோய் யாருக்கோ கண்டிருக்கும் செய்தி வந்ததும் கிளம்பிவிட்டோம். வழி நெடுக மரங்கள் குறைந்து வந்தன. எங்கள் வண்டி பரந்த வெளியில் புகுந்தது. நல்ல நிலா. தொலைவில் சற்று நேரத்துக்கெல்லாம் ஓர் ஓடைக்கருகில் வந்தோம். அதன் அருகிலேயே, 'பயாஎஸன்' என்ற ஊர். வண்டிகற்களின்மீது ஏறி இறங்கி, அந்த ஓடையைக் கடக்கவேண்டியிருந்தது. அப்போது என் சப்தநாடியும் அடித்துக்கொண்டன. எருதுகளுக்குப் 'புஸ்புஸ்' என்று மூச்சு வாங்கியது. இவ்வளவு கஷ்டத்துக்குப் பிறகு நிலவின் கண்கொள்ளாக் காட்சி, எங்கள் மனசுக்கு இன்பத்தைக் கொடுத்தது. நான் உலகத்தையே மறந்துவிட்டேன். பரமசாந்தி எங்கும் நிலவியது. வேலைக்காரன் நாயுடு என்னைக் கூப்பிடும்போதுதான் எனக்கு நினைவு வந்தது. மீண்டும் பிரயாணம். 'ஐயோ! எப்போது இது முடியும்?' என்று ஆகிவிட்டது எனக்கு.

மார்ச்சு 9. செவ்வந்திப் பூவைப் போல் கீழ்வானம் சிவந்தது. வண்டிகள் கிளம்பின. சக்கரங்களில் எண்ணெய் உலர்ந்துபோய், அவை பயங்கரமாகக் கீச்சிட்டன. ஒரு காட்டில் நுழைந்தோம். வரவர மரங்கள் அடர்ந்தன; வழி இருண்டது. எங்கும் சருகுக்குவியல்; கொம்புகளில் செம்மையிலிருந்து பசுமை வரைக்கும் எத்தனையோ நிற வேறுபாடுகள் இருந்தன. இளம் வெயில் பட்டு நடுநடுவே புல் தரைகள் சிரித்தன. பதினொரு மணிக்கு அந்தக் காட்டிலேயே எங்கள் வண்டி நின்றது. அப்புறம் பக்கத்திலிருந்த ஒரு கயத்தில் இறங்கி உடலை நனைத்தோம். முழங்கால் நீர்கூட இல்லை. அள்ளி அள்ளி மேலே விட்டுக்கொண்டோம். சற்று ஆழமான இடத்தில் இறங்கி நான் யாரும் பார்க்காத சமயம், தொப் தொப்பென்று காலை அடித்து நீந்தினேன். நீராவும் என்னோடு நீரில் இறங்கிவிட்டாள். நீரை அலப்பிக்கொண்டு அவளை

எடுக்க ஓடிவந்தேன். நாங்கள் பெண்கள், இங்கே இப்படி லயித்திருக்க, அந்தப் பக்கம் ஹெட் மாஸ்டர் சமையல் செய்ய இறங்கிவிட்டார். நாங்கள் திரும்பியதும் இந்த அசியாயத்தைக் கண்டு கோபித்துக்கொண்டோம். ஆனால் புருஷர்கள் கைச் சமையல் பெண்களுடைய திறமைக்குச் சற்றும் பின் வாங்கவில்லை. சாப்பாடு நன்றாகவே இருந்தது. பின்னும் இரண்டு கவளம் அதிகமாகவே சாப்பிட்டோம். பிறகு புருஷர்கள் சீட்டாட அமர்ந்தார்கள். பெண்கள் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். நான்மட்டும் காடெங்கும் இஷ்டம்போல் திரியலானேன். எங்கும் பசுமையின் மணம். பகல் வெயிலே அங்கே தெரியவில்லை. எங்கும் நிச்சப்தம். ஒரு பூச்சியின் சிறகொலிகூட இல்லை. மீண்டும் கயத்துக்கு அருகே வந்தேன். அங்கே வண்ணாத்திப் பூச்சிகளின் கூட்டந்தான் என்ன! ஆனால் ஒரு பறவைகூடத் தன் குரலைக் காட்டவில்லை. இது என்?

மாலை ஐந்து மணிக்கு நாடோடிகளான எங்கள் நிலையில்லாக் குடித்தனத்தைச் சுருட்டிக்கொண்டு கிளம்பினோம். என் கணவரும் ஹெட் மாஸ்டரும் என்னை மெல்லப் பாடும்படி தூண்டினார்கள். "அழகுதான். உயிருக்குத் தப்பி ஓடுகிறோம். பாட்டு வேறு வேண்டுமா?" என்றேன். அவர்கள் வற்புறுத்தவே ஒரு பாட்டுக்குமேல் முடியாதென்று, ரவீந்திரரின், "ஊரைத் தாண்டி அந்தச் செம்மண் பாதை என் மனத்தைக் கவர்கிறதே" என்ற பாட்டை எடுத்தேன். "போதும் மானு, நான் பாடுகிறேன்" என்று தம் கடுமையான சாரீரத்தை எடுத்து என் கணவர் ஒரு பாட்டைப் பாட ஆரம்பித்தார். உடனே ஹெட் மாஸ்டர், "ஐயோ, பயமாயிருக்கிறதே! தங்கள் இனிய குரலைக் கேட்டுப் புலி ஏதாவது தம் இனத்தவர் யாரோ அழைக்கிறாரென்று வந்துவிடப்போகிறதே! பத்திரம்! இது காடு, ஐயா" என்றார் தமாஷாக. இரவு பத்து மணிக்கு, 'காம்பாட்' என்ற ஒரு சிறிய ஊருக்கு வந்தோம். இரண்டு வாய் அள்ளிப் போட்டுக்கொண்டோம். உடம்பு எலும்பெல்லாம் நொறுங்கியேவிட்டன. வண்டி விளக்கு அணைந்தது. மைச்சிமிழ் இருட்டு. ஒருவர் முகம் மற்றவருக்குத் தெரியவில்லை.

மார்ச்சு 10. பொழுது இன்னும் சரியாகப் புலரவில்லை. மதுரமான 'ப்யூகில்' தொனி தூக்கத்தைக் கலைத்தது. யார் இவ்வளவு அழகாக ஸ்வரவரிசைகளைப் பழகுகிறார்களோ? மரங்கள் அடர்ந்த சுற்றத்தில் விடியற்காலையில் இத்தகைய 'ப்யூகில்' நாதத்தைக் கேட்க எனக்கு விநோதமாக இருந்தது. வழியில் வரவர மரங்களின் செறிவு குறைந்து போயிற்று. எங்களுடன் ஓர் ஆறு வந்துகொண்டே இருந்தது. எங்கே பார்த்தாலும் நீர்விசையால் இயங்கும் நெல்குற்றும் எற்றங்கள். பகல் பத்துமணி ஆயிற்று. இயற்கை வறண்டு விளங்கியது. ஆற்றுப் பக்கத்தில் பரந்த மணல்வெளி வெயிலில் பளபளத்தது. இரு கரைகளையும் இணைக்கும் மரப் பாலங்கள் நடு நடுவே வந்தன. ஓரிடத்தில் அற்புதமான பறவை ஒன்றைப் பார்த்தேன். 'டெயின்ஜென்' என்ற இடத்



தில் ஆற்றங்கரை யோரமாகவே, ஒரு பந்தல் நிழலில் இறங்கினோம். அப்புறம் குளித்தோம். ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் சென்றோம். ஓடும் நீரின் விசையால் ஓர் ஏற்றம் வேலை செய்துகொண் டிருந்தது. என்ன சுலபமான யுக்தி! நாங்கள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றிச் சிதைவுற்ற கல் கட்டிடங்கள். எந்தக் காலத்திலோ இங்கே பெரிய மாளிகைகளும் கோயில்களும் இருந்திருக்க வேண்டும். மாலை ஆறு மணிக்கு டீ அருந்தியதும் மறுபடியும் வண்டியில் ஏறிக் கொண்டோம். வழியெங்கும் வெளேர் என்று மணல் வெளி. ஆற்றில் பளிங்கு நீரில் செவ்வானம் பிரதிபலித்தது. நடுநடுவே இந்தியாவை நோக்கி விரையும் எளிய மக்கள். இவர்கள் புண்ணியம் செய்தவர்கள்; என்னைப்போல் வண்டியில் இடிபட்டுக்கொண்டு செல்லவில்லை. இரவு பதினொன்று இருக்கும். நாங்கள் 'வீன்லி' என்ற பெரிய கிராமத்தை அடைந்தோம். அங்கிருந்து யாரும் மூன்று நாள்வரை டாமுவுக்குப் போகக் கூடாதென்று அதிகாரிகள் உத்தரவிட்டிருக்கும் செய்தி வந்தது. டாமுவில் காலராவாம்.

மார்ச்சு 11. அலைந்து குலைந்து டாமுவுக்குச் செல்ல எங்களுக்கு அநுமதி கிடைத்தது. 'ஸான்லி'யில் கூடியிருந்த அகதிகள் எத்தனையோ பேர் எலும்பும் தோலுமாக இருந்தார்கள். அவர்களுக்குள் பல பேர் கர்ப்பஸ்திரீகள். எப்படி இவர்கள் மீதி வழியைக் கடக்கப் போகிறார்களோ என்று வேதனைப்பட்டேன். என் கண்ணில் பட்டதையெல்லாம் டயரியில் குறித்துக்கொள்ள எனக்குச் சற்றுச் சமயம் வாய்த்தது. ஆனால் என் பெண் குழந்தைகள் இருவரும் என்னை நிம்மதியாக எழுத விடவில்லை. மாலைப்பொழுது கிளம்பினோம். இரவு ஒன்பது மணிக்கு 'உயிடோக்' என்ற கிராமத்துக்கு வந்தோம். இங்கிருந்து இரவு மூன்று மணிக்குப் புறப்பட வேண்டும். அப்போதுதான் திட்டப்படி பொழுதோடே செல்லவேண்டிய இடத்தை அடைய முடியும். இருபது மைல் நீளமான காட்டைக் கடந்தோம். சுமார் ஒன்பது மணிக்குக் 'காந்தா' என்ற சர்க்கார் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். இங்கே சில கடைகள் இருந்தன. ஆனால் இங்கே விற்ற ரொட்டி, பிஸ்கோத்து எல்லாம் ஐரோப்பியர்களும் ஆங்கிலோ இந்தியர்களும் வாங்குவதற்குத்தான்! நிறையக் காசு கொடுத்தாலும் இந்தியர்களுக்குத் தர மறுத்துவிட்டார்கள். என் சின்னப் பெண் குங்கும் விதவிதமான பிஸ்கோத்துக்களைப் பார்த்துக் கையை நீட்டி அழ ஆரம்பித்துவிட்டாள். கடைசியில் பெட்டியிலுள்ள நமுத்த பிஸ்கோத்தை எடுத்துக் கொடுத்தேன். அவள் வாய் ஓய்ந்தது. என்ன பட்சபாதம்! எனக்கு ஆத்

திரம் பொங்கியது. ஆனால் யார்மேல் காட்டுவது?

ஆங்கிலோ இந்தியர்களுக்கு ராணுவத்துணையுடன் சகலவித மான சௌகரியங்களும் இருந்தன. அவர்களை இந்தியாவுக்கு அனுப்பு வதை முதல் காரியமாக அரசாங் கம் கவனித்தது. இரவு டாமு வந்து சேருவோம். 'இந்தப் பாழும் வண்டிப் பிரயாணம் அதோடு முடி வடைகிறது. பிறகு நாலே நாளில் பாரத பூமியின் எல்லையை மிதிப் போம்' என்று எங்களுக்குள் மகிழ்ச்சி.

டாமு வந்து சேரும்போது இரவு எட்டு மணி இருக்கும். அங் கிருந்து இந்தியர்களைக் கொஞ்சங் கொஞ்சமாகவே சர்க்கார் அனுப்பி வருகிறார்களென்ற செய்தி வந்தது. அந்த ஊர்ப்போஸ்ட் மாஸ்டர் ஒரு வங்காளி. அவருடைய தபால் ஆபீஸை எங்களுக்கு ஒழித்து விட்டார்.

சிந்துவினை விட்ட பிறகு, இந்த இடத்தில்தான் நான் நிம்மதியாக அறையில் படுத்தேன்.

மார்ச்சு 13. தபால் ஆபீஸ் அறையைப் பார்த்தால் குவியல் குவியலாக எத்தனை நாள் கடிதங்களோ வாரிப்போட் டிருந்தன. இவை விலாசதாரின் கைக்கு என்று போய்ச் சேருமோ யார் கண்டார்கள்! கால்நடைப் பாதையைக் குறித்துத் தகவல் தெரிந்துகொள்ள என் கணவரும் ஹெட்மாஸ்டரும் சென்றார்கள். அவர்கள் முகம் தொங்கித் திரும்பி னார்கள். மலை வழியாக டாமுவி லிருந்து இந்தியா செல்லும் வழியை அதற்கு முந்திய தினத்தில் இந்தியர்களுக்கு மூடிவிட்ட செய்தி தெரிந்தது. அந்த வழி ஐரோப்பி யர், ஆங்கிலோ இந்தியர் இவர்க ளுக்கு மட்டுந்தானும்! ஏனென்றால், இந்தியர்கள் அழுக்குப் பிடித்த ஆபாச ஜாதியாராம்; கூட வர லாயக்கற்றவர்களாம்!

டாமுவிலிருந்து பதினெட்டு மைல் தூரத்தில் மலைப்பாதை ஒன்று புதிதாக இந்தியர்களுக் கென்று திறந்திருக்கிறார்களாம்; அதன் வழியாகப் போக வேண்டு மாம். எங்களோடு வந்த ஹேமேன் ராய் திடுமென்று மூர்ச்சை ஆகி விட்டார். இன்னும் ஏழெட்டுத் தினங்கள் படுக்கையைவிட்டு அவர் நகரக் கூடாதென்று வைத்தியர் சொல்லிவிட்டார். ஆகவே, ராய் தமக்காகக் காத்திருக்க வேண்டிய தில்லையென்றார்.

புருஷர்கள் வண்டிக்கு ஏற்பாடு செய்யப் புறப்பட்டார்கள். ஹெட் மாஸ்டர் மைதா முதலிய அவசிய மான பொருள்களைச் சேகரிக்கக் கடைவீதிக்கு ஓடினார். நான்கு மாட்டு வண்டிகளை அமர்த்தினார் கள். இரண்டு எங்களுக்கு; இரண்டு கவாஸ்ஜி வீட்டா ருக்கு. வாடகை முன்னைவிட இரண்டு மடங்கு; வண்டிகளோ சின்னவை.

அன்று மாலை எங்களுக்கு உதவி புரிந்த போஸ்ட் மாஸ்டரிடம் நன்றி செலுத்திவிட்டு விடை பெற்றுக்கொண்டோம். இதுவரை எங்களுடன் வந்த ராய் குடும்பத் தாரை நாங்கள் பிரிய நேர்ந்தது. மறுபடியும் கடகடவென்று வண்டிப் பிரயாணம். ஓரிடத்தில் வண்டி பள்ளத்தாக்கை நோக்கி வேகமாக இறங்கியது. பாதையின் இரு பக்கமும் ஆழமான பள்ளம். இரவு மணி பதி னொன்று. 'கொண்டன்' என்ற ஊரில் இறங்கியதும் போன உயிர் திரும்பியது. இந்தப் பக்கத்துக்

காடுமலைகள் எல்லாம் உண்மையில் பயம் குடிகொண்ட இடங்களே. ஊரில் படுத்து உறங்க வசதியே இல்லை. ஆகவே, வண்டியிலேயே முடங்கிக்கொண்டோம்.

மார்ச்சு 14. கண்விழித்தபோது, பர்மியப் பெண் ஒருத்தியும் சில சிறு பிள்ளைகளும் எங்கள் வண்டி அருகே வந்து அதிசயமாகப் பார்த்துக்கொண்டு நின்றதைக் கவனித்தேன். நான் வடமேற்குப் பர்மா எல்லையில் பார்த்த கடைசிப் பர்மிய முகங்கள் இவை. லுங்கி அணிந்த பர்மியப் பெண்களுடன் நான் தண்ணீர் இருக்கும் இடத்

துக்குச் சென்றேன். வேலைகளைப் பரபரவென்று முடித்துக்கொண்டோம். போக வேண்டிய பதினெட்டு மைலில், எட்டு மைல் தீர்ந்துவிட்டது; இன்னும் பத்து மைல் வழியை வண்டியில் தொலைத்தாக வேண்டும். அப்பால் கால் நடைதான்.

ஒன்பது மைல் கடந்தாயிற்று. அதற்குமேல் வண்டி போவதற்கு வழி இல்லை. குறுக்கே பாறைகள் சிதறிக் கிடந்தன. எங்கள் எதிரே, "ஒரு கண்டம் தப்பித்துக்கொண்டீர்கள். இதோ இன்னும் ஒன்று" என்று சொல்வது போல் செங்குத்தான குன்றுகள் நின்றன. மாட்டு வண்டிக்கு அந்த இடத்திலேயே தண்டம் சமர்ப்பித்துவிட்டு, மீதி ஒரு மைல் வழி நடந்தே தீர்த்தோம். தலைக்கு மேல் வெயில் நெருப்பைக் கக்கியது. எத்தனையோ இடங்களில் கால் தடுக்கிக் காயம் ஏற்பட்டது. 'மின்தா' என்ற விடுதியில் 'ஸர்வம் ஜகந்நாத'மாக இருந்தது. குபேரன், கூலி, பட்டிக்காட்டான், நகரத்தான் என்ற வித்தியாசமில்லாமல் பிரயாணிகளின் நெருக்கம். வேறு நரகம் பார்க்க வேண்டியதில்லை. காலரா கழிச்சல் கண்டவர்களும் திக்கற்ற பிணங்களும், மனிதர் செய்யும் அழுக்கும் ஆபாசங்களும் சேர்ந்த சுற்றத்தில் நாங்கள் சமையல் செய்துகொண்டோம். சாப்பாடு ஆனதும், பாத்திரங்களைத் துலக்கப் போகும்போது நாங்கள் இருந்த இடத்துக்கு அருகிலே ஒரு நேபாளி மங்கையும் அவள் கணவனும் உணவு கொள்வதைக் கவனித்தோம்.

தூக்கிய முன்னுச்சியும், சப்பை மூக்கும், இடுங்கிய கண்ணும் கூடி விகாரமாயிருந்தாலும் நேபாளி மடந்தையின் உடம்பில்தான் என்ன ஆரோக்கியம்!

அலுத்துப் போய்ச் சற்றுக் கண்ணயரும் சமயம், என் கணவரைத் தேடிக்கொண்டு ஒரு கூலி வந்தான். யாரோ ஓர் அம்மாள் கூப்பிடுவதாகச் சொன்னான். விஷயம் என்னவென்று அறிய அவர் புறப்பட்டு போனார். மதராஸைச் சேர்ந்த ஒரு பெண்மணி, தன் சின்னஞ்சிறு குழந்தைகளுடன் ஒன்றியாக இந்தியாவுக்குப் போகும் செய்தியைக் கேட்டுப் பிரமித்துப் போனோம். அந்த வீர மாதைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு. இந்த மின்தா

முகாமில் பிரயாண அநுமதிச் சீட்டுக்காக ஜனங்கள் எங்களுக்கு முன்னதாகவே பத்து நாட்க ளாய்க் காத்திருக்கிறார்கள். எங்க ளுக்கு மட்டும் விரைவில் கிடைத்துவிடப் போகிறதா? இருந்தாலும் என் கணவர் எப் படியோ சிரமப்பட்டு அதைப் பெற்றுவிட்டார். அவர்தான் வாசாலகம் மிகுந்த மனுஷ ராயிற்றே? இதற்குள் காலராவில் ஏழெட்டுப் பேர் மாண்டார்கள்.

மிஸ்டர் கவாஸ்ஜீக்குக் கடைசி யாகப் பிரயாண அநுமதிச் சீட்டுக் கிடைத்துவிட்டது. அன்று இர வெல்லாம் எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. பக்கத்திலேயே யாரோ வாந்தி எடுக்கும் சத்தம்; நோயாளிகளின் விகாரக் கூச்சல்.

மார்ச்சு 15. விடியப் போகிறதா என்று காத்துக்கொண்டிருந் தோம். எவ்வளவோ பேரமாடிய பிறகு மணிபுரி ஆட்கள் எட்டுப் பேரை எங்களைச் சுமப்பதற்காக அமர்த்திக்கொண்டோம். ஒவ் வொருவனுக்கும் 45 ரூபாய் கூலி. அந்த எட்டுப் பேரில் நாலு பேர் டோலி தூக்கிகள். பச்சை மூங்கிலால் அமைத்த டோலியைப் பார்க்கும்போது வங்காளத்தில் பிணங்களைத் தூக்கிச் செல்லும் பாடை என் கவனத்துக்கு வந்தது. 'கீங் கீங்' என்று சத்தம் செய்யும் போது அந்த டோலி எந்தக் கணம் முறிந்துவிடுமோ என்ற பயம் ஒரு பக்கம். இதில் ஏறி, இந்தச் செங் குத்தான மலைகளைக் கடப்பதெப் படி? பிராணன் போவதாயிருந் தால்கூட இதில் ஏறிக்கொள்ள முடியாதென்று என் கணவரிடம் சொல்லிவிட்டேன். "ஏறித்தான் ஆகவேண்டும், மானு! பிடிவாதம் பிடிக்காதே" என்று அவர் சொல்லி யும் நான் கேட்கவில்லை. "இரண்டு மலைகளைத் தாண்டினால் தானாகவே ஏறிக்கொள்வாள். ஏன் புறப்படும் போதே சச்சரவு?" என்றார் ஹெட் மாஸ்டர். வழியில் அந்த மதராஸி மாதரசியைக் கண்டேன். நெற்றி யில் பளிச்சென்று குங்குமப் பொட்டு; தலை நிறையக் கூந்தல்; நல்ல சிவப்பு மேனி. மூன்று குழந்தைகள் அவளுடன் நடந்தே வந்தன. இடுப்பில் ஓர் இளங் குழந்தை. என்னையும் மீறி அவ ளிடத்தில் ஒரு பக்தி படர்ந்தது. ஹெட்மாஸ்டரிடம், "பெண்கள், வெறும் சேலை உடுத்திய மூட்டை கள், அபலைகள் என்றெல்லாம் அடுக்கினீர்களே! இவளைப் பாருங் கள்; சந்தர்ப்பம் வாய்த்தால் அமோக சக்தியைக் காட்டுவார்கள் பெண்கள்" என்றேன் கர்வமாக. அவரும், "சரி; உண்மைதான்" என்று ஒப்புக்கொண்டார்.

பிரயாண அநுமதிச் சீட்டுகளை யெல்லாம் பரிசோதித்தாயிற்று. மலையில் ஏற ஆரம்பித்தோம். ஐந்து நிமிஷத்துக்கு ஒரு தரம் இளைப்பாறிக்கொண்டே மெது வாக நடந்தேன். "போகப் போக நீர் கிடைப்பதே அரிதாகி விடும். இப்போதே சேர்த்துக்கொள்ளுங் கள்" என்று கூலிகள் எச்சரிக்கை செய்தார்கள்.

மிஸ்டர் கவாஸ்ஜீயைச் சுமந்து செல்லும் டோலிக்காரன் ஒருவன் சட்டென்று பாதி வழியில் இறந்து விட்டான். எங்கள் பெண் லீனுவை டோலியிருந்து இறக்கி ஒரு கூலி யின் தோளில் ஏற்றினோம். கிழக் கவாஸ்ஜீ எங்கள் டோலியில் ஏறிக் கொண்டார். வழியில் ஓரிடத்தில் ஒரு நேபாளி வாலிபன் கீழே விழுந்து கிடந்தான். அவனுடைய மனைவியும் மூன்று குழந்தைகளும்



தலையில் கை வைத்துக்கொண்டு பக்கத்திலேயே உட்கார்ந்திருந் தார்கள். அவன் உயிர் போய் விட்டது. ஆனல் அந்த நேபாளிப் பெண்மட்டும் அவன் களைப்பினல் தூங்குகிறுனென்று எண்ணிக் கொண்டிருந்தாள், பாவம்! துயர் நிரம்பிய அந்தப் பெண்ணின் முகமே வழி முழுதும் என் நினை வில் வந்துகொண் டிருந்தது. ஊன்றிக்கொண்டு நடப்பதற்கு ஒவ்வொருவருக்கும் மூங்கிற் கழியைக் கொடுத்தார்கள். எங் களைப் போல் எத்தனையோ பேர்; ஒவ்வொருவர் முகத்திலும் சிரமம். 'உம்' என்ற வேதனைச் சத்தம். ஒரு மலை ஏறி இறங்கியாயிற்று.

இரண்டாவது மலை இன்னும் செங்குத்து. இந்தத் தடவை கட் டாயம் நான் மூச்சுத் திணறி இறந்துவிடுவேனென்று என் கண வர் நினைத்தார். "இதைவிடப் பர்மாவிலேயே இருந்து ஜப்பானி யர் கையில் மாண்டு போயிருக்க லாம்" என்ருர்.

மலைக்குப் பயந்து திரும்பலா மென்ருலோ பர்மாவுக்கும் செல்ல முடியாது. விதிப்படி நடக்கட்டு மென்று கொஞ்சம் நிதானமாக நெடுங் குன்றில் ஏறினேம். ஏறும் போது உடலில் ரத்த அழுத்தம் அதிகமாகி என் நெஞ்சை யாரோ அழுத்துவது போல் வேதனை ஏற் பட்டது. என் கணவர் என்மேல் ஒரு கண்ணைச் செலுத்திக் கொண்டே முன்னல் சென்ருர். இந்த மலையைக் கடப்பது 'பெரும் பயணம்' போலவே இருந்தது. எங்கள் இரண்டு பக்கமும் மூங்கிற் காடு.

வழியில் ஓரிடத்தில் தீனக் குரல் ஒன்று கேட்டது. "தாகம், தண்ணீர்" என்று ஒரு கூலி கீழே தலை சாய்ந்தவண்ணம் கூவிக் கொண்டிருந்தான். அவனுக்கு என்ன நோய் என்று சொல்லவும் வேண்டுமா? மரண தாகந்தான். இதேபோல் எத்தனையோ பிணங் கள் மலை வழியெங்கும் பயங்கர மாக விழுந்து கிடந்தன. மாலைப் பொழுது; வானளாவிய மற் ருெரு மலையின் அடிவாரத்துக்கு வந்தோம். அந்த மலை மேலும் ஏறி யாகவேண்டு மென்றதும் எனக்கு வெலவெலத்துவிட்டது. நாங்கள் சிறிது நேரங்கூடக் களைப்பாற வில்லை. கூலியாட்கள், "கிளம் புங்கள்" என்ருர்கள். மாலை மணி ஏழு இருக்கும்; மலைமீது ஒரு சுனையருகே சற்றுத் தங்க அනු மதித்தார்கள். மலை யென்ருல், வாய் வழியும் சுனைகளும், துள் ளிக் குதிக்கும் அருவிகளும் இருக்கு மென்பது என் பாவனை. ஆனல் இதுவரையில் கடந்த பதினெட்டு மைல் மலைப் பாதையில் தண்ணீர் என்ற நாமதேயமே இல்லை. வழி நெடுக நீர் வசதி உண்டென்று சர்க்கார் செய்த பொய்ப் பிரசா ரத்தை நம்பி இந்தப் பாதையில் இறந்தவர்களுக்குக் கணக்கு வழக் கில்லை. இந்தச் சுனையில் இறங்கி ஒரு தொட்டி நீர் கொண்டு வருவ தற்குள் நன்ருக இருட்டி விட்

டது. இங்கே டாக்டரின் மனைவியைக் கண்டேன். அந்த அம்மாள் சிரித்துக்கொண்டு, "நான் பயந்தேன். பரவாயில்லை. இவ்வளவு தூரம் வந்துவிட்டீர்களே!" என்று எனக்கு உற்சாக மூட்டினுள்.

பகலெல்லாம் நெருப்பு மாதிரி இருக்கும். பனிக்கட்டி மாதிரி சில்லிட்ட பாறைமீது அகப்பட்ட போர்வையில் உடலை மடக்கிக்கொண்டு குளிரினுல் உடல் நடுங்க ஒரு விதமாக இரவைக் கழித்தோம். கீழே கட்டாந்தரையும் மேலே ஆகாயமுமாக நாடோடி வாழ்க்கையை நன்ருக அநுபவித்தோம். நினைத்த இடத்தில் சிலர் சுள்ளிகளைக் குவித்து நெகிடி கொளுத்திக் குளிர் காய்ந்தார்கள். மலையெங்கும் செடிகள் உலர்ந்திருந்தன. ஒரு பொறி பற்ற வேண்டியதுதான். நாங்கள் நிச்சயம் தீயில் பொசுங்கிப் போயிருப்போம். இரவு ஆக ஆகப் புகைபோல் மலைப் பனி சூழ்ந்துகொள்ளும். கண்ணீருடன் நோக்கும் விழிகளைப் போல் பனித்திரையிலிருந்து நட்சத்திரங்கள் மின்னும்.

கண்ணை மூடும்பொதெல்லாம் வழியில் பார்த்த பிணங்களின் முகமும், இளம் மனைவி மக்களை நடுவழியில் நிராதரவாக விட்டுவிட்டு மாண்ட அந்த நேபாளியின் உருவமும் என் முன் வந்து நிற்கும். அப்புறம் அந்த மதராஸிப் பெண்மணியின் நினைவு வந்ததும் சற்றுத் தைரியம் கொள்வேன்.

மார்ச்சு 16. பொழுது விடிந்தது. வயிற்றுக்கு உணவு இராமல் மீண்டும் நடக்கலானேம். மலைச் சுவரைப் பிடித்துக்கொண்டே தலை கிறுகிறுக்க நான் ஊர்ந்தேன். அப்படியும் என்னுல் முடியவில்லை. ஓரிடத்தில் விழுந்துவிட்டேன். என் கணவர் ஓடி வந்து எனக்கு வெண்ணெயும் பிஸ்கோத்தும் கொடுத்து வெகு நேரம் ஓரிடத்தில் உட்கார வைத்தார். சுமார் பத்தரை மணிக்கு நாகர்களின் விடுதியண்டை வந்தோம். அந்த நாகஜாதியார் இருக்குமிடத்துக்கு யாரும் போகக்கூடாதென்று சர்க்கார் எச்சரித்திருந்தார்கள். ஓரிடத்திலாவது குளிக்க வசதி இல்லை. பாறைக் குழிகளில் நெருப்பை மூட்டி டீ தயாரித்து அருந்தியதும் சற்று உணர்வு பிறந்தது. கூலிகளுக்குச் சேரவேண்டிய பாதித் தொகையை இந்த இடத்திலேயே கொடுத்துவிட்டோம்.

ஒரு மணி காலம் இளைப்பாறினேமோ என்னவோ, இதற்குள் ஒரு கலவரக் கூச்சல் கேட்டது. திபுதிபுவென்று மணிபுரிக் கூலிகள் இரண்டு பேர் எங்களை நோக்கி ஓடி வந்தார்கள். என்னவோ ஏதோ என்று திரும்பிப் பார்த்தோம் - எங்கள் டோலி ஒன்று முறிந்துவிட்டதென்று சொன்னர்கள். நல்ல காலம், கிழக் கவாஸ்ஜீ பிழைத்தார். மயிரிழை தவறியிருந்தால் அவர் பாதாளத்துக்குப் போயிருக்க வேண்டியதுதான். என் பெண் தீராவுக்கு முழங்காலில் நல்ல அடி. அவளை நான் அணைத்துக் கொண்டேன். லீனு பத்திரமாக ஒரு கூலியாளின் தோள்மீதே இருந்தாள்.

வழியெங்கும் அற்புதமான இயற்கைக் காட்சிகள், "போகாதே! என்னைப் பார்" என்று கைநீட்டி என்னை அழைப்பது போல் இருந்தன. "ஏனே காமிராவை நீங்கள்

எடுத்து வரவில்லை?" என்று என் கணவரிடம் சொன்னேன். "கவலைப் படாதே, மானு. ஜப்பானியர் ஆட்சி வந்தால் இந்த மலைப்பிரதேசத்தில் நல்ல ரஸ்தாக்கள் விழும். பஸ் சர்விஸ்கூட விடுவார்கள். அப்போது வேண்டிய போட்டோ பிடித்தால் போகிறது" என்றார் அவர்.

இதற்குள் நாகர்களின் விடுதிக்கு அருகில் மணிபுரிக் கூலிகளுக்கும் நாக இளைஞன் ஒருவனுக்கும் பலத்த சண்டை மூண்டு விட்டது. எந்த மாதிரிதான்

நின்றான், அந்த நாகன்! செதுக்கி எடுத்தது போன்ற உடலில், கொடுமை தெறிக்கும் விழிகள். விநோதமான ஆயுதம் ஒன்று அவன் கையிலிருந்தது. அத்தனை பேரையும் விரட்ட ஒருவனாக நின்று சவால் கூறினான். அவன் பின்னாலே ஒரு நாக யுவதி நின்றாள். மலையின் இயற்கை அழகே அவளுடைய உருக்கொண்டு என் முன் நிற்கிறதோ என்று எண்ணினேன். அவள் கையில் கூரிய வேல். சலனமின்றிச் சண்டையைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். எந்த நிமிஷம் அந்த வேல் யார் மார்பில் பாயுமோ என்ற திகில் எனக்கு. நல்ல காலம், சண்டை ஒரு விதமாகத் தீர்ந்தது. கடைசியில் பின் வாங்கியவர் மணிபுரி ஆட்களே. வழியில் நாகர்களின் வீடுகள் அருகிலேயே இருக்கும். அழகான திண்ணைகள்; உயரமான வாசற்படியும் உயர்ந்த கூரையும் உடைய வீடுகள். சுத்தமாக வைத்துக்கொண்டிருந்தார்கள். வெளிச்சுவரில் பலவித ஆயுதங்களை மாட்டி இருந்தார்கள். வீட்டுக்கு முன்னால் மேடை இருந்தது. பண்டிகை பருவங்களில் இதன் மேல் நடனமாடுவார்கள். அப்போது எத்தனையோ வாத்தியங்கள் வாசிப்பார்களாம். பட்டணத்து வீடுகளுக்கு அவர்களுடைய விடுதிகள் குறைந்து விடவில்லை. "நானும் அந்த நாகமங்கை போல் இந்த மலையில் யதேச்சையாக உலாவ மாட்டேனா?" என்று எண்ணினேன்.

'வீடா' என்ற இடத்தை அடைந்தோம். அங்கே சர்க்கார் ஓர் ஆஸ்பத்திரி வைத்திருந்தார்கள். டாக்டரும் ஒரு வங்காளி. என்னுடைய பாதங்கள் வெடித்துக் கிடந்தன. உடம்பெல்லாம் மரணவலி. படுக்கையில் சாய்ந்தது தான் தெரியும். தூங்கிவிட்டேன்.

மார்ச்சு 17. தல்லியமான விடியற்காலை. விடி வெள்ளி ஜொலித்தது. சர்க்கார் விடுதியில் குளிப்பதற்கு நல்ல வசதி செய்திருந்தார்கள். இன்னும் ஆபத்து முழுவதும் நீங்கினபாடில்லை. சற்றுக் கால் தவறினால், பாதாளத்தில் உருண்டு விழவேண்டியதுதான். திடுமென்று வானத்தில் மேகம் சூழ்ந்து மழை பெய்தது. அதனால் வழியெல்லாம் சறுக்கியது. இறங்கும்போது சறுக்கினால்

ஆபத்தாயிற்றே! ஓரிடத்தில் என் கணவர் கால் வழுக்கி விழுந்தார். சமயோசித புத்தியுள்ளவரான படியால், ஒரு கல்லைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு எழுந்துவிட்டார். பகவான் இதோடு விட்டாரே என்று பெருமூச்சு விட்டேன்.

பதினாறு மைல் எப்படியோ தாண்டி 'நாகடாக்' என்ற இடத்துக்கு வந்தோம். எனக்கு இடுப்பே போய்விட்டது. தொப்பென்று தரையில் விழுந்துவிட்டேன். அந்த ஊரில், உருளைக் கிழங்கும் வெங்காயமும் நிறையக் கிடைத்தன. நாயுடு வாய்க்கு உணவாக இரண்டு தினுசு சமைத்துப் போட்டான். மின்தாவை விட்ட பிறகு என் தலையில் சீப்புப்படவே இல்லை. சிக்கு விடுத்து, எண்ணெய் தடவிப் பின்னிக் கூந்தலைக் கொண்டையாகப் போட்டுக்கொண்டேன். இதற்குள் ஒரு கூலி ஆள் ஆயாசத்தால் இறந்துவிட்டான். அவன் செத்து இன்னும் சில மணிநேரம் கூட ஆகவில்லை. பிணம் பக்கத்திலேயே கிடக்கிறது. மற்றக் கூலியாட்களுக்குள் அவனுக்குப் பதில் யார் வருவதென்பதைக் குறித்துச் சச்சரவு ஏற்பட்டது.

இன்னும் ஐந்து மைல்தான். அப்புறம் எங்கள் கால்நடைப் பயணம் முடிவடைகிறது. கடவுள் கிருபையால் இதுவரை விபரீதம் ஒன்றும் ஏற்படவில்லை; மீதி வழியும் பத்திரமாகக் கொண்டு சேர்ப்பாரென்றே நம்பினேன்.

'ஹாஇடாகோ' என்ற இடத்துக்கு வந்தோம். மாந்தலைக்குப் பின் இங்கேதான் எங்கள் ஆசை தீரச் சாப்பிட்டோம். அப்புறம் 'வான்ஜின்' என்ற இடத்தை அடைந்தோம். அகதிகளை ஏற்றிச் செல்லப் பஸ்கள் நின்றன. நாங்கள் உடனேயே அங்கே இருந்து புறப்பட்டு விடவில்லை. கவாஸ்ஜீ குடும்பத்தினர் காலதாமதம் செய்யாமல் எங்களிடம் விடை பெற்றுக்கொண்டு பஸ் ஏறிவிட்டார்கள். ஹெட் மாஸ்டர் ஒருவர்மட்டும் எங்கள் கூட்டத்தில் எஞ்சி நின்றார். வழியில் எங்களுடன் சேர்ந்து வந்தவர்களை விட்டுப் பிரிவது மனசுக்குக் கஷ்டமாகவே இருந்தது. நாங்கள் வங்காளி வியாபாரி ஒருவர் வீட்டில் விருந்தினராகத் தங்கினோம். அவருடைய அஸ்ஸாமிய மனைவி பாஷை புரியாமற் போனாலும் எங்களுக்கு அமோக உபசரணைகள் புரிந்தாள். இந்த நண்பருடைய தயையால் ஒரு பிரைவேட் பஸ்ஸில் ஏறி இம்பாலுக்குப் பயணமானோம்.

அகதிகள், இம்பால் நகருக்குள் வரக்கூடாதென்று தடை உத்தரவு. ஆனால் சமஸ்தான அதிகாரியிடம் அநுமதி பெற்று என் கணவர் எங்களை ஊருக்குள் அழைத்து வந்தார். 'அப்பாடா! இந்தியாவுக்கு வந்து சேர்ந்துவிட்டோம்' என்று ஒரு பெருமூச்சு விட்டேன். மணிபுர் அரசர் மாளிகையிலுள்ள கோவிந்தரின் கோயில் அபூர்வ அழகு வாய்ந்தது. அங்கே ஸ்வாமி தரிசனம் செய்த பிறகே மனசுக்குப் பூரண நிம்மதி ஏற்பட்டது.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

மத நூலின் புனிதம்

அக்பர் சக்கரவர்த்திக்குத் தம் தாயிடம் மிகுந்த பக்தி. அவள் என்ன சொன்னாலும் தட்டாமல் செய்வார். ஆக்ரா நகருக்கும் லாகூர் நகருக்கும் இடையே ஒரு நாள் செல்லும் போது ஓர் ஆற்றைக் கடக்கவேண்டியிருந்தது. அப்போது தாமும் தம்கீழ் வேலை பார்த்த சிறந்த உத்தியோகஸ்தர்களுமாக, தம் தாயின் பல்லக்கை அக்பர் தோளிலே சுமந்தார்.

இப்படிப்பட்ட அக்பர் ஒரே ஒரு முறை தம் அருமைத் தாயின் சொல்லைத் தட்டிவிட்டார். எது விஷயமாக?

போர்சுகீஸியர் ஒரு சமயம் ஒரு முஸ்லிம் கப்பலைப் பிடித்துவிட்டார்கள். கப்பலில் அகப்பட்ட திருக் குர்ஆன் பிரதியை விஷமத்தனமாய் ஒரு நாயின் கழுத்தில் கட்டி, ஓர் முஜ் நகரத் தெருக்களில் விட்டு அடித்துத் துரத்தினார்கள். இதற்குப் பழிக்குப் பழியாக, கிறிஸ்தவர்களின் வேதப் புத்தகமான பைபிள் பிரதி ஒன்றை ஒரு கழுதையின் கழுத்தில் கட்டி யடிக்கவேண்டும் என்று அக்பரின் தாய் சொன்னாள்.

"அக்கிரமத்துக்கு அக்கிரமத்தால் பதில் சொல்லுவது ஓர் அரசனுக்கு அழகல்ல. எந்த மதத்தைத் தூஷித்தாலும் அது கடவுள் தூஷணையே யாகும். நிரபராதியான ஒரு புஸ்தகத்தின்மீது நான் வஞ்சம் தீர்க்க மாட்டேன்" என்று சொல்லி, தாயின் கட்டளையை அக்பர் மறுத்துவிட்டார்.

June '53 Regd. No. M. 4975

மஞ்சரி

விஜய - ஆனி

ஊரும் உலகமும் 1
மர்மக் குன்று .. .. ஃப்ரீ இந்தியா 3
நல்ல சாட்சி 5
க்விஸ் 8
பின்புற எஞ்சின் கார் 9
பாபு ராவ் பதில் சொல்லுகிறார் .. .. ஃபில்மிண்டியா 11
பரீட்சித்து வரலாறு 12
ரமணர்: வாழ்வும் வாக்கும் 16
விநோபா யாத்திரை .. .. டைம் 19
மூக்கை மாற்றலாம் 28
கார்ட்டூன் கதம்பம் (படம்) 32
இந்தியச் சிற்பம் .. .. .. பம்பாய்க் கிரானிக்கிள் வீக்லி 34
பழைய கம்யூனிஸம் .. .. ரா. ஸ்ரீ. தேசிகன் 37
மகிமை வாய்ந்த புவனேசுவரம் .. .. ப்ரபாவி 41
ராணியின் மகுடாபிஷேகம் .. பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் 44
ஜோஸ்யம் பலித்தது! .. .. .. அஸ்ட்ரலாஜிகல் மகஸீன் 53
பல சரக்கு 56
யுத்த அபாயம் .. .. .. அமெரிக்கன் ரிப்போர்ட்டர் 58
நலம் தரும் பொன் .. .. பிரஜா மத 61
டாடா தொழிற்சாலை .. .. காமன்வெல்த் டுடே 64
லாமாவின் மாடு (சிறு கதை) .. .. பால் ரோச் 67
பர்மா அகதி (புத்தகச் சுருக்கம்) .. மானவீ முகோபாத்யாய 73
மத நூலின் புனிதம் .. .. 3-ஆம் அட்டை